2024 ජූනි 24
2024 யூன் 24
24 June 2024

NAOSL

වාර්තාවේ අංකය : පීඑස්ඊ/බී/එෆ්එස්එල්ආර්ඊපී/2023/01
அறிக்கை இல. : பீஎஸ்ஈ/பீ/எப்எஸ்எல்ஆர்ஈபீ/2023/01
Report No : PSE/B/FSLREP/2023/01

# ආසියානු සංවර්ධන බැංකුවේ ණය ආධාර මත සිදුකරනු ලැබූ ආහාර සුරක්ෂිතතාව හා ජීවනෝපාය ප්‍රතිසාධන හදිසි ආධාර ව්‍යාපෘතිය පිළිබඳ විශේෂ විගණන වාර්තාව

# ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் உதவியின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீட்பு அவசர நிதிஉதவித் திட்டம் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை.

# Special Audit Report on the Food Security and Livelihood Recovery Emergency Assistance Project carried out on the Loan Assistance of the AsianDevelopment Bank



ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

# உள்ளடக்கம்


| தொடர் இலக்கம் | | விபரம் | பக்க இலக்கம் |
|---|---|---|---|
| 01 | | நிறைவேற்று பொழிப்பு | 01 |
| 02 | | அறிமுகம் | 05 |
| | 2.1 | பின்புலம் | 05 |
| | 2.2 | கணக்காய்வு நோக்கம் மற்றும் அளவுகோல்கள் | 09 |
| | 2.3 | கணக்காய்வு விடயப்பரப்பு மற்றும் விடயப்பரப்பின் எல்லை. | 13 |
| | 2.4 | கணக்காய்வின் நுழைவு | 14 |
| | 2.5 | கணக்காய்வின் திட்ட முறைமை | 14 |
| | 2.6 | கணக்காய்விற்கான அதிகார பலம். | 14 |
| | 2.7 | தரவுகளைப் பயன்படுத்துவதற்கான எல்லை. | 15 |
| 03 | | விரிவான கணக்காய்வு அவதானிப்புக்கள் | 16 |
| | 3.1 | சமுர்த்தி படிகளை வழங்குதல். | 16 |
| | 3.2 | முதியோர்களுக்கான நிதி படிகளை வழங்குதல். | 24 |
| | 3.3 | ஊனமுற்ற நபர்களுக்கான நிதி படிகளை வழங்குதல். | 34 |
| | 3.4 | சிறுநீரக நோயாளர்களுக்கான நிதி உதவியினை வழங்குதல். | 37 |
| | 3.5 | கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான நிதி உதவிகளை வழங்குதல். | 40 |
| | 3.6 | உழவர்களுக்காக நிதி உதவி வழங்குதல். | 51 |
| | 3.7 | நலன்கள் சமுர்த்தி வங்கிகள் மூலம் செலுத்துதலின் செயற்திறனான தன்மை. | 71 |
| | 3.8 | நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் மற்றும் இலக்குகள் செயற்திட்ட நோக்கங்களை சீராக்கல் | 76 |
| | 3.9 | செயற்திட்டத்தை ஒழுங்குபடுத்தும் பணிகள் | 76 |
| 04 | | பரிந்துரைகள் | 82 |
| | | இணைப்புக்கள் | 83 |

## 01. நிறைவேற்று பொழிப்பு

2022 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டு அளவில் இருந்து இலங்கையில் உணவுப் பாதுகாப்பின்மை உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரங்கள் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து காணப்பட்டதுடன் அதன் மூலம் வறுமை மற்றும் ஆபத்திற்குட்பட்ட நபர்களின் உணவு மற்றும் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் வகையில் அரசாங்கத்தால் ஆசிய அபிவிருத்தி வங்கிலிருந்து அவசர நிதி உதவி கோரப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கிடைத்த டொலர் 200 மில்லியன் கடன் தொகைக்கு உரிய உடன்படிக்கை 2022 செப்டெம்பர் 09 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் இந்த கணக்காய்வின் நோக்கமாக அவ்வாறு கிடைத்த கடன் பணத்தை பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை மீள் கட்டமைத்தல் அவசர உதவி செயற்திட்டத்தின் செயலாற்றலை மதிப்பிட வேண்டி இருந்தது. 2022 ஆம் ஆண்டின் செப்டெம்பர் முதல் நவம்பர் வரை கடன் நிதி உதவியின் கீழ் சமுர்த்தி நலனாளிகள், குறைந்த வருமானம் பெறும் வயது வந்தோர், ஊனமுற்ற நபர்கள் மற்றும் சிறுநீரக நோயளர்கள் 2023 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் படிகள் கிடைத்த கர்ப்பிணித்தாய்மார்கள் மற்றும் 2022 பெரும்போகத்தில் நெற்பயிர்ச் செய்கை செய்த விவசாயிகளுக்காகவும் செலுத்தப்பட்ட படிகள் தொடர்பாக இதன் போது கவனம் செலுத்தப் பட்டுள்ளது. அவ்வாறே கணக்காய்விற்காக குருநாகல், அம்பாந்தோட்டை, மொனராகலை, அநுராதபுரம் மற்றும் மட்டக்களப்பு போன்ற மாவட்டங்கள் தெரிவாக தெரிவு செய்யப்பட்டிருந்தன.

அரசாங்கத்தின் சகல நலன்புரி நலன்களையும் செலுத்துதல் 2002 இன் 24 ஆம் இலக்க நலன்புரி நலன் சட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் சமுர்த்தி திணைக்களத்தால் பிரதேச செயலக மட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்ட குழுவினால் சமுர்த்தி நலனாளிகள் தெரிவு செய்யப்பட்டிருந்தமை, 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் நீக்குவதற்கு பொருத்தமானது என இனங்காணப்பட்ட நலனாளி குடும்பங்கள் 449,979 இனை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமை, 1995 ஆம் ஆண்டு முதல் 28 வருட காலங்களில் வலுவூட்டப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 62,943 மாத்திரமாக இருந்தமை மற்றும் அது 2022 செப்டெம்பர் மாதம் வரையில் இருந்து நலனாளிகளில் 3.6 சதவீதம் மாத்திமாக இருந்தமை போன்ற விடயங்கள் சமுர்த்தி நலனாளிகள் தொடர்பாக அவதானிக்கப்பட்டது.

இந்த செயற்திட்டத்தின் கீழ் சமுரத்தி நலனாளிகளுக்கு செலுத்துவதற்காக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் 1,090 சமுர்த்தி வங்கிகளுக்கு ரூபா 35,184.4 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே கணக்காய்வு தெரிவிற்கு உட்படுத்தப்பட்ட மாவட்டங்களில் 2022 திசெம்பர் 28 இல் உள்ளவாறு 643,641 சமுர்த்தி நலனாளிகளுக்கு ரூபா 10,320 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. தெரிவிற்கு உட்படுத்தப்பட்ட மாவட்டங்களில் சமுர்த்தி நலனாளிகளில் மாவட்டங்களில் வறுமைக் குறிகாட்டிகளின் பிரகாரம் பகுப்பாய்வு செய்த போது கவனத்திற் கொள்ளக்கூடிய முரண்கள் காணப்பட்டமை, செலுத்துவதற்காக பணம் செலவு வைக்கும் போது தேசிய திட்டமிடல் திணைக்களத்திலிருந்து சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கும் மற்றும் சமுர்த்தி வங்யிலிருந்து சமுர்த்தி நலனாளிகளின் கணக்குகளுக்கு பணம் செலவு வைப்பதில் தாமதம் காணப்பட்டமை, நிதி ஏற்பாடு இன்மையின் காரணமாக தகைமை பெற்ற போதிலும் படி கிடைக்காத 244 நபர்கள் இருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

செயற்திட்ட நிர்வாக கைநூலின் பிரகாரம் 3,486,449 நலனாளிகள் 1090 சமுர்த்தி வங்கிகளுக்கு படிகளைப் பெற்றுக்கொள்வதற்கு அனுப்பப்பட்டிருந்தன. படிகளைச் செலுத்துவதற்காக வங்கியில் கணனி மென்பொருள் ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றின் செயற்படு நிலைக்குத் தேவையான முடியுல் பூர்த்திசெய்யப்படாமை, 66 வங்களின் கணனி முறைமைகள் மூலம் கணக்கீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளாமை, 199 வங்கிகளின் கணனி முறைமை ஊடாக பாஸ் புத்தகம் அச்சிடப்படாமை, கணனி முறைமையில் உள்ள வங்கிகளிலும் கையின் முறைமையின் கீழ் (Manual) கொடுக்கல் வாங்கல்கள் பேரேடுகளில் பதியப்பட்டதன் காரணமாகவும் நலனாளிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் அதிக வசதியீனத்திற்கு உட்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

சமுர்த்தி வங்களில் வெற்றிடமான பதவிகளில் பணிகளை நிறைவேற்றுவதற்காக ஏனைய பதவி அணியினரை ஈடுபடுத்துதல், ஒரு உத்தியோகத்தருக்கு இருக்கின்ற சமுர்த்தி நலனாளிகளின் எண்ணிக்கை 300 இற்கும் 700 இற்கும் இடையில் இருந்தமை, அந்த நலனாளிக்கு மேலதிகமாக முதியோர், சிறுநீரக, ஊனமுற்ற, கர்ப்பிணிதாய்மார் மற்றும் பால் கொடுக்கும் தாய்மார்களுக்காக கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டியிருந்தமை, ஆகக் குறைந்த பதவியணியினர் இருந்தமையின் காரணமாக வங்கியின் கடன் வழங்குதல் மற்றும் அபிவிருத்தி செயற்திட்டங்களை அமுல்படுத்துதல் தாமதமடைந்தமை, சமுர்த்தி கள உத்தி யோகத்தர்கள் போதியளவில் இல்லாமை, தெரிவுக்கு உட்படுத்தப்பட்ட அநேகமான வங்களின் அலுவலகங்களில் இடவசதிகள் போதியளவில் இல்லாமை, சமுர்த்தி கள உத்தியோகத் தர்களின் தகவல்களின் பிரகாரம் கணனி, காகிதாதிகள், எரிபொருள் மற்றும் போக்குவரத்து வசதிகள் போதியளவில் இல்லாமை, தொடர்ச்சியாக இணைதள மற்றம் மின்சார வசதிகள் காணப்படாமையினால் வங்கி நடவடிக்கைகளை செயற்திறனாக மேற்கொள்ள முடியாதிருந்தமை, புதிய வங்கிக் கணக்குகளை ஆரம்பிக்கும் போது பாஸ் புத்தகம் காணப்படாமை, பாஸ் புத்தகத்தில் கொடுக்கல் வாங்கல்களை அச்சிடுவதற்காக தேவையான உபகரணங்கள் காணப்படாமை, பாதுகாப்பு வசதிகள், சுகாதார மற்றும் குடிநீர் வசதிகள், படி பெறுநர்களுக்காக ஓய்வு எடுக்கும் வசதிகள் காணப்படாமை, உரிய நிறுவனத்தால் தேவையான கோவைகள் மற்றும் ஆவணங்கள் உரிய பிரகாரம் பேணிச் செல்லப்படாமை, பொருத்தமற்ற மானியம் பெறுபவர்களை இனங்காணல் உரிய திட்டமுறைமை காணப்படாமை என்பன அவதானிக்கப்பட்டது.

குறைந்த வருமானம் பெறுபவர்களில் வயது வந்த நபர்களுக்காக மூன்று மாதகாலப் பகுதியில் செலுத்துதல் தொடர்பாக கவனத்திற்கொள்ளும் போது 70 வயதிற்கு மேற்பட்ட 490,000 நபர்களுக்கு அண்மித்த எண்ணிக்கைக்கு ரூபா 5,474.7 மில்லியன் மற்றும் 100 வயதை பூர்த்தி செய்த 374 நபர்களுக்கும் 387 நபர்களுக்கும் இடையிலான எண்ணிக்கைக்கு ரூபா 7.1 மில்லியன் தொகை செலுத்தப்பட்டமை, உள்ளபடியாக படிகள் பெறும் நலனாளிகளின் எண்ணிக்கை அதற்காக பொருத்தமானதா என இனங்காணப்பட்ட நலனாளிகளின் எண்ணிக்கை யினை விட குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தமை, மேலதிக படிகள் மதிப்பீடு இரட்டை ரீதியில் கணிப்பிடப்பட்டமை மற்றும் வங்கிக் கணக்கு திறக்காத நலனாளிகள் காணப்பட்டமை, எதிர்பார்க்கப்பட்ட பணம் போதியளவினை விட குறைவாக செலுத்தப்பட்டிருந்தமையின் காரணமாக பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட சகல வங்கிகளும் அரைவாசி செலுத்தும் காலம் இறுதியில் கவனத்திற்கொள்ளக்கூடிய பணத்தின் அளவு நிறுத்திவைக்கப்பட்டமை போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டது. மேலும் 3995 தபால் அலுவலகங்கள் மூலம் செலுத்தப்பட்ட முதியோர் படிகள் 1090 சமுர்த்தி வங்கிகள் மூலம் செலுத்தப்பட்டதன் காரணமாக வங்கியில் இடநெருக்கடி ஏற்பட்டமை, அநேகமான முதியோர்கள் வசதியீனத்திற்கு உட்பட்டமை, ஒவ்வொரு 15 மாதங்கள் வரை முதியோர் படி செலுத்துதல் ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் ஒரு மாத கால தாமதத்தின் பின்னர் படி செலுத்தப்பட்டமை, சமுர்த்தி வங்கிக்கு அனுப்பப்பட்ட பணம் வங்கியினால் பல்வேறு அடிப்படையின் கீழ் கணக்கு வைக்கப்பட்டமை இடம்பெற்றமை போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

ஊனமுற்ற நபர்கள் மற்றும் சிறுநீரக நோயளர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முறையே ரூபா 1,385.3 மில்லியன் மற்றும் ரூபா 724.4 மில்லியன் தொகை படியாக செலுத்தப்பட்டிருந்தது. படி செலுத்துதல் சமுர்த்தி வங்கி ஊடாக மாத்திரம் செலுத்தியதால் நலனாளிகளில் கணிசமான அளவில் புதிய வங்கி கணக்கினை திறக்கும் போது வசதியீனத்திற்கு உட்பட்டமை, சரியான ஆலோசனை கால ரீதியில் தொடர்பு கொள்தலில் நலிவான நிலைமை காணப்பட்டமை, வங்கியில் காணப்பட்ட பௌதீக மற்றும் மனிதவள பற்றாக்குறை, வங்கியின் மூலம் அல்லது பிரதேச செயலகம் மூலம் படிகளை பெற்ற நலனாளிகள் சமுர்த்தி வங்கிகளுக்கு அனுப்பப்பட்டமையினால் வங்கியில் இடநெருக்கடி ஏற்பட்டமை, பொறுப்புவாய்ந்த நிறுவனத்தால் சரியாகவும் காலரீதியிலும் தகவல்கள் பேணிச் செல்லப்படாமையால் படிகளை செலுத்துவதற்குத் தேவையான தகவல்கள் பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் அவ்வப்போது கோருவதற்கு ஏற்பட்டமையினால் நிகழ்ச்சித் திட்டத்தை செயற் திறனாக மேற்கொள்வதற்கு தாக்கம் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் தொடர்பாக வழங்கப்பட்ட ரூபா 1,533.2 மில்லியன் படி வழங்கப்பட்டிருந்தது. நிறுவனத்திற்கிடையே சரியான தகவல்களை பரிமாறும் திட்ட முறைமையொன்று காணப்படாமையால் சில சமுர்த்தி வங்கிகளுக்கு மிகையாக மற்றும் பற்றாக்குறையான பணம் கிடைத்திருந்தமை, போதியளவில் பணம் கிடைக்காமையினால் தகைமை பெற்ற 392 விண்ணப்பதாரர்களுக்காக செலுத்துவதற்கு முடியாதிருந்தமை. உத்தியோகத்தர்களின் தவறுகள் மற்றும் சமுர்த்தி வங்கி மாற்றப்பட்டதன் அடிப்படையில் நிதிஏற்பாடு போதியளவில் கிடைக்காமையால் நலன்கள் கிடைக்காத 299 கர்ப்பிணித்தாய்மார்கள் காணப்பட்டமை, சமுர்த்தி வங்கிகளுக்கு அனுப்பப்பட்ட பணங்களில் 43 சதவீதம் வங்கிக் கணக்கில் வைக்கப்பட்டதன் பின்னர் அந்த பணம் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டமை, கர்ப்பிணி மற்றும் பால்கொடுக்கும் தாய்மார்களின் நலனாளிகளாக தெரிவு செய்வதற்காக செயற்திறனான திட்ட முறைமையொன்றை இனங்காணாமை மற்றும் பணம் செலுத்துவதற்கு கட்டளை வழங்குவதற்கு 06 மாதத்திற்கு அண்மித்த காலம் எடுத்திருந்தமை என்பன கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

2022/2023 பெரும்போகத்தில் நெல் பயிர்ச் செய்த விவசாயிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஹெக்டேயருக்கு ரூபா 20,000 ஆன பிரகாரம் ஆகக் கூடியது 2 ஹெக்டேயருக்கு வரையறுக்கும் வகையில் 600,000 விவசாயிகளுக்கு இரண்டு தவணைகளில் நிலத்தினை தயாரிப்பதற்கு முன்னர் மற்றும் நாற்றுக்களை நட்டுதலின் பின்னர் படி செலுத்த வேண்டியிருந்த போதும் ஹெக்டேயருக்கு ரூபா 10,000 அளவான பணம் படியாக செலுத்தப்பட்டிருந்தது. படி செலுத்துகின்ற சந்தர்ப்பம் வரையிலும் பொரும்போகத்தில் நிலத்தை தயாரித்தல் மற்றும் நாற்றுக்களை நட்டுதல் பூர்த்திசெய்யப்படாமை, நலன்கள் எதிர்பார்த்த காலப்பகுதியில் வழங்குவதற்காக குறித்துரைத்த திட்டமுறையொன்று தயாரிக்கப்படாமை, மானியம் கிடைத்த மற்றும் கிடைக்காத விவசாயிகளின் எண்ணிக்கை தொடர்பாக பிரதேச மற்றும் கமநல நிருவாக ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் குறித்துரைத்த ரீதியில் அறிந்திருக்காமை, நலன்களை செலுத்துதல் மற்றும் தயாரித்தல் நடவடிக்கைகளுக்காக 07 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்ததுடன் 2023 யூலை 31 ஆம் திகதி வரையில் 1,039,961 விவசாயிகளுக்காக ரூபா 7,424,062,928 செலுத்தப்பட்டிருந்த போதிலும் 31,008 விவசாயிகளின் வங்கிக் கணக்குகள் செயலிழந்தமையின் காரணமாக ரூபா 181,109,892 படி செலுத்துவதற்கு முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

மேலும் Geo Goviya தரவு முறைமையில் விவசாயிகளில் ஆண்/பெண் தன்மை தொடர்பாக தகவல்கள் உள்ளடக்கப்படாமை, மட்டக்களப்பு மாவட்டம் தவிர ஏனைய எந்தவொரு மாவட்டத்திலும் நலனாளிகளில் பெண்களை பிரதிநிதித்துவப்படுத்துதல் 45 சதவீதமாக காணப்படாமை, Web Sever களில் உள்ளடங்கிய பௌதீக வசதிகள் போதியளவில் காணப்படாமையின் காரணமாக Geo Goviya முறைமை மூலம் விவசாயிகளுக்கு செயற்திறனான சேவையினை வழங்குவதற்கு முடியாதிருந்தமை, தரவு முறைமை ஊடாக கமநல சேவை நிலையங்களில் பிரதேச உத்தியோகத்தர்களுக்கு தரவுகள் உள்ளடக்குவதற்கு, தேவையான சரிசெய்தல்களை மேற்கொள்வதற்கு மற்றும் சரியான தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு போதியளவான காலம் கிடைக்காமை, கமநல சேவை நிலையங்களில் உரிய படிகள் கிடைத்த மற்றம் கிடைக்காத விவசாயிகளின் எண்ணிக்கையை தனித்தனியாக இனங்காண்பதற்கு முடியாதிருந்தமை என்ற நிலைமைகள் அவதானிக்கப்பட்டன.

வெளியீட்டு மதிப்பீட்டின் போது (Output) சமுர்த்தி, முதியோர், சிறு நீரக நோயாளர்கள் மற்றும் நெற்பயிர்ச்செய்கை விவசாயிகளுக்காக செலுத்துதல். உயர்ந்த வெளியீட்டு மட்டம் காணப்பட்டமை, ஊனமுற்ற நபர்கள் மற்றும் கர்ப்பிணித்தாய்மார் மற்றும் பால்கொடுக்கும் தாய்மார்களுக்கான வெளியீடுகள் எதிர்பார்த்த மட்டத்தில் வெற்றியளிக்காமை, நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுடன் செயற்திட்ட நோக்கங்களை சீராக்கி இலங்கையில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களின் செயல் முன்னேற்றத்தை பரீட்சிக்கும் போது நிலைபேறான அபிவிருத்தி சபையின் தரவின் நோக்கம் 01 இன் கீழ் சர்வதேச வறுமைக் கோட்டின் கீழ் காணப்படுகின்ற சனத்தொகை, தேசிய வறுமை கோட்டின் கீழ் இருக்கின்ற சனத்தொகை, சமூகப் பாதுகாப்பு நலன்களை மேவுகை செய்யும் சனத்தொகை, வறுமையை குறைப்பதற்கான அபிவிருத்தி உதவிகளை பெறுதல் மற்றும்

நோக்கம் 02 இன் கீழ் உணவுப் பாதுகாப்பு இன்றிய சனத்தொகையின் எண்ணிக்கை தொடர்பாக நாளதுவரையான தரவுகள் மற்றும் நோக்கம் 12 இன் கீழ் நிலைபேறான நுகர்வு மற்றும் உற்பத்திகளுக்கான கொள்கை வழங்கல் மற்றும் அந்த நபர்களுக்கு உணவு ஒவ்வொரு மற்றும் பின்தொடர் நடவடிக்கைகள் ஆய்வு நடவடிக்கைகள் காணப்படாமை என்பன அவதானிக்கப்பட்டது.


2002 இன் 24 ஆம் இலக்க நலன்புரி சட்டத்தின் பிரகாரம் 2022 ஒக்டோபர் மாதம் விநியோகிக்கப்பட்ட வர்த்தமானியின் பிரகாரம் சகல நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களும் நலன்புரி நலன் ஆணையாளரின் அதிகாரத்தின் பிரகாரம் அமுல்படுத்துதல், சமுர்த்தி வங்கி கணனி முறைமை (CRM System) நவீனமயப்படுத்துவதன் மூலம் செயற்திறனான சேவையினை வழங்குதல், அவ்வாறே அதற்காக தேவையான மனித மற்றும் பௌதீக வளங்களை உரிய நிறுவனங்களுக்கு வழங்குதல், அறிக்கையில் கலந்துரையாடப்பட்ட இலக்கிடப்பட்ட குழுக்களுக்காக நலன்களை வழங்கும் போது விசேஷட நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடல் மற்றும் அமுல்படுத்துதல், Geo Goviya கணனி முறைமையின் அளவிடல்பட்ட காணி நில அளவினை உள்ளடக்குதல் மற்றும் விவசாயிகள் தகவல்களின் பிரகாரம் தேவையான திருத்தங்களை விரைவாக மேற்கொள்ளக்கூடிய வகையில் கணனி முறைமையினை விருத்தி செய்தல், கொவிதிரிய வங்கிக் கணக்குகளை செயற்திறனாக பேணிச்செல்வதற்கு அரசாங்க வங்கிகளுடன் இணைக்கப்பாடை ஏற்படுத்ததல், அவசர நலன்களை செலுத்தும் போது எழுத்து மூல சுற்றறிக்கை ஆலோசனையில் புதிய தொழில்நுபட்ப முறைமை மூலம் உரிய உத்தியோகத்தர்களுக்கு காலரீதியில் அனுப்புதல் மற்றும் உரிய நடவடிக்கைகளை எடுத்தல், அரசாங்கத்தின் சகல கணனி முறைகளிலும் ஆண், பெண் தரவுகளை தனித்தனியாக பெற்றுக் கொள்ளும் முறைமையை தயாரித்தல், நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு தற்போது காணப்படுகின்ற குறைபாடுகள் (Gaps) இனங்கண்டு அதற்காக உரிய பொறுப்புவாய்ந்த நிறுவனத்திற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். அரசாங்கத்தின் நலன்புரிகளை செலுத்துதல் தொடர்பாக கொள்கை ரீதியான தீர்மானங்களை கால ரீதியாக எடுத்தல் ஊடாக நோக்கங்களை அடைந்து கொள்வதற்குரிய அரசாங்க நிறுவனங்களை தொடர்புபடுத்துவதன் மூலம் விரைவாக கவனத்திற்குட்படுகின்ற நபர்களைப் பாதுகாத்தல் மேற்கூறப்பட்ட அவதானிப்பிற்கான பரிந்துரையாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 02. அறிமுகம்

### 2.1 பின்புலம்

#### 2.1.1 உணவுப் பாதுகாப்பின்மை மற்றும் வாழ்வாதாரம் அச்சுறுத்தலுக்கு உட்படல்

2022 ஆம் ஆண்டின் நடு அரைப்பகுதியில் இருந்து இலங்கையில் எரிபொருள் மற்றும் அடிப்படை உணவுப் பொருட்களின் விலைகள் உயர்வடைந்து சென்றமை, விவசாய ரீதியான உற்பத்திகள் கவனத்திற்கொள்ளக்கூடிய மட்டத்தில் குறைவடைந்ததன் மூலம் சனத்தொகையில் ஒரு பகுதிக்கு உணவிற்காக செலவிடக்கூடிய விலையை ஈடுகொடுக்க முடியாத நிலைமைக்கு உட்பட்டிருந்தனர். அவ்வாறே நாட்டில் உணவுப் பற்றாக்குறை ஏற்பட கூடிய வகைக்கு அரசாங்கத்தால் எதிர்வு கூறல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் வாழ்வாதாரத்தை இழக்கும் ஆபத்தும் தோன்றியிருந்தது. இந்த நிலைமையில் நாடு முழுவதும் 25 மாவட்டங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட 5.7 மில்லியன் நபர்களுக்கு மனிதாபிமான உதவிகளின் தேவையாக இருந்தமை இனங்காணப்பட்டிருந்தது. இதனிடையே மனிதாபிமான தேவை மற்றும் முன்னுரிமை திட்டங்கின் மூலம் 1.7 மில்லியன் சனத்தொகையை அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் அதற்காக டொலர் 47.2 மில்லியன் அளவிலான தொகை ஒன்று மனிதாபிமான நிதியத்திற்காக தேவையாக இருந்தமை இனங்காணப்பட்டிருந்தது. இலங்கையில் வறுமைக்கோட்டினை பரீட்சிக்கும் போது அது 2020 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை கீழே குறிப்பிடப்படுகின்ற பிரகாரம் ஒழுங்குமுறையாக அதிகரித்து சென்றிருந்தது.




வறுமைக்கோடு

மூலம்: செயற்திட்ட கைநூல்

(செயற்திட்ட இல. ***56175-001*** மற்றும் கடன் உடன்படிக்கை ***4205-SRI)***

#### 2.1.2 உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை மீள் அடையும் அவசர உதவி செயற் திட்டம்

2022 நடு அரைப்பகுதியில் இருந்து இலங்கையில் உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரங்கள் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து காணப்பட்டதுடன் அதன் பின்னரான மாதங்களில் நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. அதனால் நாட்டில் காணப்பட்ட உணவுப் பாதுகாப்பின்மை தொடர்பான நெருக்கடிக்கு தீர்வாக இலங்கை அரசாங்கத்தால் 2022 மே மாதத்தின் போது வறுமை மற்றும் ஆபத்திற்கு உட்பட்ட நபர்களுக்கான உணவிற்காக நுழைவினை உறுதிப்படுத்துதல் மற்றும் அவர்களின் வாழ்வாதாரத்தைப்

பாதுகாப்பதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து (ADB) அவசர நிதி உதவி கோரப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து அதன் சாதாரண மூலதன வளங்களில் டொலர் 200.00 மில்லியன் கடன் மற்றும் செயற்திட்டத்திற்காக சமுர்த்தி மற்றும் ஈடுகொடுக்கும் ஆசிய மற்றும் தெற்காசிய வலயங்களுக்காக Japan Fund for Prosperous, Resilient Asia and the Pacific இற்கான ஜப்பான் நிதியத்தில் டொலர் 3 மில்லியன் நிதி ஏற்பாட்டை பெற்றுக்கொள்வதற்கு 2022 ஆகஸ்ட் 30 ஆம் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. கடன் மற்றும் மானிய உடன்படிக்கை 2022 செப்டெம்பர் 09 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கை 2022 செப்டெம்பர் 16 ஆம் திகதி முதல் ஆமுல் படுகின்றது. வறுமை மற்றும் ஆபத்திற்கு உட்படக்கூடிய, விஷேடமாக பெண்கள் மற்றும் சிறுவர்களின் உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்தல் இந்த செயற்திட்டத்தின் நோக்கமாகும். செயற்திட்டம் கீழே காண்பிக்கப்பட்டுள்ள பூர்த்தி வெளியீடு களில் மூன்றினை உள்ளடக்கியுள்ளது.

(i) வறுமை மற்றும் ஆபத்திற்கு உட்படக்கூடிய நபர்களுக்காக நேரடியாக நிதி உதவியினை தற்காலிகமாக உயர்த்துதல் மற்றும் விரிவுபடுத்துதல்.

(ii) வறுமை மற்றும் ஆபத்திற்கு உட்படக் கூடியவர்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளுக்காக விருத்தி செய்யப்பட்ட உதவிகளை வழங்குதல்.

(iii) சமூகப் பாதுகாப்பு முறைமையினை அபிவிருத்தி செய்தல்.

வெளியீடு 1: வறுமை மற்றும் பாதிக்கப்படக்கூடிய நபர்களுக்காக நேரடி நிதி உதவியினை தற்காலிகமாக அதிகரித்து விரிவுபடுத்துதல்.

சமுர்த்தி நலனாளிகளின் நிகழ்ச்சித்திட்டங்கள் சிரேஷ்ட பிரஜைகள் படி, ஊனமுற்ற நிதி உதவி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கான உதவியினை உள்ளடக்கி சமூக நிதி உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் விரைவாக உயர்ந்து சென்ற உணவு விலைகளுக்கு ஈடு செய்வதற்காக ஆகக்குறைந்தது 03 மாதங்களுக்காக வறுமை மற்றும் ஆபத்திற்கு உட்டபட்டவர்களுக்காக நேரடியாக நிதி உதவியினை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

| மானிய தொகுதி | காணப்படுகின்ற மானியம் (ரூபா) | மேலதிக மானியம் (ரூபா) | காணப்படுகின்ற பயனாளிகளின் எண்ணிக்கை (மில்லியன்) | காத்திருத்தல் பட்டியலிடப்பட்ட குடும்பங்கள். (மில்லியன்) |
|---|---|---|---|---|
| 04 அங்கத்தவர்கள் அல்லது அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்களின் எண்ணிக்கையில் காணப்படுகின்ற குடும்பங்கள். | 4,500 | 3,000 | 1.76 (குடும்பங்கள்) | 0.73 (குடும்பங்கள்) |
| மூன்று அங்கத்தவர்களுடன் உள்ள குடும்பங்கள் | 3,200 | 3,100 | | |
| 3 அங்கத்தவர்களுக்கு மேற்பட்ட குடும்பங்கள் | 1,900 | 3,100 | | |
| சிரேஷ்ட பிரஜைகள் படி | | | | |
| - 70 வயதுக்கு மேல் | 2,000 | 3,000 | 0.42 | 0.24 |
| - 100 வயதுக்கு மேல் | 5,000 | 2,500 | | |

| | | | | |
|---|---|---|---|---|
| ஊனமுற்றோர் நிதி உதவி | 5,000 | 2,500 | 0.11 | 0.07 |
| சிறுநீரக நோயாளர்களுக்கான நிதி உதவி | 5,000 | 2,500 | | |
| கர்ப்பிணித் தாய்மார்கள். | 5,000 | - | 0.3 | |

* சமுர்த்தி, சிரேஷ்ட பிரஜைகள், ஊனமுற்ற, சிறுநீரக நோயாளர்களுக்கான காத்திருப்பு படி – 5,000

**வெளியீடு 2:** வறுமை மற்றும் பாதிக்கப்படக்கூடிய நபர்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்யும் செயற்பாடுகளுக்காக அபிவிருத்தி செய்யப்பட்ட உதவியினை வழங்குதல் வாழ்வாதாரத்தை நல்ல நிலைக்கு கொண்டு வருதல் மற்றும் முடியுமான மற்றும் உணவுப் பாதுகாப்பை உயர்த்துவதற்காக வறுமை மற்றும் ஆபத்திற்கு உட்படக்கூடிய விஷேடமாக விவசாயிகள் மற்றும் குறைந்த வறுமானம் பெறும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்யும் செயற்பாடுகளுக்கான நிதி உதவி, பயிற்சி, தொழில்நுட்பம் மற்றும் அறிவுசார்ந்த உதவிகள், ஆலோசனை மற்றும் பயிற்சி வழங்குவதன் திருத்தங்கள் ஊடாக செயற்திட்டத்தின் மூலம் அபிவிருத்தி செய்யப்பட்ட உதவி வழங்கப்பட்டுள்ளது.

| **மானிய தொகுதி** | **மானியம் (ரூபா)** | மதிப்பீடு செய்யப்பட்ட பயனாளிகள் |
|---|---|---|
| ஆகக்கூடியது 02 ஹெக்டெயர் | ஒரு ஹெக்டெயருக்கு 20,000 (02 தவணைகள்) | 600,000 |
| குறைந்த வருமானம் குடும்பங்கள் | 100,000 | குடும்பங்கள் 7,500 |

மூலம் (செயற்திட்ட நிர்வாக கைநூல்)

*(*செயற்திட்ட இல. ***56175-001*** மற்றும் கடன் உடன்படிக்கை ***4205-SRI)***

**வெளியீடு 3: சமூகப் பாதுகாப்பு முறைமையினை விருத்தி செய்தல்.**

செயற்திட்டம் அதில் எதிர்பார்க்கப்பட்ட நலனாளிகளை அடையும் வகையில் உறுதிப்படுத்துதல் மற்றும் சமூகப் பாதுகாப்பு முறைமைகளில் எதிர்கால அவசர தேவைகளுக்காக ஈடுகொடுக்கும் இயலுமையை கட்டியெழுப்புதல், செயற்திட்டத்தின் மூலம் பணம் வழங்கப்படுகின்ற நலனாளிகளைத் தெரிவு செய்தல், ஆய்வு செய்தல், மேற்பார்வை மற்றும் தொடர்பாடல் மற்றும் சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கமநல அபிவிருத்தி திணைக்களம் (DAD) இற்காக காணப்படுகின்ற தகவல்கள் தொழில்நுட்ப முறைமை மற்றும் டிஜிட்டல் உபகரணங்களை நவீனமயப்படுத்துவதன் மூலம் பரிமாற்றல் செயற்பாடுகள் மற்றும் இயந்திரங்களின் செயற்திறன் மற்றும் வெளிப்படைத் தன்மையினை விருத்தி செய்தல் இந்த வெளியீட்டின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறே நவீனமயப்படுத்தப்பட்ட தகவல் தொழில்நுட்ப முறமை மற்றும் டிஜிட்டல் உபகரணங்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்தவதற்காக தேசிய, பிரதேச மற்றும் துறைசார் மட்டத்தில் அலுவலகங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் இயலளவு கட்டியெழுப்பப்படுகின்றது.

### 2.1.3 செயற்திட்டத்தை அமுல்படுத்துதல் மற்றும் முகாமைத்துவ ஏற்பாடுகள்


செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராண்மை முகவர் நிறுவனமாக நிதி அமைச்சு ஆக இருந்ததுடன் செயற்திட்டத்தின் அமுலாக்கும் முகவராக மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் வருகின்ற சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம், விவசாய அமைச்சின் கீழ் கமநல அபிவிருத்தி திணைக்களம் ஆகும்.

தொடர்புடை நிறுவனங்களுடன் தொடர்பினை ஏற்படுத்துவதற்காக உலக வங்கியினால் செயற்படுத்தப்பட்ட எதிர்பாராத அவசர கூறுக்காக நிதி அமைச்சினால் 2022 மே மாதத்தின்

போது தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் தொடர்புபடுத்தும் அலககொன்று ஸ்தாபிக்கப் பட்டிருந்தது. தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் மேற்பார்வையின் கீழ் அந்த இணைப்பு அலகு செயற்திட்டத்தை அமுல்படுத்துதல், தொடர்பு படுத்துதல் மற்றும் முகாமைத்துவத்திற்காக ஒட்டுமொத்த வழிகாட்டல்களை வழங்குதல் மற்றும் உதவியினை வழங்குவதற்காக செயற்திட்ட இணைப்பு பிரிவாகவும் செயற்படுகின்றது.

உரிய அரசாங்கத்தின் சட்டங்கள் பிரமாணங்களைப் போன்று ஆசிய அபிவிருத்தி வங்கியின் கொள்கைகள் மற்றும் வழிகாட்டியைப் பின்பற்றி மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் திணைக்களம் மற்றும் நிறுவனத்தினால் அமுல்படுத்தப்பட வேண்டிய செயற்திட்ட செயற்பாடுகளின் நாளாந்த முகாமைத்துவதற்காக பொறுப்புவாய்ந்த செயற்திட்டத்தை அமுல்படுத்தும் அலககொன்று (PIU) மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே விவசாய அமைச்சின் கீழ் திணைக்களத்தால் அமுல்படுத்துவதற்கு குறித்துரைத்த செயற்திட்ட செயற்பாடுகளின் நாளாந்த முகாமைத்துவத்திற்காக பொறுப்பு வாய்ந்த செயற்திட்ட அமுலாக்கல் அலகு (PIU) விவசாய அமைச்சினால் ஸ்தாபிக்கப் பட்டுள்ளது.

செயற்திட்டத்தை அமுல்படுத்தும் ஒட்டுமொத்த செயற்பாட்டு நடவடிக்கைகள் பின்வருமாறு.




DSD - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் NSEC - முன் சிறுவர் அபிவிருத்தி தேசிய செயலகம்.

NSE - தேசிய முதியோர் செயலகம், NSPD - ஊனமுற்ற நபர்களுக்கான செயலகம்

DPCS - நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களம், WB - மகளிர் பணியகம்,

DAD - கமநல அபிவிருத்தி திணைக்களம், DOA - விவசாயத் திணைக்களம்

மூலம்: செயற்திட்ட நிர்வாக கைநூல்.

செயற்திட்டத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள கிரயம் டொலர் 203.36 மில்லியன் ஆகும். செயத்திட்ட முதலீட்டு செலவினங்களில் அவசர நிதி உதவி, தரவு சேகரித்தல், மேற்பார்வை மற்றும் மதிப்பீடு, பயிற்சி, தகவல் தொழில்நுட்ப உற்பத்தி மற்றும் சேவை,

தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள், ஆலோசனை சேவை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் உள்ளடங்கியுள்ளது. பௌதீக மற்றும் விலை தளம்பல்களின் கூட்டுமொத்தம் டொலர் 1.61 மில்லியன் ஆகும். 2023 செப்டெம்பர் 09 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட மற்றும் 2023 செப்டெம்பர் 16 ஆம் திகதி முதல் அமுல்படுகின்ற செயற் திட்டம் 2024 பெப்ரவரி 29 ஆம் திகதி வரையில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

## 2.2 கணக்காய்வு நோக்கம் மற்றும் அளவுகோல்கள்

### 2.2.1 கணக்காய்வின் நோக்கம்

இந்தக் கணக்காய்வானது அசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியீட்டம் செய்யப்பட்ட உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீள் கட்டமைப்பு அவசர உதவி செயற்திட்டத்தின் செயலாற்றலை மதிப்பிடுதல் ஆகும்.

### 2.2.2 கணக்காய்வு அளவுகோல்கள்

| | உப கணக்காய்வு வினாக்கள் | | கணக்காய்வு அளவுகோல்கள் | மூலம் |
|---|---|---|---|---|
| 1. | அரசாங்கத்தின் நலன்புரி உதவி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கொள்கை செயல்நடைமுறை, முறைமை மற்றும் பயன்படுத்தும் ஒன்றுக்கொன்று இணங்கியிருந்ததா? | 1.1 | இலங்கை அரசாங்கம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு இடையே கடன் உடன்படிக் கைக்குரிய நிபந்தனை | இலக்கம் 4025 என்ற கடன் உடன்படிக்கை |
| | | 1.2 | செயற்திட்ட நிர்வாகக் கைநூலின் தேவை | செயற்திட்ட நிர்வாக கைநூல் |
| | | 1.3 | 2013 இன் 01 ஆம் இலக்க சமுர்த்தி சட்டத்தின் தேவை. | 2013 இன் 01 ஆம் இலக்க சமுர்த்தி சட்டம் |
| | | 1.4 | 2000 இன் 09 ஆம் இலக்க முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் சட்டத்தின் தேவை. | 2000 இன் 09 ஆம் இலக்க முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் சட்டம் |
| | | 1.5 | 1996 இன் 28 ஆம் இலக்க ஊனமுற்றோர்களின் உரித்துக்களைப் பாதுகாக்கும் சட்டத்தின் தேவை. | 1996 இன் 28 ஆம் இலக்க ஊனமுற்றோர்களின் உரித்துக்களைப் பாதுகாக்கும் சட்டம் |
| | | 1.6 | சிறுநீரக நோயாளர்களுக்காக வாழ்வாதார உதவி வழங்குதல் | சமூக சேவைகள் அமைச்சு சுற்றறிக்கை 1/2015 |
| | | 1.7 | 2002 இன் 24 ஆம் இலக்க நலன்புரி நலன் சட்டத்தின் தேவை. | 2002 இன் 24 ஆம் இலக்க நலன்புரி நலன் சட்டம் |
| | | 1.8 | 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் தேவை. | 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டம் |
| | | 1.9 | 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் தேவை. | 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டம். |
| | | 1.10 | அரசாங்க நிறுவனத்தால் விநியோகிக்கப்பட்ட உரிய | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | சுற்றிக்கையின் தேவை. | |
| 2.1 | செயற்திட்ட நிர்வாக கைநூலில் திட்டமிடப்பட்ட பிரகாரம் வெளியீடு 1 இனை அடைந்து கொள்ளும் செயற்பாடுகள் இடம்பெற்றிருந்ததா? | | விரிவான செயற்திட்டத்தை அமுல்படுத்தும் திட்டத்தின் பிரகாரம் செயற்பாடுகள் | செயற்திட்ட நிர்வாக கைநூல். |
| 2.2 | பயனாளிகளைத் தெரிவு செய்தல், பணம் செலுத்துதல் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை நியாயமான தன்மை மற்றும் மீளாய்வு செய்யப்பட்டதை உறுதிப்படுத்துவதற்காக போதியளவான வெளிடைப்படையான மற்றும் பொறுப்புவாய்ந்ததாகக் காணப்பட்டதா? | 2.2.1 | குறைந்த வருமானம் பெறும் சமுர்த்தி மற்றும் முதியோர் சிரேஷ்ட பிரஜைகள், சிறுசீரக நோயாயாளர்களில் நோய்கள் உள்ள நபர்கள் மற்றும் ஊனமுற்ற நபர்களின் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக தெரிவு செய்யப்பட்டமை. | செயற்திட்ட நிர்வாக கைநூலின் 15 உப பிரிவு |
| | | 2.2.2 | கர்ப்பிணியான 03 மாதங்கள் ஆன கர்ப்பிணிகள் அல்லது 1 - 4 மாதங்களுக்கு இடையிலான பிள்ளைகளுடன் இருக்கின்ற பாலூட்டும் தாய்மார்களுக்கு போஷணை நிகழ்ச்சித் திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டமை. | மகளிர் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் 2022 ஒக்டோபர் 14 ஆம் திகதிய 06/2022 ஆம் இலக்க சுற்றறிக்கை |
| | | 2.2.3 | உரிய மாதத்தின் பணம் கிடைத்து 03 மாதங்களுக்குள் சமுர்த்தி நிதி நலன் கணக்கிற்கு செலவுவைக்க வேண்டியிருந்தமை. | 2017 மார்ச் 31 ஆம் திகதிய இலக்கம் 08/2017 என்ற சமுர்த்தி திணைக்கள கணக்குகள் சுற்றறிக்கை. |
| | | 2.2.4 | தெரிவு செய்யப்பட்ட முதியோர்களுக்கா குறித்துரைத்த மாதத்தில் 15 ஆம் திகதி வரையில் உரிய படி செலுத்துவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டமை. | சமூக நலன் மற்றும் ஆரம்ப கைத்தொழில் அமைச்சு செயலாளரின் 2018 ஒக்டோர் 15 ஆம் திகதிய இலக்கம் NSE/DEV/03/04 என்ற சுற்றறிக்கை. |
| | | 2.2.5 | சிறுநீரக நோயளர்கள் மற்றும் ஊனமுற்ற நபர்களை தெரிவு செய்யப்பட்ட நலனாளிகளுக்காக குறித்துரைத் பிரகாரம் படிகள் செலுத்தியமை. | 2015 ஏப்ரல் 27 ஆம் திகதிய இலக்கம் 01/03/2015/NSPD என்ற ஊனமுற்ற செயலகத்தின் சுற்றறிக்கை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2.2.6 | கர்ப்பிணிகள் மற்றும் பாலுட்டும் தாய்மார்களுக்காக ரூபா 10,000 தொகை செலுத்தியமை. | மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் 2022 ஒக்டோபர் 14 ஆம் திகதிய 06/2022 ஆம் இலக்க சுற்றறிக்கை |
| 3.1 | செயற்திட்ட நிர்வாகக் கைநூலில் திட்டமிடப்பட்டுள்ள பிரகாரம் வெளியீடு 2 இனை அடைந்து கொள்ளும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததா? | 3.1.1 | விரிவான செயற்திட்டத்தை அமுல்படுத்தும் திட்டத்தின் பிரகாரம் செயற்பாடுகள். | செயற்திட்ட நிர்வாக கைநூல். |
| 3.2 | வெளியீடு 2 இற்காக நலனாளிகளைத் தெரிவு செய்தல், பணம் செலுத்துதல் மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தின் நியாயமான தன்மை மற்றும் மீளாய்வு செய்யப்பட்டதை உறுதிப்படுத்துவதற்காக போதியளவான வெளிப்படையான மற்றும் பொறுப்புவாய்ந்ததாக காணப்பட்டதா? | 3.2.1 | 2022/2023 பெரும்போகத்தில் வேளாண்மை பயிர்செய்த விவசாயிகளை தெரிவு செய்தல். | செயற்திட்ட நிர்வாக கைநூலின் 16 உப பிரிவு |
| | | 3.2.2 | தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு இரண்டு தவணைகளில் நிலைத்தை தயாரிப்பதற்கு முன் மற்றும் நாற்றுக்களை நட்டியதன் பின் ஹெக்டேயருக்கு ரூபா 20,000 ஆன (ஆகக்கூடிய இரண்டு ஹெக்டேயர் வரை) கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டமை. | |
| | | 3.2.3 | சகல கமநல அபிவிருத்தி குழுக்களினாலும் சுயமாக அதிகாரப் பிரதேசத்தில் உள்ளடக்கப்பட்ட விவசாயக் காணிகளை அளப்பதற்கு திட்டமிடப்பட்டமை. | 2011 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தில் திருத்தப்பட்ட 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 55 ஆம் பிரிவு |
| | | 3.2.4 | இலத்திரனியல் ஆவணங்கள் மற்றும் இலத்திரனியல் அறிக்கை முறைமையில் நலன்புரி நலனாளிகள் தொடர்பான தகவல்கள் பேணிச்செல்ல வேண்டியிருந்தமை. | 2002 இன் 24 ஆம் இலக்க நலன்புரி நலன் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட கட்டளை |
| | | 3.2.5 | ஆண் / பெண் சமநிலை (நலன்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 600,000 ஆன விவசாயிகளில் 45 சதவீதம் பெண்களாக இருந்தமை) | செயற்திட்ட நிர்வாக கைநூல். |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | உரிய செயற்பாடுகளின் மூலம் செயற்திட்ட நோக்கங்கள் அடையப்பட்டிருந்ததா? | 4.1 | செயற்திட்ட செயற்பாட்டு குழு ஸ்தாபித்தல் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட ஒழுங்குபடுத்தல் பணிகள் குறித்துரைத்த பிரகாரம் மேற்கொள்ளப்பட்டமை. | |
| | | 4.2 | செயற்திட்ட நிர்வாகக் கைநூலின் ix இன் பிரகாரம் செயலாற்றல் குறிகாட்டிகள். | செயற்திட்ட நிர்வாக கைநூல். |
| | | * | உணவுப் பாதுகாப்பு தன்மை 30 சதவீதத்தால் குறைவடைந்தமை. | |
| | | * | பெரும்போகம் (2022 – 2023 மார்ச்) மேற்கூறப்பட்ட விளைச்சல்களுடன் வலயங்களில் காணிகள் 80 சதவீதம் பயிர்ச் செய்யப்பட்டமை. | |
| | | * | 2020-2021 ஆம் ஆண்டுகளில் பெரும்போகத்தில் கிடைத்த விளைச்சலில் ஆகக்குறைந்த 75 சதவீத விளைச்சல் பெறப்பட்டமை. | |
| | | * | குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் நலனாளிகள் 1.76 மில்லியன் மற்றும் காத்திருத்தல் பதிவேட்டில் 0.73 மில்லியனுக்காக நிதி உதவி வழங்கியமை. | |
| | | * | குறைந்த வருமானம் பெறும் முதியோர்கள் (70 வயதிற்கு மேல் மற்றும் 100 வயது பூர்த்தி செய்த) 0.42 மில்லியன் மற்றும் காத்திருத்தல் பதிவேட்டில் 0.24 மில்லியனுக்காக நிதி உதவி வழங்குதல். | |
| | | * | குறைந்த வருமானம் பெறும் ஊனமுற்ற நபர்கள் 71,000 பேர்கள் மற்றும் காத்திருத்தல் பட்டியலில் 61,000 நபர்களுக்காக நிதி உதவி வழங்குதல். | |

| | | |
|---|---|---|
| * | குறைந்த வருமானம் பெறும் சிறுநீரக நோயாளிகள் 38,000 பேருக்கும், காத்திருத்தல் பதிவேட்டில் 5,000 பேருக்கும் நிதி உதவி செலுத்துதல். | |
| * | கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் 300,000 பேர்களுக்கு நிதி உதவி வழங்குதல். | |
| * | ஆகக்குறைந்தது 600,000 விவசாயிகளுக்கு பெரும்போகத்தில் (2022 செப்டெம்பர் - 2023 மார்ச்) இற்காக பயிர்ச் செய்யப்பட்ட அளவிற்கு நிதி உதவி வழங்குதல். | |
| 4.3 | 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் தேவை. | 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டம் |

## 2.3 கணக்காய்வு விடயப்பரப்பு மற்றும் விடயப்பரப்பின் எல்லை.

### 2.3.1 கணக்காய்வு விடயப்பரப்பு

ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிதி ரீதியான படிகள் பெற்றுக்கொள்வதற்காக 2022 செப்டெம்பர் முதல் நவம்பர் வரை சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தில் பதிவு செய்த குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் மற்றும் காத்திருத்தல் பட்டியலில் நலனாளிகள், தேசிய முதியோர் செயலகத்தில் முதியோர் படிகளுக்காக தகைமை பெற்றிருந்த மற்றும் காத்திருத்தல் பட்டியலில் இருக்கின்ற 70 வயதினை விஞ்சிய முதியோர் மற்றும் 100 வயதினை விஞ்சிய முதியோர், ஊனமுற்றோர்களுக்கான தேசிய செயலத்தில் பதிவு செய்துள்ள ஊனமுற்ற மற்றும் காத்திருத்தல் பட்டியலில் உள்ள நபர்கள், சிறுநீரக படிகள் பெறுகின்ற மற்றும் காத்திருத்தல் பட்டியலில் உள்ள நலனாளிகள் மற்றும் படிகளுக்காக உரித்து பெற்ற கர்ப்பிணி மற்றும் பால் ஊட்டும் தாய்மார்கள் மற்றும் 2022/2023 பெரும்போகத்தில் நெற்பயிர்ச் செய்கை மேற்கொண்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் பதிவு செய்துள்ள விவசாயிகள் இதன் மூலம் மேவுகை செய்யப்படுகின்றனர். மேலும் இந்தக் கணக்காய்விற்காக தெரிவு செய்தல் குருணாகல், அம்பாந்தோட்டை, அனுராதபுரம், மொனராகலை மற்றும் மட்டக்களப்பு போன்ற மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தது.. சனத்தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் (DCS) இனால் தயாரிக்கப்பட்ட வறுமைக் கோட்டு குறிகாட்டியின் பிரகாரம் மேற்கூறப்பட்ட மாவட்டங்களில் வறுமை மற்றும் ஆபத்திற்கு உட்படக்கூடிய நபர்களில் ஆநேகமான தரப்பினர் இருந்தமை மற்றும் அதிகளவான வயற்காணிகளின் அளவு காணப்படுகின்ற மேற்குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்கள் அதற்கான அடிப்படையாகும்.

### 2.3.2 விடயப் பரப்பெல்லை.

மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தின் கீழ் மேவுகை செய்யப்படுகின்ற விவசாயிகள் சமுர்த்தி நலனாளிகள் ஊனமுற்றோர் மற்றும் முதியோர்கள், சிறுநீரக நோயாளிகள் கர்ப்பிணிகள் மற்றும் பால்ஊட்டும் தாய்மார்களுக்காக நிதி உதவியை வழங்குதல் தொடர்பான பரீட்சிப் பின் போது காணப்படுகின்ற வரையறையான பதவியணியினர் மற்றும் பௌதீக வளங்களின் காரணமாக பௌதீக ரீதியில் பரீட்சித்தல் வரையறுக்க வேண்டியிருந்தது.

### 2.4 கணக்காய்வின் நுழைவு

ISSAI 3000/40 இல் காண்பிக்கப்பட்ட பிரகாரம் இதில் பயன்படுத்தப்பட்டுள்ள நுழைவின் விளைவு மற்றும் முறைமை நுழைவின் திருத்தமாகும். இந்தக் கணக்காய்வின் மூலம் நுழைவின் பிரகாரம் செயற்திட்டத்தின் வெளியீடு மற்றும் நோக்கங்களை அடைந்த கொள்ளப்பட்டிருந்ததா என முறைமையின் நுழைவின் கீழ் செயற்திட்ட செயற்பாடுகளை அமுல்படுத்தும் போது முகாமைத்துவம் மற்றும் தகவல் முறைமை உரியவாறு அமுல்படுத் தப்பட்டிருந்ததா? என்பது தொடர்பாக பரீட்சிக்கப்பட்டது.

### 2.5 கணக்காய்வின் திட்ட முறைமை

இந்தக் கணக்காய்விற்காக பின்வரும் திட்ட முறைமைகள் பின்பற்றப்பட்டிருந்தது.

(அ) இந்த செயற்திட்டம் மற்றும் தொடர்புடைய திறைசேரியின் திட்டமிடல் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடல், வினாக்கொத்தின் மூலம் தகவல்களை பெற்றுக் கொள்ளல் மற்றும் நிதி அறிக்கையின் பகுப்பாய்வு

(ஆ) செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக விநியோகிக்கப்பட்ட நிருவாக கைநூலில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் மற்றும் கருதுகோள்களுக்கு இணங்கியிருந்தமை மற்றும் கட்டளைச் சட்டம், வழிகாட்டி மற்றும் சுற்றறிக்கை, ஆலோசனைக் கடிதம் போன்றவற்றுக்கு இணங்கி இருந்தமையைப் பரீட்சித்தல்.

(இ) கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் உள்ள மாவட்ட கமநல சேவை அலுவலகம் கமநல சேவை நிலையங்களில் மாவட்ட கமநல அபிவிருத்தி பிரதி / உதவி ஆணையாளர்கள் பிரதேச உத்தியோகத்தர்கள் கமநல ஆராய்ச்சி உத்தியோகத்தர்களின் மூலம் தரவுகளை பெற்றுக்கொள்ளல்.

(ஈ) செயற்திட்டத்திற்குரிய செயற்பாட்டு தரவு முறைமையான Geogoviya தரவு முறைமைக்குப் பொறுப்பாக செயற்படுகின்ற கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர், உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடுதல் மற்றும் Geogoviya தரவு முறைமை மூலம் தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்.

(உ) கமநல அமைப்புக்கள் பிரதிநிதிகள் மற்றும் 2022/23 பெரும்போகத்தில் நெற்பயிர்ச் செய்த விவசாயிகளுடன் கூட்டங்களை நடாத்துதல், கலந்துரையாடுதல் மற்றும் தகவல்களைக் கோருதல்.

(ஊ) கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் இணையத்தளத்தில் தகவல்களை பெற்றுக் கொள்ளல்.

### 2.6 கணக்காய்விற்கான அதிகார பலம்.

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகள் என்பவற்றின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் இந்த செயலாற்றல் கணக்காய்வு மேற்கொள்ப் பட்டது.

**2.7 தரவுகளைப் பயன்படுத்துவதற்கான எல்லை.**

(அ) சமுர்த்தி, முதியோர், சிறுநீரக மற்றும் ஊனமுற்றோர், கர்ப்பிணிகள் மற்றும் பால் ஊட்டும் தாய்மார்கள் மற்றும் 2022இல் பெரும் போகத்தில் நெற்பயிர்ச் செய்கை மேற்கொண்ட விவசாயிகள் போன்ற நலனாளி தொகுதிகளுக்குரிய நிறுவனத்தினால் தெரிவு செய்யப்பட்ட நலனாளிகளாக இருந்ததுடன் சகல நலனாளிகளும் சரியான அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட நலனாளிகளா? என்பது தொடர்பாக நேரடியாக உறுதிப்படுத்த முடியாதிருந்தமை.

(ஆ) சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் CRM தரவு முறைமையில் சில சமுர்த்தி நலனாளிகளின் பிறந்த திகதி, அடையாள அட்டை இலக்கம் போன்ற தேவையான தகவல்கள் காணப்படாமை.

(இ) ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் உதவியின் கீழ் உணவுப் பாதுபாப்பு மற்றும் வாழ்வாதார உறுதிப்படுத்தல் அவசர நிதி உதவி செயற்திட்டத்திற்காக கமநல அபிவிருத்தி திணைக்களத்தால் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக உரிய தரவு முறைமையில் நுழையும் வசதிகள் கணக்காய்வாளருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் எந்தவொரு குறித்துரைத்த திகதியிலும் விவசாயிகளினால் பயிரிடப்பட்ட காணியின் அளவு, வழங்கப்பட்ட நிதி உதவிகளின் அளவு, படிசெலுத்துதல் நிராகரிக்கப்பட்ட அளவு, நிராகரிக்கப்பட்ட தொகை போன்ற தகவல்கள் கணக்காய்வாளருக்கு நேரடியாக பெற்றுக்கொள்ள முடியாதிருந்தமை.

## 03 விரிவான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 சமுர்த்தி படிகளை வழங்குதல்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் உதவியின் அடிப்படையில் அமுல்படுத்தப்படுகின்ற உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்யும் அவசர உதவி செயற் திட்டத்தின் கீழ் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் 2022 செப்டெம்பர் முதல் நவம்பர் வரை சமுர்த்தியின் நலனாளிகளுக்கு (காத்திருத்தல் பட்டியலில் நலனாளிகளையும் உள்ளடக்கி) செலுத்துவதற்காக சமுர்த்தி வங்கிகள் 1090 இற்கு ரூபா 35,184,484,440 தொகை வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட தெரிவில் உள்ளடக்கப்பட்ட குருணாகல், அம்பாந்தோட்டை, அநுராதபுரம், மொனராகலை மற்றும் மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களின் 640,000 சமுர்த்தி நலனாளிகளுக்கு மாத்திரம் ரூபா 10,320,855,050 தொகை 2022 செப்டெம்பர் முதல் நவம்பர் வரையான 03 மாத காலப் பகுதிக்காக செலுத்தப்பட்டிருந்தது.

மேற்கூறப்பட்ட 05 மாவட்டங்களில் கணக்காய்வினால் களப்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 09 பிரதேச செயலகப் பிரிவுகளில் 67,000 சமுர்த்தி நலனாளிகளுக்கு மாத்திரம் நலன்கள் செலுத்துவதற்காக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் ரூபா 1,171,249,200 தொகை 27 சமுர்த்தி வலயங்களுக்கு அனுப்பப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

#### 3.1.1 பொருத்தமான நலனாளிகளைத் தெரிவு செய்தல்.

இலங்கை சுதந்திரதம் பெற்றதன் பின்னர் கடந்த தசாப்த காலமாக மக்களுக்கு பல்வேறு வகையான உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. வறுமை ஒழிக்கும் தேசிய திட்டமாக 1995 இன் 30 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் 2013 இன் 01 ஆம் இலக்க திவிநெகும சட்டத்தின் கீழ் தவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தை ஸ்தாபித்தல் மற்றும் 2017 இன் 02 ஆம் இலக்க திவிநெகும (திருத்தப்பட்ட) சட்டத்தின் கீழ் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. 25 மாவட்ட செயலகங்களில் 332 பிரதேச செயலகப் பிரிவில் 14,022 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை மேவுகை செய்யும் வகையில் 1090 சமுர்த்தி வங்கிகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. செயற்திட்ட நிர்வாகக் கைநூலின் பிரகாரம் சமுர்த்தி நலனாளிகளின் எண்ணிக்கை 2.49 மில்லியன் ஆகும். வறுமையை ஒழித்து வாழ்வாதார, பொருளாதார நடவடிக்கைகளின் மூலம் வலுவூட்டப்பட்ட சமூகம் என்ற தூர நோக்கின் பிரகாரம் 28 வருடங்களாக அரசாங்கத்தால் நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றது.

குறைந்த வருமானம் குடும்பங்களின் ஆய்வின் அடிப்படையாகக் கொண்டு ஆய்வு ரீதியான திட்டத்தின் பிரகாரம் சமுர்த்தி நிதி மானிய நலனாளிகளைத் தெரிவு செய்தல் 2017 யூன் 23 ஆம் திகதிய SDD/HO/FT/BIMS ஆம் இலக்க சமுர்த்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் கல்வி, சுகாதாரம், பொருளாதார நிலைமை, சொத்துக்கள், வீடு, குடும்ப சுகாதார நிலைமை போன்ற 06 பிரிவுகளின் கீழ் உப எடுகோள்கள் 29 இன் மூலம் மதிப்பீடு செய்து வறுமை அதிகமாக உள்ள குடும்பங்கள் இனங்காணப்பட்டிருந்தது. அவ்வாறே 2002 இன் 24 ஆம் இலக்க நலன்புரி நலன் சட்டத்தின் 7(1) இன் பிரகாரம் குறித்துரைத்த எடுகோல்களின் படி ஏதோ ஒரு நபர் நலன்புரி நலன்களைச் செலுத்துவதற்கு பொருத்தமான நபராக உறுதிப்படுத்தும் இடத்து 12 மாத காலத்தில் ஆரம்ப கால எல்லைக்காக நலன்புரி நலன்களை செலுத்துதலை பெற்றுக்கொள்வதற்கு பொருத்தமான நபராக கருதவேண்டியிருந்ததுடன் அது தொடர்பாக நலனாளி நலன் சபையின் ஆணையாளரினால் அவருக்கு அறித்தல் வேண்டும். அந்த ஆரம்ப காலப் பகுதி முடிவடையும் போது அந்த நபருக்கு தகைமை பெற்றிருப்பாயின் அந்த சட்டத்தில் குறித்துரைத்த பிரகாரம் நலன் உத்தேச முறையில் உள்ளடக்குவதற்காக விண்ணப்பிப்பதற்கு அவருக்கு தகுதியாகும். மேலும் அவ்வாறான நபருக்கு அந்த நலன்புரி நலன்களை செலுத்துவதைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்காலத்தில் பொருத்தமற்ற இருந்தமை சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது உரிமையாளரால் அந்த நபரக்கு அங்கீகாரம் வழங்க வேண்டும். அதன் பிரகாரம் அந்த சட்டத்தின் 7(2) உப பிரிவின் பிரகாரம் நலன்புரி நலன்களை செலுத்துவதற்கு பொருத்மான நபராகக் கருதி

ஏதாவது மானிய உத்தேச திட்டத்தின் கீழ் அல்லது வறுமையை ஒழிக்கும் வகையிலான நோக்காகக் கொண்டு அல்லது வேறு ஏதாவது பணிகளுக்காக எடுக்கப்பட்ட காலத்தில் அமுலில் காணப்படுகின்ற ஏதாவது சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் அந்த நபருக்கு கிடைக்கின்ற சகல கொடுப்பனவுகள் அல்லது அவரினால் பெறப்படுகின்ற சகல கொடுப்பனவுகள் அல்லது அவரினால் பெறப்பட்ட சகல நலன்களும் உடனடியாக அமுல்படும் வகையில் முடிவுறுத்தப்படல் வேண்டும். இவ்வாறே சமுர்த்தி மானிய நலன் உதவிக்காக தகைமை பெறுகின்ற குடும்பமொன்றைத் தெரிவு செய்யும் திட்ட முறைமை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சமுர்த்தி மானிய நலன்களுக்காக தகைமை பெறுகின்ற குடும்பங்களைத் தெரிவு செய்தல். 2002 இன் 24 ஆம் இலக்க நலன்புரி நலன் சட்டத்திற்கு இணங்குதல்.


சகல நலன்புரி நலன்களையும் செலுத்துவதற்கான தேவை பௌதீக கட்டமைப்பு திட்டத்திற்கான 2002 இன் 24 ஆம் இலக்க நலன்புரி நலன் சட்டத்தின் பிரகாரம் அமுல்படுத்த வேண்டியிருந்ததுடன் 7(1) உப பிரிவின் பிரகாரம் நலன்புரி நலன் சபையினால் வெளியிடப்பட்ட நபரினால் மாத்திரம் ஏதாவது நலன்புரி திட்ட முறைமையில் கோர முடியும். நலன்புரி நலன் சபை 2016 பெப்ரவரி 15 ஆம் திகதி முதல் அமுல்படுகின்ற போதிலும் நலன்புரி நலன்களை செலுத்துவதற்கு தகைமையுள்ள நபர்களை இனங்காணாமையினால் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினாலும் பிரதேச செயலக மட்டத்திலும் ஸ்தாபிக்கப்பட்ட குழுவினால் சமுர்த்தி நலனாளிகள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். தற்போது நலன்புரி சலன் சட்டத்தின் பிரகாரம் விநியோகிக்கப்பட்ட 2022 இன் 20 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் 2023 ஆம் ஆண்டு முதல் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை தெரிவு செய்யும் திட்ட முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) தவறான தகவல்களைச் சமர்ப்பித்ததன் காரணமாக சமுர்த்தி அங்கத்துவத்தை இரத்துச் செய்தல்.

2022 திசெம்பர் 01 ஆந் திகதி முதல் 2023 மார்ச் 31 வரையான காலப் பகுதியில் அநுராதபுர மாவட்டத்தில் நொச்சியாகம பிரதேச செயலகத்தில் 22 பேர்களுக்கும் குருணாகல் மாவட்டத்தில் கல்கமுவ பிரதேச செயலகத்தில் 12 பேர்களும் பிழையான தகவல்கள் சமர்ப்பித்தமையினால் சமுர்த்தி அங்கத்துவம் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. இந்த நபர்கள் நீண்டகாலம் முதல் சமுர்த்தி உதவியினைப் பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) 2017 யூன் 23 ஆந் திகதிய SDD/HO/FT/BIMS என்ற ஆம் இலக்க சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் நியதிகளின் படி 2016-2017 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை இனங்காணும் ஆய்வின் போது அதுவரை நலனாளிகளாக மானியங்கள் பெற்ற 1,372,694 பேரில் 922,715 பேர் அளவில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களாக இனங்காணப்பட்டிருந்தனர். அவ்வாறே அதன் போது புதிய மானிய விண்ணப்பதாரர்களான 2,235,573 குறைந்த வருமானம் பெறும் நபர்களாக 450,959 பேர் மாத்திரமே இனங்காணப்பட்டிருந்தனர்.

(ஈ) கணக்காய்வின் தெரிவிற்கு உட்படுத்தப்பட்ட மாவட்டங்களில் சமுர்த்தி நலனாளிகள் மாவட்டங்களில் உள்ள வறுமை குறிகாட்டிகளின் பிரகாரம் பகுப்பாய்வு செய்யும் போது அதற்கிடையே கவனத்திற்கொள்ளக்கூடிய முரண்கள் கீழே குறிப்பிடப்படுகின்ற பிரகாரம் அவதானிக்கப்பட்டது.




**3.1.2 சமுர்த்தி சமூக அடிப்படையிலான வங்கியினால் மானியங்களுக்குரிய மானியம் பெறுநர்களுக்கு செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் வழங்குதல்.**

அவசர உதவி செயற்திட்டத்தின் மூலம் மானியம் பெறுநர்களுக்கு சரியாகவும், குறித்துரைத்த நேரத்திலும் பணத்தை வழங்குவதற்கு திட்டமிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எனினும் மானியம் பெறுநர்களின் கணக்குகளில் நிதி திட்டமிடப்பட்ட பிரகாரம் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய திட்டமிடல் திணைக்களத்திலிருந்து சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு பணம் செலவு வைத்தல் தாமதமான நாட்கள் 30 ஆகும். இந்த தாமதத்தின் காரணமாக நலனாளிகளுக்கு உரிய மாதத்தில் மானியங்கள் பெற முடியாமையினால் நலனாளிகளுக்கும் மற்றும் சமுர்த்தி வங்கிகளின் உத்தியோகத்தர்களும் பல்வேறு வசதியீனங்களுக்கு உட்படுவதற்கு அவர்களால் வழங்கப்பட்ட தகவல் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

(ஆ) சமுர்த்தி கள உத்தியோகத்தர்களினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மானிய உதவி பணம் பெற்றுக்கொள்வதற்கு தகைமை காணப்பட்ட போதும் நிதி ஏற்பாடு இல்லாமையின் காரணமாக 11 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் மானியம் பெறாத நபர்கள் 244 ஆக இருந்ததுடன் அவர்களுக்கு மாதாந்தம் மானியமாக செலுத்த வேண்டிய மொத்தத் தொகை ரூபா 1,627,300 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) சமுர்த்தி சமுக அடிப்படை வங்கிகளுக்கு கட்டுமுதல் விடுவித்தல்.

இலக்கம் 08/2017 என்ற கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் பிரதேச செயலகத்தால் சமுர்த்தி நலனாளிகளின் பெயர் பதிவேட்டின் 02 பிரதிகள் தயாரித்து அதில் ஒரு பிரதி சமுர்த்தி வங்கிகளுக்கு ஒவ்வொரு மாதமும் முதலாவது வாரத்தில் அனுப்ப வேண்டியிருந்ததுடன் மற்றைய பிரதி மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளருக்கு அனுப்ப வேண்டியிருந்ததுடன் நலனாளிகள் கணக்கிற்கு பணம் செலவு வைத்தல் பிரதேச செயலாளரினால் மாதாந்தம் நாளதுவரையாக்கப்படுகின்ற பெயர் பட்டியலை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டாகும். அவ்வாறே நலன்கள் செலுத்துவதற்காக தேவையான பணம் மாவட்ட சமுர்த்தி அலுவலகத்தால் சமுர்த்தி

வங்கிகள் மட்டத்தில் வழங்கப்படுகின்ற மாதாந்த ஆகக்கூடிய அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு தலைமை அலுவலகத்தால் சமுர்த்தி வங்கிகளின் உத்தியோர்கபூர்வ நடைமுறைக் கணக்கிற்கு அனுப்பிவைக்கப்படுகின்றது. எனினும் தலைமை அலுவலகத்தால் சமுர்த்தி வங்கியின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கிற்கு அனுப்பப்படுகின்ற மானியம் தொகைக்கு உரித்தான நலனாளிகளின் எண்ணிக்கை மற்றும் சமுர்த்தி வங்கிகளால் மானியம் செலுத்தப்படுகின்ற நலனாளிகளின் எண்ணிக்கை இணங்காதிருந்ததாக இப்பாகமுவ தனமல்வில கம்பேகமுவ கதிர்காமம், இருதயபுரம், கிழக்கு, கரவெட்டி மற்றும் இருதயபுரம் கிழக்கு போன்ற சமுர்த்தி வங்கிகளில் அவதானிக்கப்பட்டது.

### 3.1.3 சமுர்த்தி மானிய நலன்களை செயற்திறனாக வழங்குவதற்காக தேவையான மனித வளம் காணப்பட்டமை.

சமுர்த்தி மானியங்களை குறித்துரைத்த நேரத்தில் உரிய நலனாளிகளுக்கு வழங்குவதற்காக சமுர்த்தி வங்கிகளில் பௌதீக ரீதியில் மனித வளம் உரிய பிரகாரம் காணப்படல் வேண்டும். அவ்வாறே பிரதேச செயலகங்களுக்குரிய சமுர்த்தி மானியங்களை பெற்றுக்கொள்வதற்கு தகைமை பெறுகின்ற நலனாளிகளை இனங் காண்பதற்கு போதியளவான உத்தியோகத்தர் தரப்பு இருத்தல் வேண்டும். இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சமுர்த்தி வங்கிகளில் காணப்படுகின்ற மனிதவளங்கள்

(i) சமுர்த்தி பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருடன் இணங்குதல். கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 07 சமுர்த்தி வங்கிகளில் மனித வளங்களில் வெற்றிடங்கள் அவதானிக்கப்பட்டது. இதன் போது சமுர்த்தி வங்கிகளில் இல்லாத உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் வெற்றிடம் காணப்படுகின்ற பதவிகளில் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுவதற்காக வங்கியின் ஏனைய பதவியணியினர் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அவ்வாறே கந்துஉலவ வங்கியில் வெற்றிடம் காணப்படுகின்ற நிதி அறவீட்டாளர் பதவி கணக்கு எழுதுவினைஞரால் மேற்கொள்ளப்படு கின்றமை அவதானிக்கப்பட்டதுடன் அதன் மூலம் வேலை பகிர்ந்தளிக்கப்படாதிருந்தமை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு செயற்பாடுகளில் நலிவான நிலைமை காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ii) நிறைவேற்ற வேண்டிய பணிப்பொறுப்புக்களுடன் ஒப்பிடும் போது சமுர்த்தி வங்கிகளில் மனித வளங்கள்

சமுர்த்தி வங்கிகளில் ஒரு உத்தியோகத்தருக்கு இருக்கின்ற சமுர்த்தி நலனாளிகளின் எண்ணிக்கை 300 இற்கும் 700 இற்கும் இடையில் ஆகும். அவ்வாறே சமுர்த்தி நலனாளிகளுக்கு மேலதிகமாக மானியம் பெறுகின்ற முதியோர், சிறுநீரக, ஊனமுற்ற, கர்ப்பிணிகள் மற்றும் பால்ஊட்டும் தாய்மார்களில் கவனத்திற் கொள்ளக்கூடிய எண்ணிக்கையில் இருந்ததுடன் 05 கணக்கு வகைகளின் கீழ் மானியம் பெறுநர் அல்லாத ஏனைய வங்கி கணக்குகளில் கனிசமான எண்ணிக்கையும் காணப்பட்டது. அவ்வாறே கணனி முறைமைக்கு மேலதிகமாக கையினால் பயன்படுத்தி ஒவ்வொரு வங்கிகளுக்கும் உரிய பேரேட்டுக் கணக்குகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். இந்த நிலைமை வங்கியின் அதிக நிரல் மற்றும் நெருக்கடிகளுக்கு காரணமாக இருந்த மேலும் இவ்வாறே ஆகக் குறைந்த பதவியணியினரை ஈடுபடுத்தி மானியம் செலுத்தியதன் காரணமாக வங்கியால் மேற்கொள்ளப்படுகின்ற ஏனைய கடமைகளான கடன் வழங்குதல் மற்றும் அபிவிருத்தி செயற்திட்டங்களை அமுல்படுத்துதலிலும்

தாமதம் ஏற்படுகின்றதாக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் கூறப்பட்டிருந்தது.



2023 யூன் 26 ஆம் திகதி பழுகஸ்வேவ சமுர்த்தி வங்கியில் காணப்பட்ட இட நெருக்கடி

(ஆ) சமுர்த்தி வலயங்களில் கள உத்தியோகத்தர்கள் போதியளவில் இருத்தல்.

சமுர்த்தி வலயங்களில் நியமிக்கப்பட்டுள்ள கள உத்தியோகத்தர்கள் தமது சாதாரண கடமையாக கீழே குறிப்பிடப்படுகின்ற பணிகளை மேற்கொள்கின்றனர்.

- வைப்பினை சேகரித்தல்
- கடன் வழங்குதல் மற்றும் கடன் அறவிடல்
- சங்கக் கூட்டங்களை நடாத்துதல்
- வாழ்வாதார செயற்திட்டங்களை பின்னாய்வு செய்தல்.
- சிரமதானம் மற்றும் ஏனைய அபிவிருத்தி செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்.
- சமுர்த்தி மானியப் பதிவேட்டைத் தயாரித்தல்
- சமுர்த்தி நலனாளிகளைத் திருத்துதல். (மாற்றுதல், நீக்குதல்)

(i) ஆசிய அபிவிருத்தி வங்கியினால் அமுல்படுத்தப்படுகின்ற மானிய நிகழ்ச்சித் திட்டத்தின் காரணமாக சமுர்த்தி வலயங்களில் கள உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக கடமையாக நலனாளிகளின் பெயர் பதிவேட்டை தயாரித்தல், அறிவித்தல், வீடுகளில் சென்று தகவல்களை பெற்றுக்கொள்ளல் மற்றும் கணக்குகள் இல்லாத நபர்களுக்கு கணக்குகளை ஆரம்பித்து வழங்குதல். போன்ற பணிகளை நிறைவேற்றுகின்றனர். இவ்வாறான நிலைமையின் கீழ் சமுர்த்தி வலயங்களில் நியமிக்கப்பட்டுள்ள கள உத்தியோகத்தர்கள் போதியளவில் இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) இவ்வாறே கள உத்தியோகத்தர்கள் கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கிடையே நியமிக்கும் போது சமுர்த்தி நலனாளிகளின் எண்ணிக்கை தொடர்பாக கவனத்திற் கொள்ளாதிருந் தமையும் தனமல்வில மற்றும் கதிர்காமப் பிரதேச செயலகப் பிரிவுகளில் ஒரு கள உத்தியோகத்தருக்கு மிகவும் கனிசமான சமுர்த்தி நலனாளிகளின் எண்ணிக்கை மேவுகை செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. அதனால் நலனாளிகளை இனங்காணல் மிகவும் வசதியீனமாக இருந்த கள உத்தியோகத்தர்களில் இருந்து பெறப் பட்ட தகவல்களில் குறிப்பிடப்பபட்டுள்ளது.

(இ) சமுர்த்தி வலயங்களில் கள உத்தியோகத்தர்களால் கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற மானிய

நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தும் போது அவர்களுக்கு பின்வரும் பிரச்சினைகள் எழுந்திருந்தது.

(i) நேர முகாமைத்துவம் மேற்கொள்ளப்படாமை.

(ii) பதிவேடுகளில் குறுகிய பெயர் இடப்படாமை

(iii) ஆவணங்களில் அடையாள அட்டை இலக்கம் இன்மை

(iv) ஆவணங்களில் பெயர்களை நீக்குதல் மற்றும் உள்ளடக்குவதற்காக தேவையான ஆவணங்கள் பெறப்படாமை.

(v) ஏனைய உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பு கிடைக்காமை.

(vi) கணனி மற்றும் இணையத்தள வசதிகள் குறைவாகக் காணப்பட்டமை.

(vii) குறுகிய காலத்தில் அறிக்கை தயாரிப்பதற்கு ஏற்பட்டமை.

(viii) நபர்களை இனங்காண்பதற்கு வசதியீனமாக இருந்தமை.

(ix) வயது வந்த நலனாளிகள் புறக்கணிக்கப்பட்டமை.

(x) வதிவிட இடங்களைக் கண்டறிவதற்கு முடியாமை.

(xi) நலனாளிகளின் வங்கி கணக்கு ஆரம்பிப்பதற்கு தாமதம் ஏற்பட்டமை.

மேலே காண்பிக்கப்பட்ட பிரச்சினைகளின் காரணமாக சமுர்த்தி வலயங்களின் கள உத்தியோகத்தர்களுக்கு செயற்திறனாக தமது கடமைகளை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.1.4 சமுர்த்தி மானிய நலனாளிகளுக்கு செயற்திறனாக வழங்குவதற்காக தேவையான பௌதீக வளங்களின் போதியளவான தன்மை.

சமுர்த்தி மானியம் குறித்துரைத்த நேரத்தில் உரிய நலனாளிகளுக்கு வழங்குவதற்காக சமுர்த்தி வங்களில் பௌதீக வளங்கள் உரிய பிரகாரம் காணப்படல் வேண்டும். பௌதீக வளங்கள் போதியளவான பிரகாரம் காணப்படாமையினால் கடமையில் ஈடுபடுத்தப்படுகின்ற உத்தியோகத்தர்கள் நலனாளிகளுக்கும் வசதியீனமாக நியமிக்கப்பட்டிருந்தனர். சமுர்த்தி வங்கியினால் கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் கந்துலெவ மற்றும் ஹம்பேகமுக சமுர்த்தி வங்கிகள் இரண்டும் தவிர தெரிவிற்கு உட்படுத்தப்பட்ட சமுர்த்தி வங்கிகளில் அலுவலக வசதிகள் போதியளவில் இல்லாதிருந்ததுடன் கணனி, காகிதாதிகள், எரிபொருள் மற்றும் கனரக வாகனங்கள், தொடர்ச்சியாக இணைதள வசதிகள் மற்றும் மின்சார வளங்கள் போன்ற வசதிகள், பாதுகாப்பு வசதிகள் சுகாதாரம் மற்றும் குடிநீர் வசதிகள் மற்றும் ஓய்வெடுக்கும் வசதிகள் போதியளவில் காணப்படாமையால் புதிய மானிய நலனாளிகளுக்காக புதிய வங்கிக் கணக்கை ஆரம்பிக்கும் போது பாஸ் புத்தகம் பாஸ் புத்தகத்தின் கொடுக்கல் வாங்கல்களை அச்சிடுவதற்காக தேவையான உபகரணங்கள் காணப்படாமை அவதானிக்கப்பட்டது. கணக்காய்வினால் மேற் கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது கீழே குறிப்பிடப்படுகின்ற அந்த வசதிகள் போதியளவில் இல்லாதிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது.



அலுவலக இட வசதிகள் போதியளவில் இல்லாமை
கதிர்காமம் சமுர்த்தி வங்கி 2023 மே 24 ஆந் திகதி





கட்டிடம் பராமரிக்கப்படாமை கல்கமுவ சமுர்த்தி வங்கி- 2023 மே 16 ஆந் திகதி



சமுர்த்தி வங்கி 2023 மே 24 ஆந் திகதி

**3.1.5 சமுர்த்தி மானிய நலனாளிகளுக்கு செயற்திறனாக வழங்குவதற்காக தேவையான கோவைகள் மற்றும் ஆவணங்களை உரிய பிரகாரம் பேணிச் செல்லல்.**

கணக்கு சுற்றறிக்கை 08/2017 இன் 08 ஆம் உப பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிடப்படுகின்ற பதிவேடுகள் மாவட்ட சமுர்த்தி அலுவலகம் பிரதேச செயலகங்கள் மற்றும் சமுர்த்தி வங்கிகளினால் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

i. மானிய சுற்றறிக்கைக் கோவை

ii. சமுர்த்தி நலனாளிகள் பெயர் பதிவேடு

iii. மாதாந்த ஆகக் கூடிய அறிக்கைக் கோவை

iv. மாதாந்த திருத்தப்பட்ட விபர அறிக்கை

v. மானிய திருத்தப்பட்ட கோவை

vi. காத்திருத்தல் பதிவேடு

vii. மதகுருமார்/ முதியோர்/ சிறுவர்/ ஊனமுற்றோர் போன்றவர்கள் நிறுவனங்களின் நாளதுவரையாக்கப்பட்ட பெயர் பதிவேடு.

viii. மாதாந்த மானிய நிதி செலவுவைக்கப்பட்ட கணக்குகள் தொடர்பான கோவை.

எனினும் கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போதும், சமுர்த்தி வங்கியினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரமும் மாவட்ட சமுர்த்தி அலுவலகம் பிரதேச செயலகம் மற்றும் சமுர்த்தி வங்கிகளினால் இந்த கோவைகள் மற்றும் ஆவணங்கள் உரிய பிரகாரம் பேணிச் செல்லப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3.1.6 சமுர்த்தி நலனாளிகளை நீக்குதல்.**

கணக்கு சுற்றறிக்கை 08/2017 இன் 1.5 உப பிரிவின் பிரகாரம் மானியம் பெறுநர்கள் தொடர்பான ஏதாவது எதிர்ப்பு உள்ளதாயின் அது தொடர்பாக பரீட்சித்து 1.6 உப பிரிவின் கீழ் மானித்தைச் செய்யும் அதிகாரம் பிரதேச செயலாளருக்கு உரியதாகும். இவ்வாறு எதிர்ப்பு ஏற்படுகின்ற போது பொருத்தமற்ற மானியம் பெறுநர்களை இனங்காணாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3.1.7 சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் அமுல்படுத்தப்படுகின்ற மானிய நிகழ்ச்சித் திட்டத்தின் வினைத்திறன்.**

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் உதவியின் அடிப்படையில் அமுல்படுத்தப்படுகின்ற உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீட்பு அவசர உதவி செயற்திட்டத்தின் கீழ் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் 2022 செப்டெம்பர் முதல் நவம்பர் வரை சமுர்த்தி நலனாளிகளுக்கு (காத்திருத்தல் பட்டியலையும் உள்ளடக்கி) மானியம் வழங்கும் பிரதான நோக்கம் பொருளாதார நெருக்கடிகளுக்கு பாதிப்புக்கு உற்பட்ட ஏழை மக்களை வலுவூட்டுவதற்கு ஆகும். திட்டமிடல் மற்றும் செயற்பாட்டுப் பிரிவின் சமுர்த்தி சுற்றறிக்கை 2018/07 இன் பிரகாரம் வலுவூட்டப்பட்ட குடும்பங்களின் பிரதானமாக தற்காலிகமாக வலுவூட்டப்பட்ட குடும்பங்கள் மற்றும் முழுமையாக வலுவூட்டப்பட்ட குடும்பங்களாக இரண்டு பகுதிகளாக பிரிக்கப்படுகின்றது. ஆரம்பமாக பொருளாதார சமூக மற்றும் மனிதாபிமான ஏதாவது வெற்றிகரமாக அடையப்பெற்ற குடும்பங்கள் தற்காலிகமாக வலுவூட்டப்பட்ட குடும்பங்களாக கவனத்திற்கொள்ளப்படுவதுடன் முழுமையாக வலுவூட்டப் படும் வரை ரூபா 420 மானியம் அவர்களுக்கு வழங்கப்படுகின்றது. மாதாந்தம் உயர் வருமானம் பெற்று (உதாரணம்:- 04 அங்கத்தவர்கள் இருக்கின்ற குடும்பங்களின் மாதாந்த வருமானம் ரூபா 24,000 அல்லது அதற்கு மேற்பட்ட வருமானம் உழைக்கின்ற) சமூகம் மற்றும் மனிதாபிமான ரீதியிலும் நிரந்தரமாக வலுவூட்டப்பட்ட குடும்பங்கள் முழுமையாக வலுவூட்டப்பட்ட குடும்பங்களாக கவனத்திற்கொள்ளப்படும்.

**(அ) சமுர்த்தி நலனாளிகளை வலுவூட்டுதல்**

1995 ஆம் ஆண்டு முதல் 2022 செப்டெம்பர் மாதம் வரை வலுவூட்டப்பட்டதன் காரணமாக மானியம் கிடைக்காதிருந்த போதும் ஏனைய நலன்களுக்காக கணக்குகள் காணப்படுகின்ற நபர்களின் விபரங்களை பரீட்சித்த போது வலுவூட்டப்படும் நபர்களின் சதவீதம் 01 அல்லது அதற்குக் குறைவான மாவட்டமாக கொழும்பு, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் புத்தளம் இனங்காணக்கூடியதாக இருந்ததுடன் 1995 இல் ஆரம்பிக்கப் பட்ட சமுர்த்தி செயற்திட்டத்தில் 28 வருடகாலத்தில் பதிவு செய்த நலனாளிகளை வலுவூட்டப்பட்டமை 3.6 சதவீத நலனாளிகளாக இருந்தமையால் இந்த சமுர்த்தி மானிய செயற்திட்டத்தின் வினைத்திறன் மிகவும் குறைவான மட்டத்தில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

62,943 நபர்களின் எண்ணிக்கையொன்று மானியம் கிடைக்காதிருந்த போதும் சமுர்த்தி செயற்திட்டத்தின் மூலம் வழங்கப்படுகின்ற ஏனைய நலன்கள் (சலுகை வட்டியின் அடிப்படையில் கடன் வழங்குதல், பிள்ளைகளுக்கு பாடசாலைகளில் உள்ளீர்த்தல், புலமைப்பரிசில் வழங்குதல், சலுகைக் கட்டண அடிப்படையில் மின்சார வசதிகளை வழங்குதல் போன்ற) இன் காரணமாக சமுர்த்தி

அங்கத்தவர்களில் இருப்பவர்களுக் கிடையே திறைசேரி நிதி ஏற்பாடுகளில் அவர்களுக்கும் மாதாந்தம் ரூபா 420 தொகை அவர்களின் கணக்குகளில் செலவு வைக்கப்படுகின்றது. அதனால் சமுர்த்தி நலனாளிகள் முழுமையாக வலுவூட்டப்பட்டிருந்த போதும் அவர்களுக்காகவும் அரசாங்கம் செலவினப் பொறுப்பொன்றைச் செய்வதற்கு ஏற்பட்டிருந்தது.

(ஆ) சமுர்த்தி வங்கிகளில் மானிய நலனாளிகளின் வங்கிக் கணக்குகளைப் பரிசோதனை செய்த போதும் சில மானிய நலனாளிகளால் கவனத்திற்கொள்ளக்கூடிய காலமாக தமது கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட மானியங்கள் பெறப்படாதிருந்தமையும் சில மானிய நலனாளிகளினால் கவனத்திற்கொள்ளக்கூடிய காலம் கடந்ததன் பின்னர் சில மாதங்களில் ஒன்று சேர்ந்த மானியங்கள் தமது நிதித் தேவைப் பிரகாரம் ஒரே தடவையில் கணக்கிலிருந்து பெறப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் இந்த செயற்திட்டத்தின் மூலம் பொருளாதார ரீதியாக கஷ்டத்திற்கு உட்பட்ட மக்களுக்கு விரைவாக நிதி உதவியினை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் சில மானிய நலனாளிகள் அந்த நலன்களை பெற்றிருக்கவில்லை.

(இ) கணக்காய்வு தெரிவுக்குட்பட்ட 27 சமுர்த்தி வங்கிகளில் பின்வரும் பிரகாரம் 13 வங்கிகளால் கணக்காய்வில் கோரப்பட்டிருந்த உரிய வங்கிகள் தொடர்பான மற்றும் வங்கி சமுர்த்தி கள உத்தியோகத்தர்கள் தொடர்பான தகவல்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

| | பிரதேச செயலகப் பிரிவு | சமுர்த்தி வங்கிகள் |
|---|---|---|
| 1. | அம்பலாந்தோட்ட | போலான |
| 2. | இப்பாகமுவ | கொக்கரல்ல |
| 3. | இப்பாகமுவ | தியதுரே |
| 4. | கல்கமுவ | சியம்பலன்கமுவ |
| 5. | கல்கமுவ | மஹகல்கடவல |
| 6. | கல்கமுவ | கல்கமுவ |
| 7. | கல்கமுவ | மகானன்னேரி |
| 8. | கல்கமுவ | பழுகந்தேவ |
| 9. | நொச்சியாகம | நொச்சியாகம |
| 10. | நொச்சியாகம | தொம்பவலகம |
| 11. | நொச்சியாகம | லிந்தவெவ |
| 12. | மண்முனை வடக்கு | கல்லடி |
| 13. | மண்முனை வடக்கு | இருதய புரம் |

## 3.2 முதியோர்களுக்கான நிதி படிகளை வழங்குதல் (சிரேஷ்ட பிரஜைகள் படி)

மீளாய்வாண்டில் 70 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களுக்காக ரூபா 5,474,711,400 தொகையும் நூறு வருடங்கள் பூர்த்தி செய்த முதியோர்களுக்காக ரூபா 7,102,500 தொகையும் படியாக செலுத்தப்பட்டிருந்தது.

### 3.2.1 நிறுவன ரீதியான தயாரிப்பு

2000 இன் 09 ஆம் இலக்க முதியோர்களின் உரித்தினைப் பாதுகாக்கும் சட்டத்தின் பிரகாரம் 60 வயதைப் பூர்த்தி செய்த முதியோருக்காக முதியோராக அர்த்தப்படுத்தப்பட்டுள்ளதுடன் 2012 இன் பாதீட்டு முன்மொழிவின் கீழ் படி நலனாளிகளுக்காக தகைமையாக 70 வயதைப் பூர்த்தி செய்தல் காண்பிக்கப்பட்டிருந்தது.

ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் முன்மொழிவுத் திட்டத்தின் கீழ் முதியோர்களுக்கான நிதி படிகளை வழங்கும் போது குறைந்த வருமானம் பெறுபவர் மற்றும் ஆபத்திற்கு உட்பட்டுள்ள முதியோர்களுக்குரிய நலன் தொகுதியாக தெரிவு செய்யப்படுகின்றது. இந்த முதியோர்களுக்காக செலுத்தும் போது 70 வயதிற்கு மேற்பட்ட மற்றும் 100 வயதிற்கு மேற்பட்ட (நூறு வருடங்கள் பூர்த்தி) ஆக இரண்டு தொகுதியின் கீழ் படிகள் செலுத்தப் படுகின்றது. அவ்வாறே முதியோர் படிகளைச் செலுத்தும் போது கொடுப்பனவின்

உள்ளபடியான மற்றும் காத்திருத்தல் பட்டியல் போன்ற இரண்டு தொகுதிகளின் கீழும் மேற்கொள்ளப்படுகின்றது. உள்ளபடியான படி செலுத்தும் போது அதன் உள்ளபடியான படிக்கு மேலதிகமாக முதியோர்களுக்காக மேதிகப் படியும் (top-up) வழங்கப்படுகின்றது. படிகளைப் பெற்றுக்கொள்வதற்காக கோருவதற்கு முதியோர்களுக்கு முதியோர் குழு ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் முதியோர் தொடர்பாக நடவடிக்கை எடுக்கின்ற பிரதான நிறுவனம் மகளிர் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற முதியோர் செயலகமாக இருந்ததுடன் அதன் பிரகாரம் மேற்கூறப்பட்ட மாதங்களுக்காக உள்ளபடியான முதியோர் நிதி மானியப் படிகளை வழங்குவதற்காக தகைமை பெற்ற நபர்கள் எண்ணிக்கை பின்வருமாறு.

| | உள்ளபடியான படி | | மேலதிக படி | |
|---|---|---|---|---|
| மாதம் | 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களின் எண்ணிக்கை | நூறு வயதைப் பூர்த்தி செய்த முதியோர்கள் எண்ணிக்கை. | 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களின் எண்ணிக்கை | நூறு வயதைப் பூர்த்தி செய்த முதியோர்கள் எண்ணிக்கை. |
| செப்டெம்பர் | 416,178 | 466 | 235,968 | 243 |
| ஒக்டோபர் | 416,564 | 467 | 232,936 | 265 |
| நவம்பர் | 416,564 | 467 | 232,936 | 259 |

### 3.2.2 முதியோர்களுக்காக கொடுப்பனவு செய்தல்

#### 3.2.2.1. 70 வயதினை விட மேற்பட்ட முதியோர்களுக்கான படிகளை செலுத்துதல்.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குறைந்த வருமானம் பெறும் முதியோர் படிகளைச் செலுத்துவதற்காக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் மதிப்பீடு செய்யப்பட்ட நலனாளிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மாதத்திற்காகவும் 132,500 எண்ணிக்கை வீதமாக இருந்த போதிலும் கொடுப்பனவிற்காக சமுர்த்தி வங்கிற்கு பணம் செலவு வைக்கப்பட்ட நலனாளிகளின் எண்ணிக்கை 115,000 இற்கு அண்மித்த எண்ணிக்கையாக இருந்தமையால் உரிய மதிப்பீடு 13 சதவீத அளவில் உயர் பெறுமதியைக் கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) அவ்வாறே இலங்கையில் முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக காணப்படுகின்ற பிரதான நிறுவனமான தேசிய முதியோர் செயலகத்தின் தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு காலப் பகுதிக்காக ஒவ்வொரு மாதத்திற்காகவும் இனங்காணப்பட்ட காத்திருத்தல் பதிவேட்டில் இடப்பட்ட நலனாளிகளின் எண்ணிக்கை 131,978 ஆக இருந்த போதிலும் 2022 செப்டெம்பர், ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களுக்காக முறையே ரூபா 115,037, 115,018 மற்றும் 115,753 ஆன நலனாளிகளின் எண்ணிக்கைக்கு செலுத்துவதற்காக சமுர்த்தி வங்கிக்கு பணம் செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இனங்காணப்பட்ட காத்திருத்தல் பதிவேட்டில் நலனளாகளிகள் மற்றும் வங்கிக்கு பணம் செலவு வைக்கப்பட்ட நலனாளிகளுக்கிடையே 13 சதவீத அளவில் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(இ) அவ்வாறே சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் 2022 செப்டெம்பர், ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களுக்காக கொடுப்பனவு செய்வதற்காக சமுர்த்தி வங்கிற்கு பணம் செலவு வைத்த நலனாளிகளின் எண்ணிக்கை சமுர்த்தி வங்கியினால்

உள்ளபடியாக நிதி செலுத்தப்பட்ட நலனாளிகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டுப்பார்க்கும் போது மேலதிகப் படிக்காக வங்கிக்கு பணம் செலவுவைக்கப்பட்டுள்ள அளவு 11 சதவீதம் முதல் 13 சதவீதம் ஆன உயர் பெறுமதியைக் கொண்டிருந்தமை காத்திருத்தல் பட்டியலில் நலனாளிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட அது 28 சதவீத உயர் பெறுமதியை கொண்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. (இணைப்பு 01)

(ஈ) மேற்கூறப்பட்ட நிலைமையின் காரணமாக கொடுப்பனவு செய்வதற்கு சமுர்த்தி வங்கிக்கு செலவு வைக்கப்பட்ட தொகையில் இருந்து மேலதிகப் படி 11 – 14 சதவீதத்திற்கிடையிலான அளவு காத்திருத்தல் பதிவேடுகளுக்கு கொண்டுவரப்பட்ட படி 28 சதவீத அளவு சமுர்த்தி வங்கிக்கு எஞ்சியிருந்தமையும் அதன் பிரகாரம் உள்ளபடியாக செலுத்த வேண்டிய நலனாளிகள் சரியாக இனங்காணப்படாதிருந்தமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. (இணைப்பு 02)

### 3.2.2.2 100 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கான கொடுப்பனவு செய்தல்.

(அ) சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் நூறு வருடங்களைப் பூர்த்தி செய்த நபர்களின் படிகளைச் செலுத்துவதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட நலனாளிகளின் எண்ணிக்கை மற்றும் கொடுப்பனவு செய்வதற்காக சமுர்த்தி வங்கிக்கு பணம் நிதி செலவு வைக்கப்பட்ட நலனாளிகளின் எண்ணிக்கையை ஒப்பிட்டுப்பார்த்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

| | மாதம் | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | செப்டெம்பர் | | | | ஒக்டோபர் | | | | நவம்பர் | | | |
| படிகள் | மதிப்பீடு செய்யப்பட்ட நலனாளிகளின் எண்ணிக்கை | கொடுப்பனவு செய்வதற்கு வங்கிக்கு பணம் செலவுவைக்கப்பட்ட நலனாளிகளின் எண்ணிக்கை | வேறுபாடு | வேறுபாட்டின் சதவீதம் % | மதிப்பீடு செய்யப்பட்ட நலனாளிகளின் எண்ணிக்கை | கொடுப்பனவு செய்வதற்கு வங்கிக்கு பணம் செலவுவைக்கப்பட்ட நலனாளிகளின் எண்ணிக்கை | வேறுபாடு | வேறுபாட்டின் சதவீதம் % | மதிப்பீடு செய்யப்பட்ட நலனாளிகளின் எண்ணிக்கை | கொடுப்பனவு செய்வதற்கு வங்கிக்கு பணம் செலவுவைக்கப்பட்ட நலனாளிகளின் எண்ணிக்கை | வேறுபாடு | வேறுபாட்டின் சதவீதம் % |
| உள்ளபடியான | 478 | 520 | 42 | 8 | 478 | 517 | 39 | 8 | 478 | 577 | 99 | 20 |
| மேலதிக | 289 | 165 | (124) | (42.9) | 289 | 262 | (27) | (9) | 289 | 262 | (27) | (9) |

மூலம்: சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் (மதிப்பீடு/ *All Island Summary Report*)

மேற்கூறப்பட்ட தகவல்களின் பிரகாரம் உள்ளபடியான படியினைச் செலுத்துவதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட நலனாளிகளின் எண்ணிக்கைகளை விட 8 சதவீதத்திற்கும் 20 சதவீதத்திற்கும் இடையிலான எண்ணிக்கையில் முதியோர் மற்றும் மேலதிகப் படி செலுத்துவதற்காக 09 சதவீத்திற்கும் 42 சதவீதத்திற்கும் இடையிலான அளவு குறைவாக வங்கிக்கு பணம் செலவு வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) தேசிய முதியோர் செயலகம் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திலிருந்து கிடைத்த தகவல்களின் பிரகாரம் 100 வயதிற்கு மேற்பட்ட முதியோர் படிகள் கிடைத்த உள்ளபடியான நலனாளிகளின் எண்ணிக்கை அதற்காக இனங்காணப்பட்ட நலனாளிகளின் எண்ணிக்கையை விட கவனத்திற்கொள்ளக்கூடிய அளவு குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தமை பின்வரும் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

| | மாதம் | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | செப்டெம்பர் | | | | ஒக்டோபர் | | | | நவம்பர் | | | |
| படிகள் | முதியோர் செயலக அலுவலகத்தின் பிரகாரம் நலன்கள் செலுத்த வேண்டிய எண்ணிக்கை | சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பிரகாரம் நலன்கள் செலுத்தப்பட்ட எண்ணிக்கை | வேறுபாடு | வேறுபாட்டின் சதவீதம் % | முதியோர் செயலக அலுவலகத்தின் பிரகாரம் நலன்கள் செலுத்த வேண்டிய எண்ணிக்கை | சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பிரகாரம் நலன்கள் செலுத்தப்பட்ட எண்ணிக்கை | வேறுபாடு | வேறுபாட்டின் சதவீதம் % | முதியோர் செயலக அலுவலகத்தின் பிரகாரம் நலன்கள் செலுத்த வேண்டிய எண்ணிக்கை | சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பிரகாரம் நலன்கள் செலுத்தப்பட்ட எண்ணிக்கை | வேறுபாடு | வேறுபாட்டின் சதவீதம் % |
| உள்ளபடியான | 466 | 387 | (79) | (16.95) | 467 | 378 | (89) | 19.05 | 467 | 374 | (93) | (19.9) |
| மேலதிக | 243 | 177 | (66) | (27.16) | 265 | 194 | (71) | 26.79 | 259 | 192 | (67) | (25.8) |

மூலம்: தேசிய முதியோர் செயலகம் (அந்தந்த மாதங்களுக்காக இனங்காணப்பட்ட நலனாளிகள் பதிவேடு) சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் ( *All Island Summary Report*)

(இ) மேற்கூறப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2022 செப்டெம்பர் மாதம் உள்ளபடியாக செலுத்தப்பட்ட நலனாளிகளின் எண்ணிக்கை 387 ஆக இருந்தமையும் இந்த எண்ணிக்கை ஒக்டோபர் மாதம் வரையில் 378 ஆக குறைவடைந்திருந்தமையும் எனினும் மேலதிகப் படி செலுத்தப்பட்ட நலனாளிகளின் எண்ணிக்கை 177 முதல் 194 வரை அதிகரித்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது. இவ்வாறு உள்ளபடியான நலனாளிகளின் எண்ணிக்கை குறைவடையும் போது மேலதிகப் படி செலுத்தப்பட்ட நலனாளிகளின் எண்ணிக்கை அதிகரித்திருந்தமை அசாதாரண நிலைமையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) அவ்வாறே சமுர்த்தி திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட ஒட்டுமொத்த நாட்டிற்கான பொழிப்பு அறிக்கையின் பிரகாரம் இந்த முதியோர்களுக்காக செலுத்துவதற்கு சமுர்த்தி வங்கிக்கு செலவுவைக்கப்பட்ட தொகையில் கீழே குறிப்பிடப்படுகின்ற பிரகாரம் சேமிப்புக்கள் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| | உள்ளபடியான படி செலுத்துதல் | | | | மேலதிகப்படி செலுத்துதல் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **மாதம்** | கொடுப்பனவு செய்வதற்காக சமுர்த்தி வங்கிக்கு செலவு வைக்கப்பட்ட தொகை (ரூபா) | சமுர்த்தி வங்கியினால் செலுத்தப்பட்ட தொகை (ரூபா) | வேறுபாடு (ரூபா) | வேறுபாட்டின் சதவீதம் % | கொடுப்பனவு செய்வதற்காக சமுர்த்தி வங்கிக்கு செலவு வைக்கப்பட்ட தொகை (ரூபா) | சமுர்த்தி வங்கியினால் செலுத்தப்பட்ட தொகை (ரூபா) | வேறுபாடு (ரூபா) | வேறுபாட்டின் சதவீதம் % |
| செப்டெம்பர் | 2600000 | 1935000 | (665000) | (25.57) | 412500 | 442500 | 30000 | 6.77 |
| ஒக்டோபர் | 2585000 | 1890000 | (695000) | (26.88) | 655000 | 485000 | (170000) | (25.95) |
| நவம்பர் | 2885000 | 1870000 | (1015000) | (35.18) | 655000 | 480000 | (175000) | (26.71) |

மூலம்: சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் ( *All Island Summary Report*)

### 3.2.3 தெரிவிற்காக தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் முதியோர்களுக்காக வழங்கப்பட்ட கொடுப்பனவுகள்.

தெரிவாக தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களுக்குரிய முதியோகர்களுக்கான செலுத்தப்பட்ட கொடுப்பனவு தகவல்கள் பின்வருமாறு

| மாவட்டம் | மாதம் | சமுர்த்தி வங்கிக்கு பணம் கிடைத்தமை | | நலனாளிகளுக்கு பணம் செலுத்துதல் | | செலுத்தப்படாத தொகை (ரூபா) | செலுத்தப்படாத சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | மொத்த நலனாளிகளின் எண்ணிக்கை | கிடைத்த பணம் (ரூபா) | மொத்த நலனாளிகளின் எண்ணிக்கை | செலுத்திய பணம் (ரூபா) | | |
| | செப்தெம்பர் | 24,132 | 99,127,000 | 21,389 | 81,977,200 | 17,149,800 | |
| அனுராதபுரம் | ஒக்டோபர் | 24,132 | 99,142,000 | 21,461 | 82,609,700 | 16,532,300 | 17.28% |
| | நவம்பர் | 24,800 | 101,894,500 | 21,708 | 83,682,100 | 18,212,400 | |
| மொத்தம் | | | **300,163,500** | | **248,369,000** | **51,894,500** | |
| | செப்தெம்பர் | 16,300 | 63,212,800 | 15,421 | 57,721,500 | 5,491,300 | |
| அம்பாந்தோட்டை | ஒக்டோபர் | 16,693 | 64,428,700 | 15,563 | 58,310,200 | 6,118,500 | 9.92% |
| | நவம்பர் | 16,657 | 64,412,600 | 15,583 | 58,298,000 | 6,114,600 | |
| மொத்தம் | | | **192,054,100** | | **174,329,700** | **17,727,400** | |
| | செப்தெம்பர் | 45,710 | 150,919,900 | 43,964 | 138,444,700 | 12,475,200 | |
| குருணாகல் | ஒக்டோபர் | 45,771 | 148,086,800 | 43,982 | 138,117,600 | 9,969,200 | 7.32% |
| | நவம்பர் | 45,776 | 148,096,300 | 43,902 | 137,776,200 | 10,320,100 | |
| மொத்தம் | | | **447,103,000** | | **414,338,500** | **32,764,500** | |
| | செப்தெம்பர் | 12,593 | 46,154,300 | 12,341 | 43,248,400 | 2,905,900 | |
| மொனராகலை | ஒக்டோபர் | 12,668 | 46,310,300 | 12,353 | 43,095,300 | 3,215,000 | 6.78% |
| | நவம்பர் | 12,668 | 46,314,300 | 12,334 | 43,023,200 | 3,291,100 | |
| மொத்தம் | | | **133,778,900** | | **129,366,900** | **9,412,000** | |
| | செப்தெம்பர் | 13,776 | 45,245,500 | 13,627 | 40,684,000 | 4,561,500 | |
| மட்டக்களப்பு | ஒக்டோபர் | 13,776 | 41,599,500 | 13,618 | 40,572,900 | 1,026,600 | 5.19% |
| | நவம்பர் | 13,776 | 41,599,500 | 13,606 | 40,510,500 | 1,089,000 | |
| மொத்தம் | | | **128,444,500** | | **121,767,400** | **6,677,100** | |

(தகவல் பிரிவு: சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்)

இதன் பிரகாரம் மேற்கூறப்பட்ட ஒவ்வொரு மாவட்டங்களும் செலுத்தப்படாது சேமிக்கப்பட்ட பணத்தின் அளவு 5 சதவீதத்திற்கும் 18 சதவீதத்திற்கும் இடையிலான பெறுமதியை கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் முதியோர் மரணமடைந்தமை, வதிவிடம் மாற்றப் பட்டிருந்தமை, இரட்டை கணிப்பீடுகள் போன்ற நிலைமை இந்த சேமிப்புக்களுக்கு காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. மரணமடைந்தமை, வதிவிடம்

மாற்றப்பட்டிருந்த நிலைமையில் இயற்கையாக நிலைமையாக இருந்த போதிலும் இரட்டை கணிப்பீட்டு நிலைமை போன்ற முன்னேரே இனங்காணப்படாமையின் காரணமாக மேலதிக பணத்தின் அளவு இவ்வாறு சமுர்த்தி வங்கிக்கு உட்செல்வதற்கு காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3.2.4 பௌதீக ரீதியில் பரிசோதனை செய்யப்பட்ட பிரதேச செயலகங்களுக்குரியதாக மேற் கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்.**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) பயனாளிகளின் இரட்டைத் தன்மை**

(i) கல்கமுவ பிரதேச செயலகப் பிரிவில் முதியோர்களுக்கு மேலதிகப் படிகளைச் (top-up) செலுத்துவதற்காக கிடைத்த தொகையில் மீளாய்வாண்டு காலப்பகுதியில் ஒவ்வொரு மாத இறுதியிலும் 10 சதவீதத்திற்கு அண்ணளவான தொகை சேமிக்கப்பட்டிருந்ததுடன் நலனாளிகள் இரட்டைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டமையை இந்த நிலைமைக்கு காரணமாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அவ்வாறே காத்திருத்தல் பட்டியலில் நலனாளிகளுக்காக கிடைத்த தொகையிலும் மீளாய்வாண்டு காலப்பகுதியில் ஒவ்வொரு மாத இறுதியிலும் 14 இற்கும் 18 சதவீதத்திற்கும் இடையிலான அளவு சேமிக்கப் பட்டிருந்ததுடன் இந்த நிலைமையும் நலனாளிகள் இரட்டை கணிப்பீட்டிற்கு உட்பட்டதன் காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. (இணைப்பு 03)

(ii) அம்பலாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவிலும் மேலதிகப் படி செலுத்துவதற்காக கிடைத் தொகையில் 06 சதவீதத்திற்கும் 08 சதவீதத்திற்கும் இடையிலான அளவு சேமிக்கப்பட்டிருந்த துடன் இந்த நிலைமையும் இரட்டைக் கணிப்பீட்டின் காரணமாக ஏற்பட்டிருந்தது. (இணைப்பு 03)

(iii) பளுகெஸ்வெவ பிரதேச செயலகப் பிரிவில் முதியோர் மேலதிகப் படி செலுத்துவதற்காக கிடைத்த தொகையில் ஒவ்வொரு மாத இறுதியிலும் 33 சதவீதத்திற்கு அண்ணளவான தொகை ஒன்று சேமிக்கப்பட்டிருந்ததுடன் நலனாளிகள் இரட்டை கணிப்பீட்டிற்கு உட்பட்டமை காரணமாக இருந்தது. (இணைப்பு 03)

(iv) இப்பாகமுக பிரதேச செயலகப் பிரிவில் காத்திருத்தல் பட்டியலில் நலனாளிகளுக்காக செலுத்துவத்றகு கிடைத்த தொகையில் 12 சதவீதத்திற்கு அண்ணளவான தொகை ஒவ்வொரு மாத இறுதியின் போதும் சேமிக்கப்பட்டிருந்ததுடன் இந்த நிலைமையும் நலனாளிகள் இரட்டைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டமை காரணமாக இருந்தது. (இணைப்பு 03)

2022 ஆம் ஆண்டின் இறுதி வரையில் சமுர்த்தி வங்கிக்கு சேமிக்கப்பட்ட தொகை சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப் பட்டிருந்த போதிலும் உரிய பிரதேச செயலகங்களின் மூலம் நலனாளிகள் சரியாக இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்காமை இவ்வாறு இரட்டைக் கணிப்பீடு ஏற்படுவதற்கும் மற்றும் சமுர்த்தி வங்கிக்கு மேலதிகமாக செல்வதற்கும் காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. (இணைப்பு 03)

**(ஆ) வங்கிக் கணக்குகள் காணப்படாமை.**

நொச்சியாகம பிரதேச செயலகப் பிரிவில் காத்திருத்தல் பதிவேட்டில் நலனாளிகளில் 16 சதவீதத்திற்கு அண்ணளவான தொகைக்கு நலன்களை பெற்றுக்கொள்ள

முடியாதிருந் ததுதடன் வங்கி கணக்கு காணப்படாமை அந்த நிலைமைக்கு காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. (இணைப்பு 03)

### 3.2.5 கொடுப்பனவு செய்யும் போது ஒரே முறைமையினைப் பின்பற்றாமை.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இந்த செயற்திட்டத்தின் கீழ் படிகளை வழங்கும் போது அதுவரை முதியோர் படி நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடங்கியிருந்த முதியோர்கள் காத்திருத்தல் பதிவேட்டில் இருந்த முதியோர்களும் சமுர்த்தி வங்கி கணக்குகளை ஆரம்பிக்க வேண்டி இருந்தது. இந்த முறைமையின் மூலம் காணப்படுகின்ற பணத்தை மாற்றும் முறைமை (Existing Cash Transfer Mechanisms) ஒழுங்குமுறையாக (Streamline) மேற்கொள்ளுதல் எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் முதியோர்களுக்காக படியினை வழங்கும் போது செப்டெம்பர், ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களுக்குரிய முதியோர் படி சமுர்த்தி வங்கி ஊடாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் 2022 திசெம்பர் மற்றும் 2023 சனவரி மாதங்களுக்காக அரசாங்கத்தின் நிதி ஏற்பாட்டின் மூலம் வழங்கப்பட்டிருந்த படிகள் மீண்டும் முன்னர் படியே தபால் அலுவலகங்கள் ஊடாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை எங்களால் பௌதீக பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பிரதேச செயலகங்களுக்கு உரியதாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது அவதானிக்கப் பட்டது.

அதன் பிரகாரம் சமுர்த்தி வங்கி கணக்கு ஆரம்பித்து கொடுப்பனவு செய்வதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட காணப்படுகின்ற பணத்தை மாற்றும் முறைமை ஒழுங்குமுறைப்படுத்தும் (Streamline) நோக்கம் புறக்கணிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) இதன் பிரகாரம் கொடுப்பனவு செய்யும் போது ஒரே முறைமையைப் பின்பற்றாமையின் காரணமாக படி பெறுநர்களில் அநேகமான முதியோர்கள் வசதியீனத்திற்கு உட்பட்டிருந்தமையும் அதனால் திசம்பர் மற்றும் சனவரி மாதங்களுக்குரிய சில முதியோர்களுக்கு தமது படிகளை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்ததன் காரணமாக அந்தப் பணம் மிகைக் கட்டணமாக இருந்தமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப் பட்டது. விபரம் பின்வருமாறு.

| | மாதம் | | | |
|---|---|---|---|---|
| | திசெம்பர் | | சனவரி | |
| **பிரதேச செயலகம்** | **படிகள் பெற்றுக்கொள்ளாத நலனாளிகளின் எண்ணிக்கை** | **மிகைக் கட்டணமாக இடப்பட்ட தொகை ரூபா.** | **படிகள் பெற்றுக்கொள்ளாத நலனாளிகளின் எண்ணிக்கை** | **மிகைக் கட்டணமாக இடப்பட்ட தொகை ரூபா.** |
| நெச்சியாகம | 16 | 30,400 | 12 | 22,800 |
| கல்கமுவ | 121 | 229,900 | 78 | 148,200 |
| தனமன்வில | 101 | 191,900 | 32 | 60,800 |
| கதிர்காமம் | 36 | 68,400 | 31 | 58,900 |
| பளுகெஸ்வெவ | 45 | 85,500 | 17 | 32,300 |
| மண்முனை- மேற்கு | 30 | 57,000 | 10 | 19,000 |
| மண்முனை - வடக்கு | 22 | 41,800 | 35 | 66,500 |
| இப்பாகமுவ | 112 | 212,800 | 82 | 155,800 |

(இ) செயற்திட்ட நிருவாக கைநூலின் பிரகாரம் குறைந்த வருமானம் பெறும் முதியோர்கள் படி செலுத்தும் போது சமுர்த்தி வங்கியில் பேணிச்செல்லப்படுகின்ற சேமிப்பு கணக்கு ஊடாக மாத்திரம் உரிய கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதனால் நலனாளிகள் அவர்கள் குடியிருக்கின்ற சமுர்த்தி வங்கி வலயங்களுக்கு உரிய சமுர்த்தி வங்கியில் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் படிகளை பெற்றுக் கொள்வதற்கு வங்கிக்கு செல்லும் போது போக்குவரத்து கஷ்டங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தமையும் அது அவர்களின் வயதுடனான நிலைமையுடன் ஒப்பிடும் போது கஷ்டமான நிலைமை ஏற்பட்டிருந்தமை எங்களால் பௌதீக பரிசோதனை மேற்கொள்ளப் பட்ட பிரதேச செயலக மட்டத்தில் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் பின்வருமாறு அவதானிக்கப்பட்டது. விஷேடமாக பிரதேச செயலகங்களினால் தபால் அலுவலகங்கள் ஊடாக முதியோர்படி செலுத்தும் போது தபால் அலுவலகங்கள் அதிகமான எண்ணிக்கையான தபால் அலுவலகங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்ட படிகளைச் செலுத்துதல் முதியோர் குடியிருக்கின்ற பிரதேசங்களுக்கு அண்மித்த இடங்களாக இருந்ததன் காரணமாக அவர்களுக்கு வசதியாக நுழைவதற்குரிய இயலுமை காணப்பட்டி ருந்தமையும் சமுர்த்தி வங்கி ஊடாகச் செலுத்தும் போது தமது குடியிருப்பு பிரதேசத்திலிருந்து அதிக தூரம், அதிகரித்த தொகை மற்றும் காலங்களை விரையப் படுத்துவதற்கு ஏற்பட்டமையை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

| பிரதேச செயலகம் | முதியோர் படி செலுத்துவதற்காக பயன்படுத்தப்பட்ட தபால் அலுவலகங்களின் எண்ணிக்கை | ஆசிய அபிவிருத்தி வங்கி செயற்திட்டத்தின் கீழ் படிகளைச் செலுத்துவதற்காக காணப்படுகின்ற சமுர்த்தி வங்கிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| அம்பலாந்தோட்டை | 11 | 04 |
| கதிர்காமம் | 03 | 01 |
| தனமல்வில, | 07 | 02 |
| கல்கமுவ | 12 | 05 |
| நொச்சியாகம | 11 | 03 |
| பலுகஸ்வெவ | 05 | 01 |
| இப்பாகமுவ | 18 | 05 |

### 3.2.6 குறித்துரைத்த திகதியில் செலுத்துதல்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) நிறுவனத்திற்கிடையே பண பரிமாற்றம்**

சமூக நலன்புரி மற்றும் ஆரம்ப கைத்தொழில் அமைச்சு செயலாளரின் 2018 ஒக்டோபர் 15 ஆம் திகதிய இலக்கம் NSE/DEV/03/04 என்ற சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு மாதமும் 15 ஆம் திகதி வரையில் முதியோர் படி செலுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் படல் வேண்டும். இந்தப் படிகளைச் செலுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கும் தேசிய திட்டமிடல் திணைக்களத்திலிருந்து சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திலிருந்து முர்த்தி வங்கிக்கும் பணம் மாற்றப்பட்டிருந்த திகதி பின்வருமாறு.

| மாதம் | ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு பணம் கிடைத்த திகதி | தேசிய திட்டமிடல் திணைக்களத்திலிருந்து சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு பணம் கிடைத்த திகதி | நலனாளிகளின் தொகுதி | சமுர்த்தி வங்கியிலிருந்து முர்த்தி திணைக்களத்திலிருந்து முர்த்தி வங்கிக்கு பணம் கிடைத்த திகதி (2022ஆம் ஆண்டு) | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ஹோனாகம | கல்கமுவ | நொச்சியாகம | தனமல்வில | கதிர்காமம் | பலுகஸ்வெவ | புளியந்தீவு | புதுமண்டபத்தடி | இப்பாகமுவ |
| செப்டெம்பர் | 09/30 | 09/30 | 1 | 10/11 | 10/11 | 10/13 | 10/11 | 10/11 | 10/11 | 10/11 | 10/11 | 10/11 |
| | | | | | 11/16 | 11/17 | 11/17 | 11/17 | 10/17 | | | 12/13 |
| | | | 2 | 10/17 | 10/17 | 10/17 | 10/17 | 10/17 | 10/17 | 10/17 | 10/17 | 10/17 |
| | | | 3 | 10/18 | 10/12 | 10/18 | 10/12 | 10/18 | - | 10/18 | 10/12 | 10/18 |
| | | | | | 11/16 | | | | | | | 11/16 |
| ஒக்டோபர் | 09/30 | 10/17 | 1 | 11/18 | 11/17 | 11/18 | 11/18 | 11/18 | 11/17 | 11/18 | 11/18 | 11/17 |
| | | | | | | | | | | | | 12/13 |
| | | | 2 | 11/28 | 11/28 | 11/28 | 11/28 | 11/28 | 11/28 | 11/28 | 11/28 | 11/28 |
| | | | 3 | 11/23 | 11/22 | 11/23 | 11/23 | 11/23 | - | 11/23 | 11/23 | 11/22 |
| நவம்பர் | 11/01 | | 1 | 12/16 | 12/15 | 12/16 | 12/16 | 12/16 | 12/15 | 12/16 | 12/16 | 12/15 |
| | | 11/14 | 2 | 12/16 | 12/16 | 12/16 | 12/16 | 12/16 | 12/16 | 12/16 | 12/16 | 12/16 |
| | | 12/05 | 3 | 12/16 | 12/15 | 12/16 | 12/16 | 12/16 | 12/29 | 12/16 | 12/16 | 12/15 |

1 – உள்ளபடியான 2- மேலதிக 3-. காத்திருத்தல்.

அதன் பிரகாரம் மீளாய்வாண்டு காலப்பகுதியில் முதியோர்களுக்குரிய படிகள் அந்தந்த மாதங்களின் 15 ஆம் திகதி வரையில் செலுத்துவதற்கு முடியுமான வகையில் கிடைக்கப் பெறாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ) நலனாளிகளின் கணக்கிற்கு தாமதமாக செலவு வைத்தல்.**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் உதவியின் கீழ் நிதி படிகளை வழங்குவதற்கு தீர்மானிக்கும் குறைந்த வருமானம் பெறும் கஷ்டத்திற்கு உட்பட்ட நபர்கள். (சமுர்த்தி, சிறுநீரக, ஊனமுற்றோர் மற்றும் முதியோர்கள்) இற்காக அவசர உதவியாக உரிய படியினை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எனினும் சமுர்த்தி வங்கிக்கு

கிடைத்த பணம் நலனாளிகளின் கணக்கிற்கு செலவு வைக்கும் போது தாமதம் ஏற்பட்டிருந்தமை இணைப்பு 04 இல் காண்பிக்கப்பட்ட பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

(ii) நலனாளிகளின் கணக்கிற்கு செலவு வைப்பதற்காக கிடைத்த பணம் உரிய கணக்கிற்கு மாற்றப்பட்டதன் பின்னர் நலனாளிகளின் கணக்கிற்கு மாற்றுதல் தொடர்பான குறிப்பினை பரீட்சித்த போது சில வங்கிகளினால் பேரேட்டு கணக்குகளுக்குரிய கொடுக்கல் வாங்கல்கள் தெளிவாக இனங்காணக்கூடிய வகையில் பதிவுகள் உள்ளடக்கப்படாதிருந் தமையும் அவதானிக்கப்பட்டது.

(iii) அவ்வாறே நொச்சியாகம சமுர்த்தி வங்கி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட (உள்ளபடியான மேலதிக காத்திருத்தல்) சகல முதியோர் படிகளும் சர்வதேச நிதி நிறுவனங்களில் இருந்து படிகளைச் செலுத்துவதற்காக வழங்கப்பட்ட நிதியம் கணக்கு (4062) ஊடாக அமுல்படுத்தப்படுகின்றமையால் ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் உதவியின் கீழ் வழங்கப்பட்ட பணம் கணக்கு வைத்தல் தொடர்பாக வழங்கப்பட்டிருந்த சுற்றறிக்கை ஆலோசனையின் படி முதியோர் படி செலுத்துவதற்காக 4065 கணக்கு திறக்கப்படாதிருந்த மையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.2.7 கணக்கு பதிவுகளின் செயற்படுகள்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வழங்கப்பட்ட நிதி படிகளை கணக்கீடு செய்தல் தொடர்பாக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் சமுர்த்தி வங்கி முகாமையாளர்ளை அழைத்து 2022 ஆகஸ்ட்ட 29 ஆம் திகதி மற்றும் 2022/11 ஆம் இலக்க சமுர்த்தி வங்கி சுற்றறிக்கை மற்றும் 2022 திசெம்பர் 02 ஆம் திகதிய இலக்கம் DSD/HO/05/MF/01 என்ற சுற்றறிக்கை விநியோகிக்கப்பட்டிருந்த போதும் வங்கியினால் மேலதிகப்படி மற்றும் காத்திருத்தல்படி கணக்கு வைக்கும் போது ஒரே முறைமை பின்பற்றப்படாமல் 4062 (சர்வதேச நிதி நிறுவனங்களின் படிகளை செலுத்துவதற்காக வழங்கப்பட்ட நிதியக் கணக்கு) மற்றும் 4065 (முதியோர் படி கணக்கு) இரண்டு கணக்குகளும் பல்வேறு வகையில் பயன்படுத்தப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் அந்தந்த வங்கிகளினால் சுற்றறிக்கை விளங்கிக் கொள்ளப்பட்டுள்ள முறையில் மற்றும் சுற்றறிக்கை ஆலோசனை உரிய பிரகாரம் தொடர்புபடுத்தப்படாமை இந்த நிலைமை ஏற்படுபடுவதற்கு காரணமாக இருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் (நுண் நிதி) இனால் விநியோகிக்கப்பட்ட 2022 திசெம்பர் 02 ஆம் திகதிய DSD/HO/05/MF/01 சுற்றறிக்கை மூலம் பேரேட்டுக் கணக்கு இலக்கம் 4062 ''சர்வதேச நிதி நிதி நிறுவனங்களிலிருந்து படிகளைச் செலுத்துவதற்காக வழங்கப்பட்ட நிதியக் கணக்கு'' ஆக திருத்தப்பட்டு பேணிச்செல்லுமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் நோனாகம, கனமல்வில, கதிர்காமம், புளியந்தீவு, பலுகஸ்வெவ மற்றும் இப்பாகமுவ என்ற வங்கிகள் முன்னைய பிரகாரம் அது புதிய CERC - நிதியீட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உலக வங்கியினால் வழங்கப்பட்ட நிதிய கணக்கிலேயே பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை.

### 3.2.8 நலனாளிகளின் தகவல்கள் கிடைக்காமை

கணக்காய்வின் தெரிவுக்கு உட்படுத்தப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் முதியோர் படி உரித்தான நலனாளிகள் அந்த நலனாளிகளின் நலன்கள் கிடைப்பனவு தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக வினாக்கொத்துக்கள் உரிய பிரதேச செயலகங்கள் ஊடாக நலனாளிகளுக்கு வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இப்பாகமுவ, கல்கமுவ மற்றும் பலுகஸ்வெவ என்ற பிரதேச செயலகங்களிலிருந்து உரிய தகவல்கள் கிடைத்திருக்கவில்லை.

## 3.3 ஊனமுற்ற நபர்களுக்கான நிதி படிகளை வழங்குதல்.

ஊனமுற்றவர்களின் உரிமைகளை பாதுகாத்தல் தொடர்பாக இலங்கையில் செயல்படுகின்ற பிரதான நிறுவனம் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் செயற்படுகின்ற ஊனமுற்றோர்களுக்கான தேசிய செயலகம் ஆகும். 1996 இன் 28 ஆம் இலக்க ஊனமுற்றோர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் சட்டத்தின் பிரகாரம் ‘‘ஊனமுற்றோர்கள்’’ இற்காக சமமாக உள்ள அல்லது அவ்வாறின்றிய உடலியல் அல்லது உளரீதியான இயலுமை ஏதாவது குறைபாட்டின் விளைவாக வாழ்க்கையே தேவையான முழுமையான அல்லது பகுதியாக அல்லது தங்களால் தமக்காக நிறைவேற்றுவதற்கு முடியாத நபர்கள் என கருதப்படுகின்றது. இந்த ஊனமுற்றவர்களுக்கு மருத்துவ ரீதியான மற்றும் சமூக பொருளாதார ரீதியில் நியாயமானது என பிரிவுபடுத்தப் படுகின்றது. அதன் பிரகாரம் ஊனமுற்றவர்களுக்கான கேட்டகல் கதைத்தல் பார்வை சுய நினைவு மற்றும் உளவியல் பாதிப்பு மற்றும் ஏனையவைகளின் காரணத்தினால் ஊனமுற்றோராக சமூக விஞ்ஞான ரீதியில் வகைப்படுத்த முடியும். இந்த ஊன முற்றவர்களின் அநேகமான தரப்பினர் சுயமாக ஏனைய நபர்களுடன் ஒன்றிணைந்து உதவிகளைப் பெறக்கூடிய தரப்பினராக இருந்ததுடன் 2022 ஆம் ஆண்டில் நடு அரைப் பகுதியில் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகள் ஏனைய தரப்பினர்களுக்குப் போன்று இந்த நபர்களுக்கும் அதிக தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. இதனால் இந்த ஊனமுற்றோர்களுக்கு மிகவும் சிறந்த வாழ்வு நிலையை ஏற்படுத்தும் நோக்கில் ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் உதவியின் கீழ் நிதி உதவி வழங்குவதற்கும் கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி உதவியின் வழங்கும் போது இந்த ஊனமுற்றோர்களுக்கு உள்ளபடியான பதவிகள் பெறுகின்ற மற்றும் காத்திருத்தல் பட்டியலில் படிகள் பெறுபவர் களாக இரண்டு பகுதிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதுடள் உள்ளபடியாக படிகள் பெறுகின்றவர்கள் இந்த படிகளுக்கு மேலதிகமாக பொருளாதார படிகளும் வழங்கப்பட்டிருந்தது.

ஊனமுற்றவர்களுக்கான தேசிய செயலகத்தில் தகவல்களின் பிரகாரம் செப்டெம்பர் மாதம் வரையில் ஊனமுற்றவர்களுக்கான உன்ளபடியான படிகளுக்காக தகைமை பெற்ற நலனாளிகளின் எண்ணிக்கை 72,000 ஆகும். 2022 செப்டெம்பர், ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களுக்காக இந்த நபர்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் வசதியின் கீழ் நிதி உதவிகளை வழங்கும் போது சமுர்த்தி அபிவிருத்தி வங்கிகளில் திறக்கப்பட்ட கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்பட்டதுடன் செலுத்தப்பட்ட மொத்தப் படிகளின் எண்ணிக்கை 1,385,362,500 ஆகும். உரிய படி செலுத்துதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டது.

### 3.3.1 படிகள் குறித்துரைத்த திகதியில் செலுத்துதல்

(அ) ஊனமுற்றவர்களுக்கான படிகள் மாதாந்த படியாக இருந்தமையால் ஒவ்வொரு மாதமும் 20 ஆம் திகதிக்கு முன்னர் கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்தமை 2015 ஏப்ரல் 27 ஆம் திகதிய 1/3/2015/NSPD ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட போதும் அந்த முறையில் மேற்கொள்ளப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இதன் போது திறைசேரியில் இருந்து சமுர்த்தி வங்கிக்கு பணம் கிடைத்தது முதல் நலனாளிகளின் ஒவ்வொரு கணக்கிற்காகவும் நிதி மாற்றப்படும் வரையான சகல கட்டங்களிலும் தாமதம் ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2022 ஆம் ஆண்டின் செப்டெம்பர், ஒக்டோபர்

மற்றும் நவம்பர் போன்ற மாதங்களில் முப்படைகளுக்காக ஊனமுற்றோர் படி செலுத்துதல் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் உரிய பணம் விடுவிக்கப்பட்டதிலிருந்து சமுர்த்தி வங்கிக்கு பணம் கிடைக்கும் வரையான கால வீச்சி பின்வருமாறு.

| மாதம் | ஆசிய அபிவிருத்தி வங்கியில் இருந்து தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு நிதி கிடைத்த திகதி | தேசிய திட்டமிடல் திணைக்களத்திலிருந்து சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு நிதி கிடைத்த திகதி | நலனாளிகளின் தொகுதி | சமுர்த்தி திணைக்களத்திலிருந்து சமுர்த்தி வங்கிக்கு நிதி திடைத்த திகதி (2022 ஆம் ஆண்டு) | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | நோனாகம | கல்கமுவ | நொச்சியாகம | தனமல்வில | கதிர்காமம் | பலுகஸ்வெவ | புளியந்தீவு | புதுமண்டபத்தடி | இப்பாகமுவ |
| செப்டெம்பர் | 09/30 | 09/30 | 1 | 10/19 | 10/17 | 11/16 | 10/17 | 10/13 | 11/16 | 10/17 | 11/17 | 10/17 |
| | | | | | 11/16 | | 11/16 | 11/17 | | | | 11/16 |
| | | | 2 | 10/20 | | | | 10/17 | | | | |
| | | | 3 | 12/12 | | | | 10/17 | | | | |
| ஒக்டோபர் | 09/30 | 10/17 | 1 | 11/18 | 11/18 | 11/18 | 11/18 | 11/22 | 11/18 | 11/18 | 11/18 | 11/18 |
| | | | | 11/23 | 11/23 | 11/23 | 11/23 | | | 11/23 | 11/23 | 11/23 |
| | | | 2 | 11/28 | 11/28 | 11/28 | 11/28 | 11/28 | 11/18 | 11/28 | 11/28 | |
| | | | 3 | 12/02 | | | | 11/23 | | | | |
| நவம்பர் | 11/01 | | 1 | 12/14 | | 12/14 | 12/14 | 12/15 | 12/15 | 12/14 | 12/14 | 12/14 |
| | | 11/14 | | | | 12/16 | 12/16 | | 12/27 | 12/16 | 12/16 | 12/16 |
| | | 12/05 | 2 | 12/16 | 12/16 | 12/16 | | 12/16 | | | | |
| | | | 3 | 12/19 | | | | 12/16 | | | | |

1 – உள்ளபடியான 2- மேலதிக 3-. காத்திருத்தல்.

(ஆ) நலனாளிகளைத் திருத்தும் போது படிகள் அகற்றப்பட்டவர்கள், படிகள் பெற்றுக் கொள்வதற்கு புதிதாக சேர்ந்தவர்கள் மற்றும் வசதிவிடம் மாற்றப்பட்ட நலனாளிகளை நீக்குதல் மற்றும் சேர்த்தல் அவ்வாறு திருத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது சமூக சேவை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (சமூக சேவை) மேற்பார் வையின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தமை 2022 ஆகஸ்ட் 30 ஆந் திகதிய இலக்கம் SMS/NSPD/05/15/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் காண்பிக்கப் பட்டுள்ளது. அவ்வாறே 1996

இன் 28 ஆம் இலக்க ஊனமுற்றோர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டத்தின் 13 ஆவது பிரிவில் (ஊ) இன் பிரகாரம் ஊனமுற்றோர்கள் தொடர்பாகவும், அவ்வாறன நபர்களுக்கு பெற்றுக்கொள்ளக்கூடிய சேவைகள் தொடர்பாகவும் சரியான புள்ளிவிபரத்தைப் பேணிச் செல்லல் தொடர்பான பொறுப்புக்கள் ஊனமுற்றவர்களுக்கான தேசிய சபையின் பொறுப்பாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த படிகள் சமுர்த்தி வங்கி ஊடாக செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் நாளதுவரையாக்கப்பட்ட தகவல் முறைமையொன்று காணப்படாமையின் காரணமாக பிரதேச செயலகம் ஊடாக தகவல்களைப் பெற்று உரிய புள்ளிவிபரங்கள் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. சரியாக நாளதுவரையாக்கப்பட்ட தரவு முறைமையொன்று காணப்படாமை ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடுத்தக்கூடிய காலம் ஒரே விடயம் தொடர்பாக மீண்டும் மீண்டும் ஈடுபடுத்துவதற்கு ஏற்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டிருந்தமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.3.2 பௌதீக பரிசோதனை

பௌதீக பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட அநுராதபுரம், குருணாகல், அம்பாந்தோட்டை மட்டக்களப்பு மற்றும் மொனராகலை போன்ற மாவட்டங்களில் பயனாளிகளுக்கு படி செலுத்துதல் மற்றும் உரிய தரவு முறைமையைப் பராமரித்தல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பௌதீக பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட அநுராதபுரம், குருணாகல், அம்பாந்தோட்டை மட்டக்களப்பு மற்றும் மொனராகலை போன்ற மாவட்டங்களில் 09 பிரதேச செயலகங்கள் ஊடாக தெரிவு செய்யப்பட்ட தெரிவில் பகிர்ந்தளிக்கப்பட்ட வினாக்கொத்துக்களில் பெறப்பட்ட பெறுபேறின் பிரகாரம் நலனாளிகள் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட தொகையினர் ஊனமுற்ற படிகளைப் பெற்றுக்கொள்ளல் கஷ்டங்களுக்கு முகங்கொடுப்பதாக காண்பித்திருந்தனர். அதனிடையே பின்வரம் பிரச்சினைகள் தொடர்பாக விஷேடமாக குறிப்பிடப்பட்டிருந்தது.

(i) நலனாளிகளுக்கு உரித்தான சமுர்த்தி வங்கியிலிருந்து வீட்டிற்கான தூர அளவு அதிகமாக இருந்தமை

(ii) நலனாளிகளில் தரப்பினர் ஒரு வங்கிலிருந்து நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு செல்லும் போது இடநெருக்கடிகள் ஏற்பட்டிருந்தமை.

(iii) அதிக நேரம் வங்கி நிரலில் காத்திருக்க வேண்டி ஏற்பட்டிருந்தமை.

(iv) படிகளைச் செலுத்துகின்ற குறித்துரைத்த திகதி ஒன்று காணப்படாமையினால் பல நாட்கள் அதற்காக செலவிட வேண்டி ஏற்பட்டிருந்தமை.

(ஆ) ஊனமுற்றும் மற்றும் காத்திருக்கும் ஊனமுற்றவர்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டிருந்த மேற்கூறப்பட்ட வசதியீனங்களை தவிர்ப்பதற்காக 2022 ஆகஸ்ட் 29 ஆந் திகதி சமுர்த்தி வங்கி சுற்றறிக்கை 2022/11 இன் மூலம் சமுர்த்தி வங்கிக்கு வருகை தருவதற்கு வசதியீனமாக உள்ளவர்களுக்காக அவர்களுக்கு சென்று பணம் பெற்றுக்கொள்வதற்கான தேவையான நடவடிக்கைகளுக்கான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. எனினும் பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட விடயங்களின் பிரகாரம் நலனாளிகளில் அதிக தரப்பினர் படிகளைப் பெற்றுக்கொள்வதற்கு செல்லும் போது வசதியீனத்திற்கு உட்பட்டிருந்தனர்.

(இ) மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் 2022 ஒக்டோபர் மாதத்தில் காத்திருக்கும் ஊனமுற்றோர் படிகளைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்தான தரவு முறையைப் பரிசோதனை செய்த போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

(i) 44 நலனாளிகளிடமிருந்து மாவட்ட பிரதேச செயலகப் பிரிவு, கிராம உத்தியோகத்தர் பிரிவு, பெயர் ஆண் பெண் தன்மை, சமுர்த்தி வங்கியின் பெயர், கணக்கு இலக்கம் சரியாக குறிப்பிட வேண்டியிருந்த போதிலும் அவர்களின் முகவரியாக காண்பிக்கப்பட்ட தகவல்கள் பூரணமற்று இருந்தது.

(ii) 13 நலனாளிகளின் பிறந்த திகதி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் அல்லது ஏனைய இனங்காணக்கூடிய இலக்கங்கள் குறிப்பிடப்படாமை.

(iii) நலனாளிகளில் ஐந்து பேர்களின் ஊனமுற்ற தன்மை எத்தகையது என தெளிவாகக் குறிப்பிடப்படாமை.

அதன் பிரகாரம் இந்த தகவல் முறைமையில் குறிப்பிடப்பட்ட நலனாளிகளில் 36 சதவீதம் அளவிலான தகவல்கள் கணக்காய்வு திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

| படிகளின் வகை | மொத்த நலனாளிகளின் எண்ணிக்கை | பிறந்த திகதி | NIC | ஊனமுற்ற | தொலை பேசி இலக்கம் |
|---|---|---|---|---|---|
| ஊனமுற்ற உள்ளபடியான படி மேலதிக படி | 46 | - | 09 | - | 11 |
| காத்திருத்தல் ஊனமுற்றோர் படி | 44 | 13 | 13 | 05 | 44 |

(ஈ) ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் உதவியின் கீழ் 132,000 ஊனமுற்ற நபர்களுக்கான நலன்கள் 1090 சமுர்த்தி வங்கிகளின் மூலம் செலுத்தும் போது 66 சமுர்த்தி வங்கிக் கிளைகளில் நலனாளிகளின் கணக்குகளை பேணிச்செல்வதற்காக கணனிமயப்படுத்தப்பட்ட தரவு முறைமையொன்று காணப்படாமையால் கையினால் முறைமை (manual) மூலம் மேற் கொண்டமையினால் வாடிக்கையாளர்கள் மற்றும் வங்கி உத்தியோகத்தர்கள் அதிக வசதியீனத்திற்கு உட்பட்டிருந்தமை பௌதீக பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட கணனி தரவு முறைமையொன்று காணப்படாமை. தனமல்வில சமுர்த்தி வங்கியில் அவதானிக்கப்பட்டது.

**3.4 சிறுநீரக நோயாளர்களுக்கான நிதி உதவியினை வழங்குதல்.**

இலங்கையில் ஊனமுற்ற நபர்களாகவும் தேசிய அபிவிருத்தியின் பங்குதாரர்களாக உட்படுத்தும் நோக்கில் முற்காப்பு நடவடிக்கைகளாக ஊனமுற்றவர்களுக்கான தேசிய செயலகம் சிறுநீரக நோயாளர்களுக்காகவும் தேசிய இலக்கினை நிறைவேற்றுகின்றது. சிறுநீரக நோயாளர்களின் நலன்களைக் கவனத்திற்கொண்டு அவர்களை சமூகத்தில் நோயற்றவர்களாக்குவதற்கு பங்களிக்கும் நோக்கில் குறைந்த வருமானம் பெறும் சிறுநீரக நோயாளர்களுக்காக மாதாந்த வாழ்வாதாரங்களை பெற்றுக்கொள்ளும் நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. சமூக சேவை அமைச்சு சுற்றறிக்கை 01/2015 இன் பிரகாரம் 2015 சனவரி 01 ஆம் திகதி முதல் சிறுநீரக நோயாளர்களுக்கு அதிக கஷ்டத்திற்கு உட்பட்ட நோயாளர்களுக்காக மாதாந்தம் ரூபா 3,000 வாழ்வாதார படி செலுத்துதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்த சுற்றறிக்கையின் பிரகாரம் மாதம் ஒன்றிற்கு குடும்பத்தின் வருமானம் ரூபா 3,000 இற்கு குறைவான இரத்த சுத்திகரிப்பு செய்கின்ற காலத்தில் சிறுநீரக நோயாளர்களுக்காக வாழ்வாதாரம் உரித்தாக இருந்ததுடன் 2019 ஆகஸ்ட் 01 ஆந் திகதி முதல் குடும்பத்தில் மாதாந்த வருமான எல்லை ரூபா 6,000 ஆக 2019/NSPD/01(திருத்தம்)iii அமைச்சு சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்டிருந்தது. அவ்வாறே

2017 யூன் 01 ஆந் திகதி முதல் மாதமொன்றிற்கு ரூபா 3,000 ஆன வாழ்வாதாரப் படி மாதத்திற்கு ரூபா 5,000 வரை அதிகரித்தல் அமைச்சு சுற்றறிக்கை ஆக 2017/NSPD/01(திருத்தம்) மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2022 செப்டெம்பர் மாதம் வரையில் ஊனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம் சிறுநீரக நோயாளர் படியாக 39,150 நோயாளர்கள் இனங்காணப்பட்டிருந்தனர்.

2022 ஆம் ஆண்டின் நடு அரைப் பகுதியில் இலங்கை முகங்கொடுக்க வேண்டிய ஏற்பட்டிருந்த சமூக, பொருளாதார நெருக்கடிகளின் தாக்கத்தின் அடிப்படையில் பாதிப்பிற்கு உட்பட்ட மக்களுக்கு சலுகை வழங்கும் நோக்கில் அமுல்படுத்தப்பட்ட ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் வசதியின் கீழ் நிதி உதவியினை வழங்கும் போது சிறுநீரக நோயாளர்களுக்காகவும் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2022 ஆகஸ்ட் மாதம் வரை பிரதேச செயலகம் ஊடாக வழங்கப்பட்ட சிறுநீரக நோயாளர் படி 2022 செப்டெம்பர் மாதம் முதல் உள்ளபடியான நலனாளிகளை போன்று காத்திருத்தல் பட்டியலில் உள்ள சிறுநீரக நோயாகளுக்கும் சமுர்த்தி வங்கி ஊடாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. உரிய படி செலுத்துதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

### 3.4.1 படிகள் குறித்துரைத்த திகதியில் செலுத்துதல்.

(அ) இதன் போது ஊனமுற்ற நபர்களுக்கான செயலகத்தால் புள்ளிவிபர தரவுகள் சமுர்த்தி திணைக்களத்திற்கு சமர்ப்பித்து பின்னர் சமுர்த்தி வங்கிக்கு பணம் பெற்றுக்கொள்ளும் போது மாதாந்த படி செலுத்துதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனினும் முறையான தரவுகளைப் பெணிச் செல்லும் முறைமை காணப்படாமையினால் இந்த கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக மீண்டும் பிரதேச செயலகத்திலிருந்து தகவல்கள் கோர வேண்டிய ஏற்பட்டிருந்தது. சரியான தகவல்களை பெற்றுக்கொள்ளும் செயற்பாடுகளில் காணப்பட்ட குறைபாடுகளினால் இந்த கொடுப்பனவு நடவடிக்கைகள் குறித்துரைத்த காலப்பகுதியில் மேற்கொள்ளுதல் பிரச்சினையுடனாக காணப்பட்டமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) 1/2015 சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் இந்த படி செலுத்துதல் ஒவ்வொரு மாதமும் 10 ஆம் திகதி அல்லது அந்த திகதி விடுமுறை தினமாக இருக்குமாயின் அடுத்து வரும் முதலாவது வேலை நாளின் போது செலுத்த வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்ட போதும் நலனாளிகளுக்கு பணம் தாமதமாகவே கிடைத்திருந்தது. இதன் போது திறைசேரியிலிருந்து சமுர்த்தி வங்கிக்கு பணம் பெற்றுக்கொண்டதில் இருந்து நலனாளிகளின் ஒவ்வொரு கணக்கிற்காகவும் பணம் மாற்றும் வரையான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தாமதம் ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2022 ஆம் ஆண்டில் செப்டெம்பர், ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் மூன்று சுற்றுக்களுக்காகவும் ஊனமுற்றோர் படி செலுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்யினால் உரிய பணம் விடுவிக்கப்பட்டதிலிருந்து சமுர்த்தி திணைக்களத்திற்கு பணம் கிடைக்கும் வரையான கால வீச்சு பின்வரும் பிரகாரம் இருந்ததுடன் பௌதீக பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட அனுராதபுரம், அம்பாந்தோட்டை, மொனராகலை, மட்டக்களப்பு மற்றும் குருணாகல் போன்ற மாவட்டங்களில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட திகதி பின்வருமாறு.

| மாதம் | ஆசிய அபிவிருத்தி வங்கியில் இருந்து தேசிய திட்டமிடல் திணைக் களத்திற்கு நிதி கிடைத்த திகதி | தேசிய திட்டமிடல் திணைக் களத்திலிருந்து சமுர்த்தி அபிவிருத்தி திணைக் களத்திற்கு நிதி கிடைத்த திகதி | நலனாளிகளின் தொகுதி | சமுர்த்தி திணைக்களத்திலிருந்து சமுர்த்தி வங்கிக்கு நிதி திடைத்த திகதி (2022 ஆம் ஆண்டு) | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | நோனாகம | கல்கமுவ | நொச்சியாகம | தனமல்வில | கதிர்காமம் | பலுகஸ்வெவ | புளியந்தீவு | புதுமண்டபத்தடி | இப்பாகமுவ |
| செப்டெம்பர் | 09/30 | 09/30 | 1 | 10/13 | 10/17<br>11/16 | 11/16 | 11/16 | 10/12<br>11/17 | 11/16 | 10/12 | 10/15 | 10/17 |
| | | | 2 | 10/20 | | | | 10/17 | | 10/20 | 10/17 | |
| | | | 3 | 10/23 | | | | 10/17 | | 10/20 | | |
| ஒக்டோபர் | 09/30 | 10/17 | 1 | 11/22 | 11/21 | 11/22 | 11/21 | 11/18 | 11/21 | 11/19 | 11/22 | 11/21 |
| | | | 2 | 11/28 | 11/28 | 11/28 | 11/28 | 11/28 | | 11/30 | 11/28 | 11/22<br>11/28 |
| | | | 3 | 11/23 | 11/22 | | | 11/23 | | | | |
| நவம்பர் | 11/01 | 11/14 | 1 | 12/19 | 12/15 | 12/15 | 12/18 | 12/14 | 12/14<br>12/27 | 12/15 | 12/15 | 12/15 |
| | | 12/05 | 2 | 12/16 | 12/16 | 12/16 | 12/16 | 12/16 | | | 12/16 | 12/16 |
| | | | 3 | 12/16 | 12/16 | 12/28 | | 12/16 | | | 12/16 | 12/16 |

1 – உள்ளபடியான 2- மேலதிக 3-. காத்திருத்தல்.

### 3.4.2 பௌதீக பரிசோதனை

ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் உதவியின் அடிப்படையில் அமுல்படுத்தப்படுகின்ற உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார உதவி அவசர உதவி செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நலன்கள் தொடர்பாக தெரிவு செய்யப்பட்ட 05 மாவட்டங்களில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிறுநீரகப் படி செலுத்துதல் சமுர்த்தி வங்கியில் காணப்படுகின்ற கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தமை செயற்திட்ட நிருவாக கைநூலில் காண்பிக்கப்பட்டிருந்த துடன் அதுவரை சமுர்த்தி வங்கிக் கணக்கில் காணப்படாத நலனாளிகள் புதிய கணக்கொன்று சமுர்த்தி வங்கியில் ஆரம்பிக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனை மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட வினாக்கொத்துக்கள் கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம் வங்கி கணக்கு ஆரம்பிக்கும் போதும் மற்றும் நிதி உதவி வழங்கும் போதும்

போக்குவரத்துக் கஷ்டங்கள் வரிசையில் நீண்ட நேரம் தரித்து நிற்க வேண்டியிருந்த போன்ற பிரச்சினைகள் அநேகமானவற்றுக்கு முகங்கொடுக்கவேண்டி இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் சிறுநீரக நோயாளர் படி நலனாளிகளின் தரவு முறைமையின் நலனாளிகளின் முகவரி தவிர ஏனைய தகவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. தரவு முறைமையைப் பரிசீலனை செய்கின்ற வெளித் தரப்பினருக்கு அதில் குறிப்பிடப்பட்ட முகவரிகளின் சரியான தன்மையை நலனாளிகளுக்கு அடைந்து கொள்வதற்கு கஷ்டமாக இருந்தமை கணக்காய்விற்கு தெளிவாக இருந்தது. அவ்வாறே அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அம்லன்தோட்டை பிரதேச செயலகப் பிரிவில் சிறுநீரக படி நலனாளிகளின் தரவு முறைமையில் தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் கணக்கு இலக்கங்கள் கணக்காய்வுத் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.5 கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான நிதி உதவிகளை வழங்குதல்.

மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப் படுகின்ற முன் சிறுவர் அபிவிருத்தி தொடர்பான தேசிய செயலகத்தின் பணிப்பொறுப்புக் களுக்கு இடையே முன்பள்ளி சிறுவர் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கையைத் தயாரித்தல், அமுல்படுத்தும் பொறிமுறையாக செயற்படுதல் மற்றும் அதற்குரிய ஆராய்ச்சியினை மேற்கொள்ளல், தரவுகளை சேகரித்தல் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குதல், அரச அரசசார்பற்ற அமைப்புக்கள் மற்றும் தனியார் துறையின் சிறுவர் அபிவிருத்தி செய்கின்ற நிகழ்ச்சித் திட்டங்களை தொடர்படுத்துதல், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை தயாரித்தல் மற்றும் அமுல்படுத்துதல் சிறுவர் அபிவிருத்திக்குரிய மனிதவள அபிவிருத்தி உள்ளடங்குகின்றது.

இதுவரை இந்த நிறுவனத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட கர்ப்பிணி அல்லது பாலூட்டும் தாய்மார்களுக்கான உணவு வவுச்சர்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் வவுச்சர்களைப் பெற்றுக்கொள்வதற்குப் பதிலாக உணவு பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார அவசர உதவி செயற்திட்டத்தின் கீழ் கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் போஷசனை தேவையினை கட்டியெழுப்பும் நோக்கில் கர்ப்பிணிகளுக்கு 03 மாதங்கள் முழுமையான கர்ப்பிணித் தாய்மார்களுக்கு அல்லது 01 மாதம் முதல் 04 மாதங்களுக்கிடையிலான பிள்ளைகள் இருக்கின்ற பாலூட்டும் தாய்மாருக்கு ரூபா 2,500 வீதம் 04 மாதங்களுக்கு ரூபா 10,000 படி வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சிறுவர் அபிவிருத்தி தொடர்பான தேசிய செயலகத்தில் பணியாக நலனாளிகளைத் தெரிவு செய்தல், பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் தகவல்களை சேகரித்தல். அந்த தகவல்கள் மாவட்ட செயலக மட்டத்தில் தயாரித்தல் தொடர்புபடுத்துதல் மற்றும் இறுதியாக தயாரிக்கப்பட்ட நலனாளிகளின் பதிவேடு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு வழங்கக்கூடியதாக இருந்தது.

அவசர நிதி நலன்களை வழங்குவதற்காக எதிர்பார்க்கப்பட்ட நலனாளிகளை தெரிவு செய்தல், நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதல், மேற்பார்வை மற்றும் நலன்கள் செலுத்துதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

#### 3.5.1 எதிர்பார்க்கப்பட்ட நலனாளிகளைத் தெரிவு செய்தல்.

##### 3.5.1.1 02 வயதிற்குக் குறைந்த போஷனை குறைபாடுள்ள பிள்ளைகளுக்காக உதவியினை வழங்குதல்.

செயற்திட்ட நிர்வாக கைநூலின் பிரகாரம் காண்பிக்கப்பட்ட 02 வயதிற்கு குறைவான போஷனை குறைவுடன் உள்ள பிள்ளைகளுக்காக உதவியினை வழங்குவதற்காக திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5.1.2 தகைமை பெற்ற கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களை தெரிவு செய்தல்.**

தேசிய திட்டமிடல் திணைக்கள இலக்கம் NP/ADB/01/2022/MOWCS மற்றும் 2022 செப்டெம்பர் 27 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் இந்த நலன்களைச் செலுத்துதல் சமுர்த்தி வங்கிக் கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தமை நலன்கள் நேரடியாக அந்த வங்கிக்கு செலவுவைக்கப்பட்டமை காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு செயலாளர் விநியோகித்த 2022 ஒக்டோபர் 14 ஆம் திகதிய சுற்றறிக்கை இலக்கம் 6/2022 இன் பிரகாரம் கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களில் நலனாளிகளைத் தெரிவு செய்யும் அளவு கோல்களை தீர்மானித்து இறுதி நலனாளிகளைத் தெரிவு செய்வதற்காக ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் நாடு முழுவதும் உள்ள பிரதேச செயலக பிரிவுகளில் நலனாளிகள் பதிவேடு தொடர்பான தகவல்களுக்கு உரிய மாவட்ட முன் சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஊடாக முன் சிறுவர் அபிவிருத்தி தொடர்பான தேசிய செயலகத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது உரிய பிரதேச செயலகங்களில் இருந்து தகைமைபெற்ற நலனாளிகள் தொடர்பாக பெறப்பட்ட தகவல்கள் கீழே காண்பிக்கப் படுகின்றது.

| மாவட்டம் | தகைமை பெற்ற நலனாளிகளின் எண்ணிக்கை | பிரதேச செயலகப் பிரிவு | தகைமை பெற்ற நலனாளிகளின் எண்ணிக்கை | ஆரம்ப சிறுவர் அபிவிருத்தி தொடர்பான தேசிய செயலகத்திற்கு அனுப்பப்பட்ட திகதி | சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட திகதி |
|---|---|---|---|---|---|
| அநுராதபுரம் | 7850 | பலுகஸ்வெவ | 155 | - | 2023.01.31 |
| | | நொச்சியாகம | 475 | 2023.01.13 | 2023.01.31 |
| மொனராகலை | 5290 | தனமல்வில | 344 | 2023.01.02 | 2023.01.31 |
| | | கதிர்காமம் | 167 | 2023.01.09 | 2023.01.31 |
| அம்பாந்தோட்டை | 6225 | அம்பலந்தோட்டை | 743 | 2022.12.30 | 2023.01.31 |
| குருணாகல் | 10742 | கல்கமுவ | 424 | 2022.12.06 | 2023.01.31 |
| | | இப்பாகமுவ | 192 | 2023.01.02 | 2023.01.31 |
| மட்டக்களப்பு | 9363 | மண்முனை - வடக்கு | 1052 | 2023.01.17 | 2023.01.31 |
| | | மண்முனை மேற்கு | 660 | - | 2023.01.31 |

2023 சனவரி 31 ஆம் திகதி ஆரம்ப சிறுவர் அபிவிருத்தி தொடர்பான தேசிய செயலகத்தால் 25 மாவட்டங்களுக்காக 156,449 நலனாளிகளின் நலன் பதிவேடு, நிதி செலுத்துவதற்கான சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு செயலாளரின் 2022 ஒக்டோபர் 14 ஆம் திகதிய சுற்றறிக்கை இலக்கம் 6/2022 இன் கீழ் நலனாளிகளைத் தெரிவு செய்வதற்கான அளவுகோல்கள் தீர்மானிக்கப்பட்ட பின்னர் பிரதேச செயலகப் பிரிவில் அமுல்படுத்தப்பட்ட தாய் சேய் சிகிச்சை நிலையங்களில் பதிவு செய்த கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கிடையே விண்ணப்பம் கோரி தகைமை பெற்ற விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்வதற்காக 03 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தது. அதன் பிரகாரம் செயற்திட்டத்தின் நோக்கத்தின் பிரகாரம் நலனாளிகளுக்கு கால ரீதியில் நிதியினை வழங்குவதற்கு தாமதம் ஏற்பட்டதற்கு காரணமாக இருந்தமை அவதானிக்கப் பட்டது.

(ஆ) இந்த அவசர நலன்களை வழங்குவதற்காக சமுர்த்தி வங்கி கணக்கின் தேவையாக இருந்தமை தீர்மானிக்கப்பட்டமையால் வங்கி கணக்கு திறப்பதற்கு காலம் எடுத்தமையினால் கணக்கு திறப்பதற்கு சமுர்த்தி வங்கிகளுக்கு செல்ல வேண்டி ஏற்பட்டமையால் கர்ப்பிணி நிலைமையில் விண்ணப்பதாரர்கள் வசதியீனத்திற்கு உட்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டன.

(இ) பிரதேச செயலகங்களில் இந்த நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்தும் பொறுப்பு ஆரம்ப சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு கையளிக்கப்பட்டதுடன் தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் பிரதேச செயலகங்களில் 2022 ஆகஸ்ட் 31 இல் உள்ளவாறு நாளது வரையாக்கப்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களின் தகவல்கள் காணப்பட்ட போதும் அதில் நாளதுவரையாக்கப்பட்ட கர்ப்பிணித்தாய்மார்களின் தகவல்களின் பிரகாரம் நலனாளிகள் தெரிவு செய்தல் இடம்பெறாமல் புதிதாக விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கை ஆலோசனையின் படி விண்ணப்பம் விநியோகித்து மீண்டும் நலனாளிகளைத் தெரிவு செய்தால் நலன்களைச் செலுத்துவதற்காக கவனத்தில் கொள்ளக்கூடிய காலம் எடுத்தமை. நலனாளிகளைத் தெரிவு செய்வதற்காக வழங்கப்பட்ட அளவு கோல்கள் மற்றும் சுற்றறிக்கை ஆலோசனை அவ்வப்போது மாற்றப்பட்டமை மற்றும் அறிந்து கொள்வதில் உள்ள பிரச்சினைகளின் காரணமாக உத்தியோகத்தர்கள் வசதியீனத்திற்கு உட்பட்டமை மற்றும் நலனாளிகள் பதிவேட்டின் பூர்த்தி செய்தல் (finalize) தாமதம் ஏற்பட்டதன் காரணமாக இந்த அவசர உதவி காலரீதியில் விண்ணப்பதாரர்களுக்கு கிடைத்தல் நலிவான மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் சமூக வலுவூட்டல் அமைச்சு செயலாளரால் விநியோகிக்கப்பட்ட 2022 ஒக்டோபர் 14 ஆம் திகதிய சுற்றறிக்கை இலக்கம் 6/2022 இன் பிரகாரம் நலனாளிகளைத் தெரிவு செய்தல் தொடர்பான சுற்றறிக்கை ஆலோசனையில் காண்பிக்கப்பட்ட கர்ப்பிணி காலத்திற்குரியதாக 03 மாதங்களுக்கு குறைவான கர்ப்பிணித் தாய்மார்கள் கவனத்திற்கொள்ள முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பின்னர் 03 மாதங்களுக்கு குறைவான கர்ப்பிணித் தாய்மார்களுக்காக இந்தக் காலத்திற்குரிய நலன்களுக்காக உரித்து கிடைத்திருக்கவில்லை.

(உ) நிகழ்ச்சித்திட்ட ஆரம்பத்தில் நலனாளிகளின் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் போது GND ID குறிப்பிடுதல் தேவையில்லாதிருந்த போதிலும் பின்னர் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் அந்தத் தேவையை சமர்ப்பித்ததன் காரணமாக GND ID உள்ளடக்குவதற்காக அமைச்சின் ஒவ்வொரு பிரிவினதும் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி 10 நாட்கள் காலம் முழுமையான காலம் நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்தது. இந்நிகழ்ச்சித்த திட்டத்தை தொடர்புபடுத்தல் மற்றும் செயற்படுத்துதல் பிரதானமாக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் மற்றும் ஆரம்ப சிறுவர் அபிவிருத்தி தொடர்பான தேசிய செயலகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டதுடன் நிகழ்ச்சித்திட்டத்திற்குத் தேவையான தகவல்கள் தொடர்பாக முறையாக தொடர்பாக அறிவத்தல் மேற்கொள்ளாமையின் காரணமாக

இவ்வாறான நிலைமை நிகழ்ச்சித்திட்டத்தை மேற்கொள்வதற்கு இடையூறாக இருந்தது.

(ஊ) அவசர நிதி நலன்களை வழங்குவதற்காக நலனாளிகளைத் தெரிவுசெய்வதற்கு சரியான திட்ட முறைமை ஒன்று இனங்காணாமை கருதுகோள்கள் ஆரம்ப சந்தர்ப்பத்தின் போதே சரியாக இனங்காணாமை வ்வப்போது சமர்ப்பிக்கப்பட்ட கருதுகோள்களுக்கிடையே நலனாளிகளைத் தெரிவுசெய்வதற்காக காலம் எடுத்தமை. மற்றும் பிரதேச செயலக பிரிகளில் நாளது வரையாக்கப்பட்ட கர்ப்பினித் தாய்மார்கள் தொடர்பான தரவுகள் மற்றும் ஆவணங்கள் காணப்பட்ட போதும் அந்தத் தகவல்கள் பயன்படுத்தப்படாமையால் தகைமை பெற்ற நலனாளிகளைத் தெரிவு செய்தல் தாமதமடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.5.2 நலனாளிகளுக்காக பணம் செலுத்துதலை திட்டமிடல்.

(அ) ஆரம்ப சிறுவர் அபிவிருத்தி தொடர்பான தேசிய செயலகத்தில் காணப்படுகின்ற தகவல்களின் பிரகாரம் 2023 சனவரி 31 ஆம் திகதி வரையில் நலன்களைப் பெற்றுக்கொள்வதற்காக கர்ப்பினிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் 156,449 பேர் தெரிவுசெய்யப்பட்டிருந்ததுடன் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் சமர்தப்பித்த கலைத்தல் அறிக்கையின் பிரகாரம் உள்ளபடியாக விண்ப்பதாதர்க்ள 153,320இற்காக ரூபா 1,533,200,000 செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கணக்காய்வின் போது தெரிவுசெய்ய்ப்பட்ட மாவட்டங்களின் பிரகாரம் நலங்களைத் திட்டமிடல் மற்றும் நலன்களை செலுத்தும் போது அம்பாந்தோட்டை மாவட்டத்திற்காக ஆரம்ப சிறுவர் அபிவிருத்தி தொடர்பான தேசிய செயலகம் கோரியிருந்த நலனானிகளை விட ஐந்து நலனாளிகளுக்காக பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் அனுராதபுரம்ஈ மொனராகலைஈ குருநாகல், மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களுக்காக 418 நலனாளிகளுக்காக பணம் போதியளவு கிடைத்திருக்கவில்லை.

(இ) அனுராதபுர மாவட்டத்திற்குரிய ஆரம்ப சிறுவர் அபிவிருத்தி தொடர்பான செயலகத்திற்குக் கிடைத்த நலன்கள் எதிர்பார்க்கப்பட்ட 7850 விண்ணபதாரிகளுக்காக 2023 மே 08 ஆம் திகதி வரையில்போதியளவான பிரகாரம் நிதி கிடைக்காமையினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பிரதேச செயலகப் பிரிவுகளுககுரிய நலன்கள் கோரப்பட்ட நலனாளிகள் 2157 இல் 201 பேர்களுக்காக 2023 மே 18 ஆம் திகதி வரையில் நிதி கிடைக்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் கணக்காய்வு திகதி வரையிலும் அனுராதபுர மாவட்டத்தில் அவசர நிதித் தேவை கிடைக்காத கர்ப்பினிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் 201 பேர் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

| பிரதேச செயலக பிரிவு | 2022 திசெம்பர் 31 வரையில் ஆரம்ப சிறுவர் அபிவிருத்தி தொடர்பான தேசிய செயலகத்திற்கு அனுப்பப்பட்ட நலனாளிகளின் எண்ணிக்கை | நிதி ஏற்பாடு கிடைக்கப்பெற்ற நலனாளிகளின் எண்ணிக்கை | சமுர்த்தி வங்கி | 2023 மே 18 இல் மேலும் நிதிஏற்பாடு தேவையான நலனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| ரம்பேவ | 403 | 401 | கல்லண்டி -02 | 02 |
| மனுப்ப | 579 | 552 | எலயாபத்துவ-4<br>கட்டுக்கெலியாவ – 22<br>சாலியபுர – 1 | 27 |
| தலாவ | 346 | 329 | | 17 |
| ஹொரவப்பொத்தானை | 494 | 339 | ஹொரவபொத்தான – 90<br>மொறகேவ – 65 | 155 |
| மொத்தம் | 2157 | 1951 | | 201 |

(ஈ) 2023 பெப்ரவரி 17 ஆம் திகதிய மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் விநியோகித்த இலக்கம் DSD/MF/COM/2023/01 என்ற கடிதத்தின் வங்கி மட்டத்தில் நலன்களை செலுத்துவதற்கு சமுர்த்தி அபிவிருத்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட நலனாளிகளின் எண்ணிக்கை புது மண்டபத்தடி சமுர்த்தி வங்கிக்காக 351 நலனாளிகளாக காண்பிக்கப்பட்ட போதிலும் 2023 மார்ச் 13 ஆம் திகதி புது மண்டபத்தடி வங்கி நடை முறைக்கணக்கிற்கு 365 நலனாளிகளுக்காக பணம் செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம விண்ணப்பதாரர்களை விஞ்சி சமுர்த்தி வங்கிக்கு பணம் அனுப்பப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) கதிர்காமம் பிரதேச செயலகத்துக்குரிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் 05 இற்குரியதாக கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் 167 பேர்களுக்காக பூர்த்தி செய்யப்பட்ட நலன் பதிவேடு 2023 சனவரி 09 ஆம் திகதி மாவட்ட ஆரம்ப சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தருக்கும், ஆரம்ப சிறுவர் அபிவிருத்தி செயலகத்திற்கும் அனுப்பப்பட்டிருந்ததுடன் 2023 பெப்ரவரி 14 ஆம் திகதிய சமுர்த்தி பணிப்பாளர் நாயகம் விநியோகித்த DSD/HO/05/MF/15/SYSTEM/01 கடிதத்தின் பிரகாரம் நலன்கள் எதிர்பார்த்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை 179 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன்பிரகாரம் நலனாளிகள் தொடர்பான புள்ளிவிபர சீதியான தகவல்களின் சரியான தன்மை தொடர்பாக பிரச்சினையுடனான நிலமை காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) மொனராகலை மாவட்டத்திற்குாக ஆரம்ப சிறுவர் அபிவிருத்தி தொடர்பான தேசிய செயலகத்தில் காணப்படுகின்ற தகவல்களின் படி 5290 விண்ணப்பதாரர்கள் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திலிருந்து 5055 நலனாளிகளுக்காக ரூபா 50,550,000 தொகை 11 பிரதேச செயலகப் பிரிவுகளின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற சமுர்த்தி வங்கிகளுக்கு அனுப்பப்பட்டிருந்தது. 2023 யூலை 26 ஆம் திகதி வரையில் உள்ளபடியாக கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் 4912 பேர்களுக்காக நலன் செலுத்தப்பட்டிருந்துதுடன் 06 பிரதேச செயலகப் பிரிவுகளுக்குரிய சமுர்த்தி வங்கிகளில் கீழே குறிப்பிடப்படுகின்ற அட்டவணையில் காண்பிக்கப்படுகின்ற பிரகாரம் 950,000 மீதியாகக் காணப்பட்டது. நலனாளிகளை விட சமுர்த்தி வங்கிகளுக்குப் பணம் அனுப்புவதன் காரணமாக 95 நலனாளிகளுக்காக செலுத்த வேண்டியதாக இருந்த பணம் தேவையற்றதாக வங்கியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| பிரதேச செயலகப் பிரிவு | வங்கிக்கு பணம் கிடைத்த | | வங்கியினால் கணக்கீடு செய்யப்பட்ட | | சேமிக்கப்பட்ட தொகை ரூபா |
|---|---|---|---|---|---|
| | நலனாளிகளின் எண்ணிக்கை | தொகை ரூபா | நலனாளிகளின் எண்ணிக்கை | தொகை ரூபா | |
| சியம்பலாண்டுவை | 662 | 6,620,000 | 593 | 5,930,000 | 690,000 |
| மொனராகல | 564 | 5,640,000 | 549 | 5,490,000 | 150,000 |
| படகும்புர | 464 | 4,640,000 | 462 | 4,620,000 | 20,000 |
| பிபில | 442 | 4,420,000 | 439 | 4,390,000 | 30,000 |
| மடுல்ல | 278 | 2,780,000 | 274 | 2,740,000 | 40,000 |
| மெதகம | 397 | 3,970,000 | 395 | 3,950,000 | 20,000 |
| | | | | | 950,000 |

### 3.5.3 ADB கடன் கணக்கு ஊடாக நிதி பெறுவனவு மற்றும் நலனாளிகளுக்கு செலுத்துதல்

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற உணவு பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார நிதி அவசர உதவி திட்டத்தின் கீழ் கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களை உள்ளடக்கிய ஒட்டு மொத்த நலனாளிகளுக்கும் பணம் செலுத்துவதற்காக ADB கடன் கணக்கின் மொத்த கூட்டுத் தொகை ரூபா 62,311,650,742 பணம் சிதி கிடைத்திருந்தது. அந்தப் பணத்தில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள கணக்கில் (02nd Generation Imprest A/C) எஞ்சிக் காணப்பட்ட ரூபா 925,207,590 மற்றும் 2023 பெப்ரவரி 23 ஆம் திகதி தேசிய திட்டமிடல் திணைக்களத்திலிருந்து கிடைத்த ரூபா 639,222,410 தொகை கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான நலன்களை செலுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது.

#### 3.5.3.1 நலனாளிகளுக்காக பணம் செலுத்துதல்.

(அ) 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள கணக்கில் எஞ்சியிருந்த ரூபா 925,207,590 தொகை மற்றும் 2023 பெப்ரவரி 23 ஆம் திகதி தேசிய திட்டமிடல் திணக்களத்திடமிருந்து கிடைத்த ரூபா 639,222,410 தொகையில் 2023 மார்ச் 13 ஆம் திகதி 1090 சமுர்த்தி வங்கிகளுக்கு ரூபா 1,559,270,000 அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு நலன்களை செலுத்துவதற்காக சமுர்த்தி வங்கி நடைமுறைக்கணக்குக்கு நிதி செலவு வைப்பதற்காக மூன்று மாதங்களுக்கு அண்மித்த காலம் எடுத்திருந்தது.

(ஆ)(i) 2023 யூலை 28 ஆம் திகதி சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் சமர்ப்பித்த கலைத்தல் அறிக்கையின் பிரகாரம் 153,320 நலனாளிகளுக்காக ரூபா 1,533,200,000 நலன்கள் வெலுத்தப்பட்டிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. நலன்களின் எதிர்பார்ப்பில் கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் இருந்த போதிலும் தேவையினை கவனத்தில் கொள்ளாமல் சமுத்தி வங்கிகளுக்கு நிதி செலவு வைத்தல், விண்ணப்பதாரர்களுக்கு கணக்குகள் இல்லாமை, உத்தியோகத்தர்கள் கால ரீதியில் விண்ணப்பத்தினை சமர்ப்பிக்காமையின் காரணமாக கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு உரித்தாக்க வேண்டிய ரூபா 26,070,000 (1,559,270,000 – 1,533,200,000) நிதி அவர்களுக்கு உரித்தற்று இருந்தது.

(ii) கணக்காய்வின் போது தெரிசெய்யப்பட்ட மாவட்டங்களான அனுராதபுரம், மொனராகலை, அம்பாந்தோட்டை, குருநாகல் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் 39,057 நலனாளிகளுக்காக நலன்கள் செலுத்துவதற்கு சமுர்த்தி வங்கிக்காக நிதி செலவு வைக்கப்பட்ட போதிலும் உள்ளபடியாக 38,582 நலனாளிகளுக்காக கொடுப்பனவுகன் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) தேசிய திட்டமிடல் திணைக்களத்தில் 2023 சனவரி 30 இல் நடைபெற்ற விஷேட கூட்டத்தின் போது மகளிர் மற்றும் சிறுவர் எடுக்கப்பட்ட துறைகள் தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் 2022 ஒக்டோபர் 14 ஆம் திகதிய மகளிர் மற்றும் சிறுவர் சுற்றறிக்கை இலக்கம் 6/2022 நலனாளிகளைத் தெரிவுசெய்யும் போது கவனத்தில் கொள்ளப்பட்ட அளவுகோல்களை கவனத்தில் கொள்ளாமல் அவசர நலன் நிதியினை வழங்குவதற்காக பதிவுசெய்த சகல கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்காக ரூபா 2,500 வீதம் 04 மாதங்களுக்காக ரூபா 10,000 நிதி செலுத்துவதற்கு தீர்மாணிக்கப்பட்டிருந்தது. 2023 மார்ச் 20 ஆம் திகதி சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள சுற்றிக்கை இலக்கம் DSD/HO/SW/14/SS/05/01/04/2022(11) இன் பிரகாரம் நலனாளிகளுக்காக ஒரே தடைவையில் ரூபா 10,000 வீதம் விரைவாக பணம் செலுத்துவதற்காக ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நலனாளிகளை தரிவு செய்வதற்கான அளவு கோல்கள் தீர்மானிக்கப்பட்டதன் பின்னர் நலனாளிகளுக:கு பணம் செலுத்துவதற்காகள கட்டளை பெற்றுக் கொள்வதற்கு 05 தாதங்களுக்கு மேற்பட்ட காலம் எடுத்தமையின் காரணமாக நலன்கள கால ரீதியில் உரிய நலனாளிகளுக்கு கிடைக்கப்பபெறாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.5.3.2 தெரிவு பரிசோதனையின் போது தெரிவு செய்யப்பட்ட மாவட்ட்களில் நலனாளிகளுக்கு பணம் செலுத்தும் நிலமை

(அ) சுற்றறிக்கை ஆலோசனை மாவட்ட மட்டத்தில் இருந்து கீழ் மட்டம் வரை தொடர்பு கொள்ளும் போது காணப்பட்ட பிரச்சினையின் காரணமாக சமுர்த்தி வங்கியூடாக நலனாளிகளுக்கு பணம் செலுத்தும் போது ஒரே தடவையில் செலுத்தாமல் தவணையாக ரூபா 10,000 செலுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

உதாரணம்:- நொச்சியாகம சமுர்த்தி வங்கி.

2023 மார்ச் 13 ஆம்திகதி நொச்சியாகம சமுர்த்தி வங்கி நடைமுறைக்கணக்கில் 115 நலனாளிகளுக்காக ரூபா 1,150,000 நிதி செலவுவைக்கப்பட்டிருந்த போதிலும் 2023 மார்ச் 23 ஆம் திகதி அதாவது 10 நாட்களின் பின்னர் ரூபா 1,012,500 தொகை 98 – 105 நலனாளிகளுக்கிடையே ரூபா 2,500 ஆக தவனையாக செலுத்தப்பட்டிருந்தது. 2023 மா்ர்ச் 20 அம் திகதிய மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சுற்றறிக்கை இலக்கம் DSD/HO/SW/14/SS/05/01/04/2022(ii) என்ற கடிதத்தின் பிரகாரம் மாதமொன்றுக்கு ரூபா 2,500 வீதம் ரூபா 10,000 தொகை ஒரே தடவையில் செலுத்துவதற்கான ஏற்பாடுகள் விநியோதித்ததன் அடிப்படையில் 2023 ஏப்ரல் 22 ஆம் திகதி மிகுதியான ரூபா 137,500 கணக்கு உரிமையாளரின் கணக்குகளுக்கு செலவுவைக்கப்படடிருந்தது. அதன் பிரகாரம் வங்கிக்கு நிதி செலவு வைக்கப்பட்ட திகதியிலிருந்து உரிமையாளர்களின் கணக்குகளுக்கு பணம் செலவுவைப்பற்கு 1½ மாத காலம் கடநதிருந்தமையால் நலனாளிகளுக்கு நலன்கள் பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு நலன்களை செலுததுவது ரொடர்பாக சமுர்த்தி வங்கி தெரிவு பரிசோதனையின் போது பின்வரும்இ விடயங்கள் வெளிப்படுத்தப்படடன.

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | சமுர்த்தி வங்கி | நலனாளிகளின் எண்ணிக்கை | பிரதேச செயலகம், சமுர்த்தி வங்கி ஆவணங்கள் சமாப்பிக்கப்பட்ட திகதி | செலவு வைக்கப்பட்ட தொகை ரூபா | சமுர்த்தி வலயத்திற்குரிய நிதி வங்கிக்கு அனுப்பப்பட்ட திகதி | கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்காக செலுத்தப்படுகின்ற படி சேகரித்த கணக்கில் செலவு வைக்கபட்ட திகதி (4067) | நலனாளிகளின் கணக்கில் நிதி செலவு வைக்கப்பட்ட திகதி மற்றும் நலனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|
| அம்பாந்தோட்டை | அம்பலாந்தொட்ட | நோனாகம | 156 | 2022.12.20 | 1,560,000 | 2023.03.13 | - | 2023.03.31-**148** |
| | | | | | | | | 2023.04.12-**01** |
| | | | | | | | | 2023.04.19-**01** |
| அனுராதபுரம் | பலுகஸ்வெவ | பலுகஸ்வெவ | 155 | 2023.02.16 | 1,540,000 | 2023.03.13 | 2023.03.24 | 2023.03.25-**155** |
| | நொச்சியாகம | நொச்சியாகம | 115 | 2023.01.16 | 1,150,000 | 2023.03.13 | | 2023.03.28 |
| | | | | | | | | 2023.04.22 |
| மொனராகலை | தனமல்வில | தனமல்வில | 157 | 2023.01.02 | 1,570,000 | 2023.03.13 | - | 2023.03.24 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கதிர்காமம் | கதிர்காமம் | 167 | 2023.03 | 1,670,000 | 2023.03.13 | - | 2023.03.22 **-167** |
| குருநாகல் | கல்கமுவ | கல்கமுவ | 103 | 2023.03.27 | 1,030,000 | 2023.03.13 | 2023.03.27 | 2023.04.09 **-101** |
| | | | | | | | | 2023.04.18 **-01** |
| | | | | | | | | 2023.04.28-**01** |
| | இப்பாகமுவ | இப்பாகமுவ | 192 | - | 1.920,000 | 2023.03.13 | 2023.03.21 | 2023.03.30-**192** |
| மட்டக்களப்பு | மண்முனை - வடக்கு | புளியந்தீவு | 177 | | 1,770,000 | 2023.03.13 | 2023.03.15 | 2023.03.21-**177** |
| | மண்முனை – மேற்கு | புதுமண்டபத்தடி | 356 | தகவல் இல்லை. | 3,650,000 | 2023.03.13 | 2023.03.17 | 2023.03.28-**356** |

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திலிருந்து நேரடியாக னெுப்புதல் ஊடாக 2023 மார்ச் 13 ஆம் திகதி மேற்கூறப்பட்ட சமுர்த்தி வங்கி நடைமுறைக்குணக்குகளுக்கு நிதி செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் உரிய நலனாளிகளின் கணக்குகளுக்கு நிதி செலவு வைப்பதற்காக 09 நாட்கள் முதல் 1½ மாதம் வரையான காலம் தாமதம் ஏற்பட்டிருந்தது. சமுர்த்தி வங்கிகளுக்கு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் ஊடாக நிதி கனிடைத்த பின்னர் வங்கிக் கணக்குகளில் இந்த கடன் உதவிப் பணம் நாட்கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டதன் மூலம் நலனாளிகளுக்கு உடனடியாக வழங்குவற்கு எதிர்பார்க்கப்பட்ட நிதி உதவி குறித்துரைத்த நேரத்தில் நலனாளிகளுக்கு வழங்குதல் மேலும் தாமதமடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) மண்முனை மேற்கு பிரதேச செயலகத்திற்கு அனுப்பப்பட்ட தகைமை பெற்ற 356 விண்ணப்பதாரர்களுக்காக நலன்களை செலுத்துவதற்காக சமர்த்தி வங்கி நடைமுறைக்கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட ரூபா 3,650,000 தொகையில் 2023 யூன் 13 ஆம் திகதி ரூபா 90,000 தொகை சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேவையினை விஞ்சி கிடைத்த உதவிப் பணம் 03 மாதம் நீண்ட காலம் சமுர்த்தி வங்கியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.5.4. நலனாளிகளால் தமது தேவைகளுக்காக நலன்களை பயன்படுத்துதல்.

கணக்கு உரிமையாளரின் பேரேட்டுக் கணக்கில் தெரிவுப் பரிசோதனை செய்த போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) நோனாகம சமுர்த்தி வங்கியில் பணிச் செல்கின்ற கணக்கு உரிமையாளர்களின் தேவைகளக்காக 2023 மே 02 இல் உள்ளவாறு கணக்குகளில் பணத்தை அகற்றுதல் தொடர்பான தகவல்கள் சமுர்த்தி வங்கியில் பயன்படுத்துகின்ற கணனி மென்பொருள் முறைமை ஊடாக பரீட்சிப்பதற்கு வசதியீனமாக இருந்தமை காண்பிக்கப்பட்டமையால் நலனாளிகளுக்கு பணம் செலவு வைக்கப்பட்ட பின் எவ்வளவு காலம் கணக்குகளில் பண மீதி காணப்பட்டது என பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது.

(ஆ) தனமல்வில சமுர்த்தி வங்கியில் கர்ப்பிணிகள் மற்றும் பாலுட்டும் தாய்மார்கள் தனிப்பட் கணக்குகளை தெரிவ் பரிசோதனை செய்த போதுவங்கியூடாக நலன்கள் கிடைத்த 157 நலனாளிகளுக்கு இடையே 08 கணக்குகளை தெரிவுப் பரிோதனை செய்த போது உரிய கணக்கு உரிமையாளர்களால் 05 நாட்களுக்கும் 01 மாதங்களுக்கும் இடையிலான காலம் கணக்ககளில் நிதி பெறப்பட்டிருந்தது. 2023 மார்ச் 22 ஆம் திகதி ரூபா 10,000 வீதம் கணக்கு உரிமையாளர்களின கணக்குகளுக்கு பணம் செலவுவைக்கப்பட்ட போதிலும் 2023 ஏப்ரல் 30 ஆம் திகதி

வரையில் 03 கணக்கு உரிமையாளர்களினால் கணக்கிலருரந்து உரிய பணம் அகற்றப்ட்டிருக்கவில்லை. கணக்காய்வுத் திகதியான 2023 மே 23 இல் உள்ளவாறு பேரேட்டுக் கணக்குகள் நாளதுவரையாக்கப்படாமையின் காரணமாக அத்திகதியில் கணக்குகளிலிலிருந்து பணம் அகற்றப்பட்டிருந்ததா என பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. விபரம் பின்வருமாறு.

| | கணக்கு இலக்கம் | கணக்கிற்கு ரூபா 10,000 செலவுவைக்கப்பட்ட திகதி | 2023.04.30 இல் உள்ளவாறு கணக்கின் மீதி ரூபா |
|---|---|---|---|
| (i) | 17/26444 | 2023.03.22 | 10,605 |
| (ii) | 17/26503 | 2023.03.24 | 40,905 |
| (iii) . | 19/26505 | 2023.03.24 | 10,605 |

(இ) பலுவஸ்வெவ சமுர்த்தி வங்கியின் பயனாளிகளுக்காக பணம் செலவு வைக்கப்பட்டபின் அதாவது வைப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து 02 மாதங்களுக்கு அண்மித்த காலம் கணக்கில் காசு மீதி காணப்பட்டதுடன் கணக்கு உரிமையாளர் பணத்தை பெறாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது. 154 நலனாளிகளுக்கிடையே கணக்காய்வுத் திகதியான 2023 யூன் 26 ஆம் திகதி வரையில் 23 நலனாளிகளுக்குரிய பணம் கணக்குகளிலிருந்து அகற்றப்படாதிருந்ததுடன் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட அவசர நிதி உதவித் தொகையின் நலன்கள் உரிய நலனாளிகளால் பெறப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது

### 3.5.5 தகைமை பெற்ற விண்ணப்பதாரர்களுக்கான நலன் பணம் கிடைக்காமை.

#### 3.5.5.1 நலன்கள் உரித்தற்ற கர்ப்பிணிகள் மற்றும் பாலுட்டும் தாய்மார்களின் ஒட்டு மொத்த நிலைமை.

(அ) முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி தொடர்பான தேசிய செயலகத்திற்கு கிடைத்த முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி தொடர்பான தகவல்களின் படி நாடு முழுவதும் அமுல்படுத்தப்படுகின்ற பிரதேச செயலக பிரிவுகக்கிடையே 23 பிரதேச செயலகப் பிரிவுக்குரிய நலன்களுக்காக விண்ண்பித்த கர்ப்பிணிகள் மற்றும் பாலுட்டும் தாய்மார்கள் 392 பேர்களுக்கான நலன்களை செலுத்துவதற்காக ரூபா 3,920,000 பணம் போதியளவில் கிடைத்திருக்க வில்லை. (இணைப்பு 05) செலுத்துவதற்கு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட போமிலும் 2023 யூன் 30 ஆம் திகதி வரை இதனைச் செலுத்துவதற்கு பணம் கிடைக்காமையின் காரணமாக மேற்கூறப்பட் நலன்கள் விண்ணப்பித்த கர்ப்பிணிகள் மற்றும் பாலுட்டும் தாய்மார்களுக்கான பணம் நலன்கள் உரித்தற்றுப் டீபாயிருந்தது.

(ஆ) 35 பிரதேச செயலகப் பிரிவுகளுக்குரிய 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நலன்களுக்காக விண்ணபித்த கர்ப்பிணிகள் மற்றும் பாலுட்டும் தாய்மார்கள் 299 பேர்களுக்காக உத்தியோகத்தர்களின் தவறுகள் மற்றும் சமுர்த்தி வங்கி மாற்றப்பட்டதன் காரணமாக குறித்துரைத்த திகதியில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை (இணைப்பு 06) அதன் பிரகாரம் அந்த விண்ணப்பதாரர்களுக்காக நிதி நலன்கள் உரித்தற்றுப்போயிருந்தது. சுற்றறிக்கை ஆலோசனைப்படி கர்ப்பிணி தாய்மார்கள் வசிக்கின்ற கிராம உத்தியோகத்தர் பிரகாரம் உரிய சமுர்த்தி வங்கியை தெரிவுசெய்வதற்காக ஆலோசனை வழங்குவதல் மற்றும் குறித்துரைத்த திகதியில் உரிய நிறுவனத்திற்கு விண்ணபங்களை சமர்ப்பிப்பதற்காக போதியளவான கவனம்

செலுத்தாமையின் காரணமாக இந்த விண்ணப்பதாரர்களுக்காக நிதி நலன்கள் உரித்தற்றுப்போயிருந்தது.

(இ) சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் சமர்ப்பித்த தகவல்களின் படி 25 மாவட்டங்களில் அமுலிலுள்ள 1090 சமுர்த்தி வங்கிகளுக்காக ரூபா 1,559,270,000 செலவு வைக்கப்பட்டிருந்தமையும் கலைத்தல் அறிக்கையின் பிரகாரம் கர்ப்பிணிகள் மற்றும் பாலுட்டும் தாய்மார்கள் 153,320 பேர்களுக்காக மாத்திரம் ரூபா 1,553,200,000 பணம் செலுத்தப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. மேற்கூறப்பட்ட 2(அ)(ஆ) இல் குறிப்பிடப்பட்ட கர்ப்பிணிகள் மற்றும் பாலுட்டும் தாய்மார்கள் 691 பேர்களுக்காக நலன்கள் உரித்தற்றமை தொடர்பாக கவனத்தில் கொள்ளும் போது கர்ப்பிணிகள் மற்றும் பாலுட்டும் தாய்மார்களுக்காக கால ரீதியில் நலங்களை வழங்குவதற்கு உச்ச திட்ட முறைமையொன்று ஈடுபடுத்துதல் போதியளவான பிரகாரம் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி தொடர்பான தேசிய செயலகத்திலிருந்து கிடைக்க தகவல்களின்படி 2022 திசம்பர் 31 ஆம் திகதி வரையில் 07 பிரதேச செயலகத்திற்குரிய நலன்கள் விண்ணப்பிக்காத அல்லது குறித்துரைத்த காலத்தின் பின்னர் அனுப்பப்பட்ட புதிய விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை 109 ஆகும். (இணைப்பு 07)

**3.5.5.2 கணக்காய்வினால் பௌதீக ரீதியில் பரீட்சிக்கப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளின் நிலைமை.**

(அ) நோனாகம சமுர்த்தி வங்கியில் தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் நலனாளிகளின் பதிவேடுகள் பெயர் குறிப்பிடப்பட்ட நலனாளிகள் 06 பேர்களுக்காக வங்கிக் கணக்கு காணப்படாமை மற்றும் பிரவில் குடியிருக்காமையின் காரணமாக 2023 மே 05 ஆம் திகதி நலன்கள் உரித்தற்று இருந்தது. அதன் பிரகாரம் கர்ப்பிணி தாய்மாருக்காக ரூபா 60,000 பணம் செலுத்தாமல் மீதியாக காணப்பட்டது.

(ஆ) இறுதி நிலைமைக்கு உட்படுத்தப்பட்ட (finalize) நலன் பேர் பதிவேடு அனுப்பப்பட்ட பின்னர் அம்பலாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவின் மூலம் புதிய நலனாளிகளுக்காக கொடுப்பனவு செய்வதற்காக நோனாகம சமுர்த்தி வங்கிக்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் மேலதிக நலன்களுக்காக நிதியேற்பாடு சமுர்த்தி திரணைக்களத்திலிருந்து கிடைக்காமையின் அடிப்படையில் அந்த நலனாளிகளுக்கான நலன்கள் உரித்தற்றுப் போயிருந்தது. அந்த நலன்கள் நிதி சமுர்த்தி திணைக்களத்திலிருந்து கோரப்பட்ட போதிலும் 2023 மே 02 ஆம் திகதியிலும் அந்த நலனாளிகளுக்காக பணம் கிடைத்திருக்க வில்லை

(இ) இப்பாகமுவ பிரதேச செயலகப் பிரிவுக்குரிய நலனாளிகளுக்கிடையே கணக்காய்வுத் திகதியான 2023 யூன் 28 ஆம் திகதி வரை பதிவு செய்த நலனாளிகளுக்காக பணம் செலுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| தகைமைபெற்ற விண்ணப்பதாரரின் பெயர் | தேசிய அடையான அட்டை இலக்கம் | கிராம உத்தியோகத்தர் பிரிவு | சமுர்த்தி வங்கி |
|---|---|---|---|
| i) R.M.H.M. ரத்னாயக்க | 935922801V | 437, கொடரத்மலே | கந்துளவ |
| ii) J.M.P.H. உடுகம | | 492, அறகம | கொக்கரல்ல |
| iii) P.G.C.H. குணரட்ண | 946090808 V | ராகெதர | பியதுரே |
| iv) M.A. ரம்சியா பேகம் | 198168904077 | இப்பளவ | கொக்கரல்ல |

(i) R.M.H.M. ரத்னாயக்க என்பவருக்கு தமது பணத்தை பெற்றுக்கொள்வதற்காக கந்துளவ மற்றும் மெல்சிறிபுர சமுர்த்தி வங்கிகள் இரண்டிலும் 02 கணக்குகள் திறந்திருந்த போதும் கணக்காய்வுத் திகதியான 2023 யூன் 28 ஆம் திகதி வரையிலும் நலன்கள் கிடைத்திருக்கவில்லை. தாய்மார்களின் பெயர் பதிவேட்டுக்குரிய சமுர்த்தி வங்கிக்கு அனுப்பும் போது சமுர்த்தி வங்கி அதிகாரப் பிரதேசத்திற்கு உரித்தற்ற நலனாளிகள் அனுப்பப்பட்டமையால் மேலதிக செலுத்துதல்களுக்காக வங்கியில் போதியளவான நிதி ஏற்பாடு காணப்படாமையின் காரணமாக குறித்துரைத்த நேரத்தில் தகைமை பெற்ற நலனாளிகளுக்காக நலன்கள் உரித்தற்றுப் போயிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) J.M.P.H. உடுகம என்பவருக்கு 2022 நவம்பர் 04 ஆம் திகதி விண்ணப்பத்துக்குரிய உத்தியோகத்தருக்கு கையளிக்கப்பட்பின்னர் உரிய விண்ணப்பம் நலனாளிகளை தெரிவுசெய்வதற்காக முறையாக அனுப்பப்படாமையால் கணக்காய்வுத் திகதியான 2023 யூன் 28 வரையிலும் நலன்கள் கிடைத்திருக்கவில்லை.

### 3.5.6 நலனாளிகளுக்காக நிதி உதவி பெற்றதை உறுதிப்படுத்துதல்.

(அ) இந்த நிதி உதவி நிகழ்ச்சித்திட்டம் பிரதேச செயலகப் பிரிவில் அமுல்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்யும் பொறுப்புக்கள் மற்றும் அதிகாரம் பிரதேச செயலாளருக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான கீழே குறிப்பிடப்படுகின்ற பகுதிகளை பரிசோதனை திகதி வரையிலும் பின்வரும் பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு உரிய நலனாளிகளுக்காக சமுர்த்தி வங்கி ஊடாக பணம் செலுத்துதல் தொடர்பான செயல் முன்னேற்றத்தைக் காண்பிக்கின்ற தகவல்கள் பிரதேச செயலகத்தில் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை.

| | |
|---|---|
| அம்பலாந்தோட்ட பிரதேச செயலக பிரிவு | 2023.05.02 |
| கல்கமுவ பிரதேச செயலக பிரிவு | 2023.05.16 |
| நொச்சியாகம பிரதேச செயலக பிரிவு | 2023.05.17 |
| தனமல்வில பிரதேச செயலக பிரிவு | 2023.05.23 |
| கதிர்காமம் பிரதேச செயலக பிரிவு | 2023.05.24 |
| மண்முனை - வடக்கு பிரதேச செயலக பிரிவு | 2023.06.27 |
| மண்முனை - மேற்கு பிரதேச செயலக பிரிவு | 2023.06.27 |
| இப்பாகமுவ பிரதேச செயலக பிரிவு | 2023.06.28 |

(ஆ) 2023 திசம்பர் 09 ஆம் திகதி சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் இலக்கம் DSD/HO/05/MF/15/SW-3 மற்றும் 2023 பெப்ரவரி 23 ஆம் திகதிய சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் இலக்கம் DSD/SCBBU/21/2022/03/XVII கடிதங்களில் காண்பிக்கப்படுகின்ற பிரகாரம் கணக்கு உரிமையாளர்களின் தகவல்கள் பதிவு செய்யும் போது கணக்கு உரிமையாளர்களின் தொலைபேசி இலக்கத்தை உள்ளடக்குவதற்கு வங்கியில் பேணிச் செல்லப்பட்ட மென்பொருள் முறைமையில் வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்ததாக காண்பிக்கப்பட்ட போதிலும் வினாக்கொத்து ஊடாக தகவல்கள் பெறப்பட்ட நலனாளிகளுக்காக இந்த நிதி உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிடைத்த படிகள் அவர்களின் கணக்குகளுக்கு

செலவு வைக்கப்பட்டமை SMS குறுந்தகவல் ஊடாக அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் நலனாளிகளுக்காக நலன்கள் கிடைத்தமைக்கு அறிவிப்பதற்கு எதிர்பார்க்கும் வகையில் மேற்கொள்ளப்ப டாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | வழங்கப்பட்ட வினாக்கொத்துக்களின் எண்ணிக்கை | பதிலளிக்கப்பட்ட வினாக்கொத்துக்களின் எண்ணிக்கை | பதிலளிக்கப்பட்ட வினாக்கொத்துக்களுக்கு இடையே SMS அறிவித்தல் கிடைக்காத நலனாளிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| அநுராதபுரம் | பலுகெஸ்வெவ | 30 | - | 156 |
| | நொச்சியாகம | 100 | 100 | |
| மொனராகல | தனமல்வில | 65 | 64 | |
| | கதிர்காமம் | 35 | 35 | |
| அம்பாந்தோட்டை | அம்லாந்தோட்ட | 80 | 51 | |
| குருணாகல் | கல்கமுவ | 80 | 23 | |
| | இப்பாகமுவ | 125 | - | |
| மட்டக்களப்பு | மண்முனை - வடக்கு | 190 | 190 | |
| | மண்முனை - மேற்கு | 100 | - | |

## 3.6 உழவர்களுக்காக நிதி உதவி வழங்குதல்.

### 3.6.1 அறிமுகம்

**கமநல அபிவிருத்தி திணைக்களம்**

2000 இன் 46 ஆம் இலக்க சமநல அபிவிருத்தி சட்டம் மற்றும் அதன் திருத்தங்களின் பிரகாரம் அமுல்படுகின்ற கமநல அபிவிருத்தி திணைக்களம் அரசாங்கத்தின் விவசாய கொள்கைகளுக்கு இணங்க விவசாய ரீதியான காணிகளை ஈடுபடுத்துவதற்குரிய ஏற்பாடுகளை வழங்குதல், விவசாய மற்றும் கால ரீதியில் செயற்திட்டங்களைக் கட்டியெழுப்பும் போது ஏனைய நிறுவனங்களுக்குத் தேவையான நிறுவனம்சார், சட்ட ரீதியான உதவிகள் மற்றும் முகாமைத்துவ சேவைகளை வழங்குதல் உட்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. 565 கமநல சேவை நிலையங்களில் அமுல்படுத்தப்படுகின்ற கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு 16,909 விவசாயிகள் சங்கம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

**வறுமை மற்றும் பாதிப்பிற்கு உட்படக்கூடிய நபர்களின் வாழ்வாதார நிலைமையை கட்டியெழுப்புதல்.**

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியின் அடிப்படையில் அமுல்படுத்தப்படுகின்ற உணவு பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீட்பு அவசர உதவி செயற்திட்டத்தினி மூலம் நெல் விவசாயிகளுக்காக விஷேட கவனம் செலுத்தி நிதி உதவி செலுத்துவதற்காக தேவையான பணம் கடன் தொகையாக தேசிய திட்டமிடல் திணைக்களம் ஊடாக கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

**விவசாயிகளுக்காக உதவுதல்.**

விவசாய உற்பத்திகளின் கிரயம் உயர்வடைந்து செல்வதற்கு சலுகை வழங்குதல் மற்றும் 2022/2023 பெரும்போகத்தில் உணவு உற்பத்திகளை ஊக்குவிப்பதற்காக ஒரு ஹெக்டேயருக்கு ரூபா 20,000 ஆன வகையில் ஒரு விவசாயிக்கு ஆகக் கூடியது 02 ஹெக்டேயருக்காக நிலத்தைத் தயாரிப்பதற்கு முன் மற்றும் நட்டியதன் பின் இரண்டு தவணைகளின் போது நிதி உதவியாக வழங்கப்பட்டமை செயற்திட்டத்திற்குரிய நிருவாகக் கைநூலில் குறிப்பிடப்படடிருந்தது. இந்த நிதி உதவி விவசாயிகள் 600,000 இற்கு அண்ணளவான எண்ணிக்கைக்கு நேரடியாக அவர்களின் வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்படுவதுடன் அதற்காக இலங்கை, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி மற்றும் கிராமிய அபிவிருத்தி வங்கி என்ற வங்கிகளில் கணக்குகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும் செயற்திட்டத்தின் கீழ் நிதி உதவி பெற்றுக்கொள்வதற்காக 2022/2023 பெரும்போகத்தில் நெற் பயிரிட்ட விவசாயிகளில் இருந்த கமநல சேவை நிலையங்களில் 556 விவசாயிகளின் தகவல்கள் வழங்கப்பட்டிருந்தது.

### 3.6.2 விவசாயிகள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்துதல் மற்றும் கொடுப்பனவு திட்ட முறைமை.

#### 3.6.2.1 நிதி உதவி செலுத்தும் முறைமை தொடர்பாக தொடர்புடைய தரப்பினருக்கு அறிவுறுத்துதல் மற்றும் கொடுப்பனவு திட்ட முறைமை.

செயற்திட்டத்தின் நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பாக விநியோகிக்கப்பட்ட நிருவாக கைநூலில் (ix) (E) இன் பிரகாரம் செயற்திட்டம் தொடர்பாக சகல தரப்பினருக்கும் அறிவிப்பதற்கும், செயற்திட்டத்துடன் தொடர்புடைய தரப்பினருக்கு செயற் திட்டத்தை ஸ்தாபிப்பதற்காக ஆகக் கூடிய பங்களிப்பை வழங்குவதற்கான சந்தர்ப்பத்தை தயாரித்தல் மற்றும் பல்வேறு தொடர்பு வழிகளின் இடையே நிதி உதவியை பெற்று வழங்குவதற்கு பொருத்தமான நபர்களின் தகவல்களை பெற்றுக்கொள்ள முடியுமான வகையில் தொடர்பாடல் உபாய வழிகள் காணப்பட வேண்டியிருந்தமை குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் விவசாயிகளை உள்ளடக்கிய தொடர்புடைய தரப்பினருக்கு அறிவிப்பதற்காக 2022 ஆகஸ்ட் முதல் செப்டெம்பர் வரையான காலப் எல்லையில் தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை, இணையதளம் மற்றும் அறிவித்தல் பதாதையில் பொருத்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) செயற்திட்டம் தொடர்பாக விவசாயிகளுக்கு அறிவுறுத்துதல்**

இந்த செயற்திட்டம் தொடர்பாக விவசாயிகளை உள்ளடக்கிய தொடர்புடைய தரப்பினருக்கு அறிவிப்பதற்காக செயற்திட்ட கைநூலில் குறிப்பிடப்பட்ட மக்களுக்கிடையே மிகவும் பிரபல்யமான தொடர்புடைய தொடர்பாடல் முறைமை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. கமநல பிரதேச உத்தியோகத்தரால் கமநல சேவை நிலையங்கள், விவசாய அமைப்பு அலுவலகங்கள், விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் அலுவலகங்களில் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்தது. எனினும் சில கமநல சேவை நிலையங்களில் உத்தியோகத்தர்கள் மற்றும் 2022/23 பெரும்போகத்தல் நெல் பயிரிட்ட விவசாயிகளுக்கு நிதி உதவிகளை வழங்குதல் தொடர்பாக அறிவிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட கால எல்லையின் பின்னர் ஒக்டோபர் முதல் சனவரி வரையான காலத்தில் அறிவிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப் பட்டது.

**(ஆ) உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்துதல்**

(i) உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார அவசர நிதி உதவி செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான உடன்படிக்கை ஆரம்ப சந்தர்ப்பத்திலிருந்து தேசிய திட்டமிடல் திணைக்களத்துடன் கமநல அபிவிருத்தி திணைக்களம் கலந்துரையாடி பேணிச் சென்ற போதிலும் எதிர்பார்க்கப்பட்ட கால எல்லையில் விவசாயிகளுக்கு நிதி உதவியை

வழங்கும் போது நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) 2022/23 பெரும்போகத்தல் நெல் பயிரிட்ட விவசாயிகளின் தகவல்களை பெற்றுக்கொள் வதற்காக விவசாய அபிவிருத்தி பிரதேச உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கும் தொலை பேசி ஊடாகவும் மற்றும் Whatsapp மூலமும் 2022 நவம்பரில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த அறிவித்தலின் போது செயற்திட்டத்தின் கீழ் நிதி உதவி செலுத்த வேண்டிய கால எல்லை, விவசாயிகளின் நாளதுவரையாக்கப்பட்ட வங்கி கணக்கு ஈடுபடுத்துதலின் முக்கியத்துவம், விவசாயிகளின் தமது மற்றும் பிரதேச கணக்குப் பிரிவுகள் இணக்கம் செய்யப்படவேண்டியிருந்தமை தொடர்பாக போதியளவான அறிவித்தல் மேற்கொள்ளப்ப டாதிருந்தமை சில கமநல அபிவிருத்திப் பிரதேச உத்தியோகத்தர்களுடன் செயற் திட்டத்தை அமுல்படுத்துதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் போது அவதானிக்கப்பட்டது. 2023 மார்ச் மாதம் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்ற சந்தர்ப்பம் வரையிலும் இந்த Whatsapp அறிவித்தல் உத்தியோகத்தர்களுக்கு கிடைக்காதிருந்தமையால் அது தொடர்பான விரிவான தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

**(இ) விவசாயிகளின் தரவுகள் Geogoviya தரவு முறைமையில் உள்ளடக்குதல் மற்றும் கொடுப்பனவு செய்தல்.**

2022/2023 பெரும் போதுகத்தின் போது நெல் பயிரிட்ட விவசாயிகள் தொடர்பான தகவல்களைச் சேகரித்தல் கமநல சேவை நிலையங்களுக்கு நியமிக்கப்பட்டு சேவையாற்றுகின்ற கமநல ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர்கள் மூலம் மேற்கொள்ள பட்டிருந்ததுடன் கமநல சேவை பிரதேச உத்தியோகத்தர் மேற்பார்வையின் கீழ் செயற் திட்ட அலுவலகத்தில் கணனிமயப்படுத்தப்பட்ட தரவு முறைமையில் தரவுகள் வழங்கப்படுகின்றது. நெல் பயிரிட்ட கமநல சேவை நிலையங்கள் 556 காணப்படுகின்ற மையால் ஒவ்வொரு கமநல சேவை நிலையங்களுக்கும் தரவு முறைமையில் தரவுகளை உள்ளடக்குவதற்காக மிகவும் குறுகிய காலம் வழங்கப்பட்டிருந்தது. தரவுகள் உள்ளடக்குவதற்காக போதியளவான காலம் கிடைக்காமையின் காரணமாக சில விவசாயிகளின் தரவுகள் பெற்றக்கொள்ளப்பட்டிருந்த கால எல்லையில் உள்ளடக்குவதற்கு முடியாதிருந்தது.

செயற்திட்ட அலுவலகத்தின் மூலம் தரவுகளை பரீட்சித்து நலன்களை பெற்றுக் கொள்வதற்கு தகைமை பெறுகின்ற விவசாயிகளுக்கு நிதி உதவியைச் செலுத்துதல் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி மற்றும் கிராமிய அபிவிருத்தி வங்கி என்ற 04 வங்கிகள் மூலம் 2022 திசெம்பர் 30 ஆந் திகதி முதல் 2023 மே 25 ஆம் திகதி வரையான காலத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்தக் கொடுப்பனவுகள் தொடர்பாக இணக்கம் செய்யும் நடவடிக்கைகள் 2023 யூலை 31 வரை மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஈ) 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 55 ஆவது பிரிவின் பிரகாரம் கமநல ஆணையாளர் நாயகத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சகல கமநல அபிவிருத்தி சபைகளினாலும் சுயமாக அதிகாரப் பிரதேசத்தில் உள்ளடக்கப்பட்ட விவசாய காணிகளை அளப்பதற்கு திட்டமிடல் வேண்டும். எனினும் உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீற்பு அவசர உதவி செயற்திட்டத்தை அமுல்படுத்துகின்ற சந்தர்ப்பம் வரையிலும் வயல் காணிகளை அளக்கும் நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்படாதிருந்தமையால் விவசாயிக ளினால் காணி அளவு தொடர்பாக வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் நிதி உதவி வழங்குவதற்கு ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3.6.2.2 நிதி உதவி செலுத்துவதற்காக நிரந்தர திட்ட முறைமையொன்றை தயாரிப்பதன் தேவை.**

கமநல அபிவிருத்தி திணைக்களத்தால் பல்வேறு சந்தர்ப்பங்களின் போது உள்நாட்டு நிதியம் மற்றும் வெளிநாட்டு கடன் நிதியத்தைப் பயன்படுத்தி பல்வேறு செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் விவசாயிகளை ஊக்குவிப்பதற்கான மானியங்கள் திட்ட முறைமை அமுல்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டம் மற்றும் மானிய நிகழ்ச்சித் திட்டங்களின் நலன்கள் எதிர்பார்க்கப்பட்ட காலத்தின் போது விவசாயிகளுக்கு வழங்குவதற்காக குறித்துரைத்த நீண்ட கால பயன்படுத்தக்கூடிய முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. பசளைகளுக்கு பதிலாக நிதி வழங்குதல், சேதனப் பசளை களுக்காக பணம், எரிபொருள் மானியம் வழங்குதல், ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் உதவியின்கீழ் நெற்பயிரிடும் விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்குதல் மற்றும் வேளாண்மை பயிரிடுவதற்காக பசளை வழங்குவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் உதவியின் கீழ் நெல் விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்குதல், பசளை பெற்றுக் கொள்வதற்காக வவுச்சர்கள் வழங்கும் போது மீண்டும் அந்த வவுச்சர்கள் திணைக் களத்தினால் பெறப்பட்டு பசளை வழங்குதல் போன்றவை 2016 முதல் 2023 வரையான காலத்தில் அமுல்படுத்தப்பட்ட மானிய நிகழ்ச்சித் திட்டத்தம் சிலவாகும். பல்வேறு மானிய நிகழ்ச்சித் திட்டங்களுக்காக குறித்துரைத்த திட்டமுறைமையொன்று பயன்படுத்தப்படாமை யினால் உரிய தரவுகள் நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து நிகழ்ச்சித் திட்டத்திற்கு விவசாயிகளிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டி ஏற்பட்டமை, நலன்கள் எதிர்பார்க்கப்பட்ட கால எல்லையில் வழங்குவதற்கு முடியாதிருந்தமை, உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் வசதியீனதிதிற்கு உட்பட்டமை போன்றவை இடம்பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3.6.2.3 உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீட்பு அவசர உதவி செயற்திட்டத்திற்கான நிதி உதவி ஏற்பாட்டை வழங்குதல் மற்றும் மானியங்களை செலுத்தும் திட்ட முறைமை.**

செயற்திட்டத்திற்காக வழங்கப்படுகின்ற பணத்தை வைப்புச் செய்வதற்காக புதிய வங்கிக் கணக்கொன்று ஆரம்பிக்குமாறு 2022 நவம்பர் 22 ஆந் திகதி இலங்கை மத்திய வங்கியின் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தால் கமநல அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவித்து ஒரு மாத காலத்தின் பின்னர் 2022 திசெம்பர் 21 ஆம் திகதி இலங்கை வங்கி டொரிங்டன் கிளையில் கணக்கு இலக்கம் 7038648 இன் கீழ் பணிப்பாளர் நாயகம், கமநல அபிவிருத்தி திணைக்களம், செயற்திட்ட கணக்கு ஆரம்பிக்கப் பட்டிருந்தது. 2022/23 பெரும்போகத்தில் நெல் பயிரிட்ட விவசாயிகளுக்கு நிதி மானியங்களை வழங்குவதற்காக 2022 திசெம்பர் 23 ஆம் திகதி முதல் 2023 சனவரி 05 ஆம் திகதி வரையான கால எல்லையில் ரூபா 08 பில்லியன் தொகை உரிய வங்கி கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்திற்குரிய வழிகாட்டியின் பிரகாரம் அவசர உதவி செயற்திட்டமாக அமுல்படுத்தப்படுகின்ற இந்த செயற்திட்டத்தின் மூலம் 2022/23 பெரும் போகத்தில் பயிரிடல் நடவடிக்கைகளை மேற்கொண்ட நெல் விவசாயிகளுக்கு ஹெக்டேயர் ஒன்றிற்கு ரூபா 20,000 ஆன பிரகாரம் நிலக் கூறுகள் தயாரிப்பதற்கு முன் பயிர்ச் செய்கை ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் இரண்டு தவணைகளில் மானியம் வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. 2022 செப்டெம்பர் முதல் 2023 மார்ச் வரையான காலத்தில் உரிய பயிர்ச் செய்கைப் போகம் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் நிலத்தை தயாரித்தல் மற்றும் பயிர்ச் செய்கைகளை ஸ்தாபித்தல் 2022 செப்டெம்பர் மற்றும் நவம்பருக்கு இடையிலான காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டதாக குருணாகல், அநுராதபுரம், அம்பாந்தோட்டை, மொனராகலை மற்றும் மட்டக்களப்பு என்ற மாவட்டங்களில் தெரிவாக தெரிவு செய்யப்பட்ட கமநல சேவை நிலையங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

அதன் பிரகாரம் நிலக் கூறுகளை நிலத்தைத் தயாரித்தல் மற்றும் நெல் விதைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பம் வரையிலும் உரிய கணக்குகளை ஆரம்பிப்பதற்கோ அல்லது செயற்திட்டத்திற்குரிய பணம் கமநல

அபிவிருத்தி திணைக்க ளத்திற்கு கிடைக்கப்பெறாதிருந்தமையால் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் கால ரீதியில் மானிய தொகையை வழங்குவதற்கு முடியாதிருந்தது.

(ஆ) ஆசிய அபிவிருத்தி வங்கியினால் சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்ட வழிகாட்டியின் பிரகாரம் ஆகக் கூடிய விளைச்சலுடன் உள்ள வலயங்களில் நெல் பயிரிடும் விவசாயிகளில் 600,000 இற்கு அளவிலான அளவில் மானியங்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் 2022/23 பெரும்போகத்தில் நெல் பயிரிட்ட 1,176,633 விவசாயிகளுக்கு 2023 யூலை 31 வரை ரூபா 8,127,363,700 மானியங்களுக்காக கோரப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட எண்ணிக்கையை விஞ்சி 576,633 விவசாயிகள் அதாவது 96 சதவீதம் செயற்திட்டத்தின் கீழ் நிதி உதவி மானியத்திற்காக விண்ணப்பித்திருந்தனர்.

### 3.6.3 கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் நெல் விவசாயிகளுக்காக மானியம் செலுத்துதல்

#### 3.6.3.1 மானியம் செலுத்துதல் தொடர்பாக கால ரீதியில் செயல் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல் மற்றும் ஒட்டுமொத்த நாட்டினதும் செயல் முன்னேற்றம்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2022/23 பொரும் போகத்தில் நெற்பயிர் செய்த விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்குவதற்காக விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இருந்து 2023 யூலை 31 வரையான காலத்தில் 1,176,633 விவசாயிகளுக்கு மானியம் வழங்குவதற்கான தகவல்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், இந்த விவசாயிகளில் 1,039,961 விவசாயிகளுக்காக ரூபா 7,424,062,928 தொகை விவசாயிகளுக்கு செலுத்தப்பட்டிருந்தமையும், உரிய தொகை பதிவேடுகளின் மூலம் தீர்த்து வைக்கப்பட்டமையும், 2023 செப்டம்பர் 14 ஆம் திகதி கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தால் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது.

(ஆ) விவசாயிகளுக்கு நிதி உதவி செலுத்துதல் தொர்பாக செயற்திட்ட அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட தகவல்களின் படி 2022 திசெம்பர் 30 ஆம் திகதி முதல் 2023 மார்ச் 31 ஆம் வரையான 03 மாத கால எல்லையில் 959,689 விவசாயிகளுக்காக ரூபா 6,960,116,936 நிதி உதவி செலுத்தப்பட்டிருந்தது. அந்த விவசாயிகளின் எண்ணிக்கை நிதி உதவி வழங்குவதற்காக விண்ணப்பித்த ஒட்டு மொத்த விவசாயிகளின் சதவீதமாக 81 சதவீதமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. விரிவான தகவல்கள் காண்பிக்கப்படுகின்றது.

| மாதம் | விவசாயிகளின் எண்ணிக்கை | செலுத்தப்பட்ட தொகை. |
|---|---:|---:|
| 2022 திசெம்பர் | 9,449 | 127,072,000 |
| 2023 சனவரி | 801,690 | 5,872,538,000 |
| 2023 பெப்ரவரி | 8,981 | 74,515,775 |
| 2023 மார்ச் | 139,569 | 885,991,161 |
| மொத்தம் | 959,689 | 6,960,116,936 |

#### 3.6.3.2 வங்கி கணக்கு செயலிழந்தமையால் கொடுப்பனவுகள் நிராகரிக்கப்பட்டது.

(அ) ஜீஓகொவியா (Geo Goviya) என்ற தரவு முறையின் பிரகாரம் 25 மாவட்டங்களின் 150,980 ஹெக்டேயர் பயிர் செய்த 209,493 விவசாயிகளின் வங்கி கணக்குகள் செயலிழந்தமையை உள்ளடக்கிய பல்வேறு காரணங்களின் அடிப்படையில் கொடுப்பனவுகள் நிராகரிக்கப்பட்டிருந்தது. விவசாயிகளின் வங்கி கணக்குகள் நாளது வரையாக்கப்பட்டதன் பின்னர் 2023 யூலை 31 ஆம் திகதி வரையில் அந்த விவசாயிகளுக்கு ரூபா 1,509,573,271 நிதி உதவியாக செலுத்தப்பட்டிருந்தது. அந்த விவசாயிகளின் 72 சதவீதம் அதாவது 141,563 விவசாயிகள் 06 மாவட்டங்களில்

அறிக்கையிடப்படுவதுடன், நிராகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளின் பெறுமதி ரூபா 1,090,238,553 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

| தொடர் இலக்கம் | மாவட்டம் | விவசாயிகளின் எண்ணிக்கை | காணியின் அளவு | பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|---|
| 1. | குருநாகல் | 63,988 | 28,374 | 283,745,365 |
| 2. | அம்பாறை | 21,602 | 23,544 | 235,440,593 |
| 3. | பொலன்னறுவை | 19,725 | 21,188 | 211,860,500 |
| 4. | திருகோணமலை | 13,278 | 14,421 | 144,056,000 |
| 5. | மட்டக்களப்பு | 12,929 | 17,565 | 175,626,000 |
| 6. | மாத்தறை | 10,041 | 3,951 | 39,510,095 |
| | மொத்தம் | **141,563** | **109,043** | **1,090,238,553** |

(ஆ) 2023 ஆகஸ்ட் 11 ஆம் திகதி செயற்திட்ட அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் நிதி உதவி தொகை செலுத்துவதற்காக வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்ட ளுடனி 98 உள்ளடக்கப்பட்டிருந்த 25 மாவட்டங்களில் 31,008 விவசாயிகளுக்குரிய வங்கி கணக்குகள் செயலிழந்து காணப்பட்டதன் காரணமாக ரூபா 181,109,892 நிதி உதவி பணத்தை செலுத்துவதற்கு முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. விரிவான தகவல்கள் இணைப்பு 08 இல் காண்பிக்கப்படுகின்றது.

- ஹெக்டேயர் அரை ஹெக்டேயர் அல்லது அதற்கு குறைவான நெட்பயிரிட்ட கொடுப்பனவுகள் 18,546 விவசாயிகளுக்காக வங்கி கணக்குகள் செயலிழந்ததன் காரணமாக செலுத்துவதற்கு முடியாதிருந்த நிதி உதவிகளின் பெறுமதி ரூபா 49,786,351 ஆக இருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.
- நிதி உதவி செலுத்துவதற்காக பயன்படுத்தப்பட்ட 04 வங்கி கணக்குகளில் கொடுப்பனவுகள் நிராகரிக்கப்பட்டதை கவனத்தில் கொள்ளும் போது மக்கள் வங்கியின் கணக்குகள் ஆரம்பித்த விவசாயிகளின் கணக்குகளில் அதிக எண்ணிக்கை செயலிழந்து காணப்பட்டமை மேலும், அவதானிக்கப்பட்டது.

### 3.6.4 உழவர்களுக்காக நிதி உதவி செலுத்தும் மாவட்ட மட்டத்தின் செயல் முன்னேற்றம்

நாட்டில் 25 மாவட்டங்களையும் மேவுகை செய்யும் வகையில் 2022/23 பெரும் போகத்தில் நெல் பயிரிட்ட விவசாயிகளுக்காக மானிய நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்பட்டது. கணக்கு ஆய்வின் போது மானியம் செலுத்துதல் தொடர்பாக பரீட்சிப்பதற்காக தெரிவாக தெரிவு செய்யப்பட்ட மட்டக்களப்பு, மொனராகலை, குருநாகல் மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களில் கமநல சேவை நிலையங்களில் அதிக விவசாயிகளின் எண்ணிக்கையில் நெல் பயிரிட்ட மற்றும் குறைவான விவசாயிகளின் எண்ணிக்கையில் நெட்பயிரிட்ட கமநல சேவை நிலையங்களில் ஆகக் குறைந்தது 03 கமநல சேவை நிலைகளை பிரதி நிதித் துவப்படுதம் வகையில் மானியம் செலுத்துதல் தொடர்பாக பரீட்சிப்பதற்காக தகவல்களை கோருதல் அல்லது பௌதீக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

#### 3.6.4.1 அநுராதபுர மாவட்டத்தில் நெல் விவசாயிகளுக்காக மானியம் செலுத்துதல்.

இந்த மாவட்டத்தில் 128,649 ஹெக்டேயர் நெற்பயிரிட்ட 156,240 விவசாயிகள் மானியத்திற்காக விண்ணப்பித்திருந்தனர். செயற்திட்ட அலுவலகத்தின் தரவு முறைமையின்

மூலம் பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2023 யூலை 31 இல் உள்ளவாறு 124,744 ஹெக்டேயர் நெல் பயிரிட்ட 151,526 விவசாயிகளுக்காக மானியமாக ரூபா 1,247,343,350 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், இந்த விவசாயிகளின் வங்கி கணக்குகள் செயலிழந்தமை மற்றும் கணக்கு இலக்கம் சரியாக இல்லாதமையின் காரணமாக 2,476 விவசாயிகளுக்காக ரூபா 17,876,000 நிதி உதவி செலுத்துதல் நிராகரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. விவசாயிகள் வழங்கிய தகவல்களின் குறைபாடுகளுடன் சமர்ப்பிக்கப்பட்டதன் அடிப்படையில் ஏனைய விவசாயிகளுக்காக செலுத்துவதற்கு முடியாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

**(அ) நெச்சியாகம கமநல சேவை நிலையம் ஷ**

நெச்சியாகம கமநல சேவை நிலையத்தின் கீழ் கமநல ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர்கள் பிரிவுகள் 25 இல் 2022/23 பெரும் போகத்தில் நெற் பயிரிட்ட விவசாயிகளுக்கு மானியம் வழங்குவதற்கு தேவையான தரவுகளை பெறுமாறு 2022 திசெம்பர் 19 ஆம் திகதி வார கலந்துரையாடலின் போது விவசாய ஆராய்ச்சி உதவி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. 2022/23 பெரும் போகத்தில் பயிர் செய்கை நடவடிக்கைகளை ஆரம்பித்தல் 2022 ஒக்டோபர் மாதம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அறுவடை செய்யும் நடவடிக்கைகள் 2023 மார்ச் 15 ஆம் திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்ட தகவல் முறைமையை உள்ளடக்குதல் 2022 திசெம்பர் 22 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக இரண்டு வாரங்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டம் மூலம் நிலத்தை தயாரித்தல் மற்றும் கன்றுகளை நட்டுதல் நாற்றுக்களை நட்டுதல் பணிகளுக்கு உரிய கால எல்லையில் நலன்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அந்த கால எல்லையில் எந்தவொரு விவசாயிகளுக்காகவும் நலன்களை வழங்குவதற்கு முடியாதிருந்தது.

(i) விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூலம் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 5,800 விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்குவதற்காக கமநல சேவை நிலையங்களுக்கு தகவல்களை வழங்கியிருந்த போதிலும், கமநல சேவை நிலையங்களுக்குரிய விவசாயிகளுக்கு மானியம் செலுத்துதல் தொடர்பாக 2023 மே 16 ஆம் திகதி செயற்திட்ட அலுவலம் மூலம் பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் மற்றும் அந்த நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் பிரகாரம் 5,134 விவசாயிகளுக்காக ரூபா 47,255,000 மானிய பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் 666 விவசாயிகளுக்காக மானிய பணம் கிடைத்திருக்கவில்லை.

(ii) 2023 ஆகஸ்ட் 16 ஆம் திகதி கமநல சேவை பிரதேச உத்தியோகத்தர்கள் மூலம் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 30 விவசாயிகளுக்காக பணம் வழங்கப்படாதிருந்ததுடன், அதன் பெறுமதி ரூபா 249,000 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ) பலுகஸ்வெவ கமநல சேவை நிலையம்**

அநுராதபுர மாவட்டத்தில் கடநல சேவை அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் மானியம் விண்ணப்பித்த 3011 விவசாயிகளில் 2,962 விவசாயிகளுக்காக ரூபா 18,365,000 தொகை 2023 மே 31 ஆம் திகதி வரையில் செலுத்தப்பட்டிருந்ததுடன், மேலும், 49 விவசாயிகளுக்காக ரூபா 290,000 தொகை செலுத்த வேண்டியிருந்தது.

(ஆ) கலம்பிந்தலுவெவ, கெப்பிட்டிகொல்லாவ மற்றும் நேகம்பக என்ற கமநல சேவை நிலையங்களில் மானியம் செலுத்துதல் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக உரிய நிலையங்களின் கமநல சேவை உத்தியோகத்தர்களுக்கு

2023 யூன் 02 ஆம் திகதி கடிதம் மூலம் வினாக் கொத்துக்கள் அனுப்பப்பட்ட போதிலும், 2023 திசெம்பர் 20 ஆம் திகதி வரை அது தொடர்பான தகவல்கள் கிடைத்திருக்கவில்லை. எனினும், அநுராதபுர மாவட்டத்தில் கமநல உதவி ஆணையாளர் வழங்கிய தகவல்களின் பிரகாரம் இந்த 03 கமநல அபிவிருத்தி சேவை நிலையங்களில் 16,674 விவசாயிகளுக்காக ரூபா 142,279,000 தொகை செலுத்தப்பட்டிருந்தமையும், 306 விவசாயிகளுக்காக ரூபா 2,687,000 செலுத்த வேண்டி காணப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

**3.6.4.2 குருநாகல் மாவட்டத்தில் நெல் விவசாயிகளுக்காக மானியம் செலுத்துதல்**

செயற்திட்டம் அமுல்படுத்தப்படுகின்ற ஒட்டு மொத்த காலஎல்லை இந்த மாவட்டத்தில் 77,797 ஹெக்டேயர் நெற்பயிரிட்ட 175,861 விவசாயிகளுக்கு மானியத்தை பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பித்திருந்த போதிலும், தரவு முறைமை மூலம் பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2023 யூலை 31 இல் உள்ளவாறு 174,829 விவசாயிகளுக்காக மானியமாக ரூபா 773,381,185 தொகை செலுத்தப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்ட போதும், வங்கி கணக்கு இலக்கம் சரியாக இன்மை மற்றும் கணக்கு செயழிலந்ததன் அடிப்படையில் 5,754 விவசாயிகளுக்கு ரூபா 23,243,000 மானிய பணம் செலுத்துதல் நிராகரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. விவசாயிகள் வழங்கிய தகவல்களில் குறைபாடுகளுடன் சமர்ப்பித்ததன் அடிப்படையில் ஏனைய விவசாயிகளுக்காகவும் செலுத்துதவதற்கு முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

நிலத்தை தயாரிப்பதற்கு முன் மற்றும் பயிர்செய்கைகள் மேற்கொள்ளப்பட்ட பின் செயற்திட்டத்தின் மூலம் நலன்களை செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் நெற்பயிர் செய்த 168,086 விவசாயிகளுக்கு நிதி உதவி கோரப்பட்டிருந்த போதிலும், இந்த திகதி வரையிலும், எந்தவொரு விவசாயிகளுக்காகவும் பணம் செலுத்துவதற்கு முடியாதிருந்தது. பெரும் போகம் ஆரம்பமாகி நடு அரைப் பகுதி வரையிலும் விவசாயிகளுக்குரிய நிதி உதவியை வழங்குவதற்கு முடியாதிருந்தமையின் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களுக்காக விவசாயிகளுக்கு பணத்தை ஈடுபடுத்துவதற்கு முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

குருநாகல் மாவட்டத்தில் தெரிவு அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட கமநல சேவை நிலையங்களில் மானியம் செலுத்துதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுகின்றன.

**(அ) இப்பாகமுவ கமநல சேவை நிலையம்**

(i) இந்த கமநல சேவை நிலையத்தில் மானியம் செலுத்துதல் தொடர்பாக 2022 திசெம்பர் வரை விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. 37 விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரிவுகளில் 6,591 விவசாயிகளிடம் இருந்து தரவுகள் நிதி உதவியினை வழங்குவதற்கான தரவு முறைமையில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அது ஒட்டு மொத்த விவசாயிகளின் 52.44 ஹெக்டேயர் பயிர் செய்த 175 விவசாயிகளின் வங்கி கணக்குகள் செயலிழந்தமை, தரவுகளை உள்ளடக்கும் போது பல்வேறு குறைபாடுகள் ஏற்பட்டதன் காரணமாக 2023 யூன் 28 ஆம் திகதி வரையிலுமி ரூபா 524,400 மானிய பணத்தை செலுத்த முடியாதிருந்ததாக செயற்திட்ட அலுவலகத்தில் இருந்து கடநல சேவை நிலையங்களுக்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

(ii) மானியத்தை செலுத்துவதற்காக விண்ணப்பித்த விவசாயிகளில் எந்த அளவு விவசாயிகளின் எண்ணிக்கையில் மானியம் வழங்கப்படுகின்றது என பிரதேச கமநல உத்தியோகத்தர்களிடம் தகவல்கள் காணப்படாதிருந்ததுடன், மானியப் பணம் பெறுவனவுகள் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்வதற்கான முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், நிதி உதவிகள் பெறாதிருந்த சில விவசாயிகள் பிரதேச கமநல

உத்தியோகத்தர் மற்றும் கமநல ஆராய்ச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.



கமநல ஆராய்ச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாயிகள் மற்றும் கணக்காய்வு உத்தியோகத்தர்களின் கலந்துரையாடல் 2023 யூன் 28 ஆம் திகதி இப்பாகமுவ கமநல சேவை நிலையத்தின் போது

**(ஆ) கல்கமுவ கமநல சேவை நிலையம்**

(i) இந்த கமநல சேவை நிலையத்திற்குரிய பிரதேசங்களில் நிலத்தை தயாரித்தல் மற்றும் பயிரிடல் ஆரம்பித்தல் 2022 ஒக்டோபர் மாதம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. விவசாயிகள் பயிரிட்ட நில அளவு தொடர்பான தகவல்களை வழங்குதல் 2022 ஒக்டோபர் 31 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், தரவு முறைமையில் தரவுகளை உள்ளடக்குதல் 2023 மார்ச் 01 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்டிருந்தது. மானியங்களை பெற்றுக் கொள்வதற்காக 5,339 விவாசயிகளிடம் இருந்த தகவல்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2023 மார்ச் 31 வரை நிதி உதவிகள் செலுத்தி பூர்த்தி செய்யப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை 5,007 ஆக இருந்தமையின் காரணமாக மேலும், 332 விவசாயிகளுக்காக ரூபா 1,932,500 மானியம் செலுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) செயற்திட்ட அலுவலகத்தால் பணம் கிடைக்காத விவசாயிகளில் 184 விவசாயிகளுக்கு செலுத்த வேண்டிய ரூபா 1,173,000 தொகை நிராகரிக்கப்பட்டு அது விவசாயிகளின் தகவல்களின் தேவைகளை திருத்தங்களை மேற்கொள்ளுமாறு கமநல சேவை நிலையங்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், 166 விவசாயிகளின் வங்கி கணக்குகளை நாளது வரையாக்கல் உட்பட திருத்தங்களை மேற்கொண்டு கொடுப்பனவு நடவடிக்கைகளுக்காக சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், 2023 மே 16 கணக்காய்வு திகதி வரையிலும் கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 18 விவசாயிகளுக்கு நாளது வரையாக்கப்பட்ட தகவல்களை சமர்ப்பிக்காமையின் அடிப்படையில் மீண்டும் செலுத்துவதற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) தும்மலசூரிய கமநல சேவை நிலையத்திற்குரிய பிரிவுகளில் விவசாயிகளுக்காக நலன்களை செலுத்துதல்**

தும்மலசூரிய கமநல சேவை நிலையத்திற்குரிய கமநல ஆராய்ச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரிவுகள் 20 இல் நெற்பயிரிட்ட 944 விவசாயிகளுக்குரிய தரவுகள் செயற்திட்ட அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த விவசாயிகளில் 17 கமநல ஆராய்ச்சி அபிவிருத்தி பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் 510.5 ஹெக்டேயர் பயிரிட்ட 650 விவசாயிகளில் 13 விவசாயிகளுக்காக ரூபா 56,500 மானியப் பணம் 2023 மே 31 ஆம் திகதி வரையிலும் செலுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) ரம்பேவ கமநல சேவை நிலையத்தில் மானியம் செலுத்துதல் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக பிரதேச கமநல சேவை உத்தியோகத்தர்களுக்கு 2023 யூன் 02 ஆம் திகதி கடிதம் மூலம் வினாக் கொத்துக்கள் அனுப்பப்பட்ட போதிலும், 2023 திசெம்பர் 20 ஆம் திகதி வரை அது தொடர்பான கிடைத்திருக்கவில்லை. குருநாகல் பிரதி கமநல அபிவிருத்தி ஆணையாளரால் 2023 மே 31 இல் உள்ளவாறு மானியங்கள் செலுத்துதலின் செயல் முன்னேற்றம் தொடர்பான வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 11,090 விவசாயிகளுக்கு ரூபா 62,166,350 தொகை மானியமாக செலுத்தப்பட்டிருந்ததுடன், 03 விவசாயிகளுக்காக மானியம் செலுத்த வேண்டியிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது.

### 3.6.4.3 மெனராகலை மாவட்டத்தில் நெல் பயிரிடும் விவசாயிகளுக்காக மானியம் செலுத்துதல்

செயற்திட்ட அலுவலகத்தின் மூலம் பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் மொனராகலை மாவட்டத்தில் நெற்பயிரிட்ட 61,998 விவசாயிகளுக்கு நிதி உதவிக்காக விண்ணப்பித்திருந்தனர். 2023 யூலை 31 இல் உள்ளவாறு 27,447 ஹெக்டேயர் நெற் பயிரிட்ட 35,365 விவசாயிகளுக்காக மானியமாக ரூபா 274,477,830 தொகை செலுத்தப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், வங்கி கணக்கு இலக்கம் சரியாக இல்லாமல் மற்றும் கணக்குகள் செயழிலந்ததன் அடிப்படையில் 2023 யூலை 31 ஆம் திகதி வரையும் 1,056 விவசாயிகளுக்கு ரூபா 7,676,900 மானிய பணம் செலுத்துதல் நிராகரிக்கப்பட்டிருந்தது. மானியம் செலுத்துவதற்காக விவசாயிகள் வழங்கிய தகவல்களில் குறைபாடுகளுடன் சமர்ப்பிக்கப்பட்டதன் அடிப்படையில் ஏனைய விவசாயிகளுக்காகவும் செலுத்துவதற்கு முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) தனமல்வில கமநல சேவை நிலையம்**

இந்த கமநல சேவை நிலையத்திற்குரிய விவசாயிகளில் நெற்பயிர் செய்கை நடவடிக்கைகள் 2022 ஒக்டோபர் 10 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், அறுவடை நடவடிக்கைகள் 2023 சனவரி 30 ஆம் திகதி வரையும் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. நிதி உதவி வழங்குவதற்காக கமநல சேவை நிலையங்களுக்குரிய கமநல விவசாய ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர் பிரிவுகள் 08 இல் 1,012.47 ஹெக்டேயரில் பயிரிட்ட 1,834 விவசாயிகளின் தரவுகள் தரவு தகவல் முறைமையில் உள்ளடக்கப்பட்டிருந்தது. பௌதீக பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட 2023 மே 23 ஆம் திகதி வரையில் மானியத்தை விண்ணபித்த விவசாயிகளில் 707.5 ஹெக்டேயர் பயிர் செய்த 824 விவசாயிகளுக்காக ரூபா 7,075,000 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், பணம் செலுத்தாத 1010 விவசாயிகள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், பணம் கிடைக்காதிருந்தமைக்கு முறைப்பாடு செய்த 10 விவசாயிகளின் முறைப்பாடுகள் மாத்திரம் பதிவேடில் குறிப்பிடப்பட்டிருந்தது.

**(ஆ) கதிர்காமம் கமநல சேவை நிலையம்**

இந்த நிலையத்திற்குரியதாக பயிர் செய்த விவசாய பயிர் செய்கை நடவடிக்கைகள் 2022 நவம்பர் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், அறுவடை நடவடிக்கைகள் 2023 ஏப்ரல் 01 ஆம் திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. கமநல அபிவிருத்தி பிரதேச உத்தியோகத்தர்கள் வழங்கிய தகவல்களின் பிரகாரம் நிதி உதவி பெற்றுக் கொள்வதற்காக 1,409 விவசாயிகளின் தரவுகள் தகவல் முறைமையில் உள்ளடக்கப்பட்டிருந்தது. பௌதீக பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட 2023 மே 23 ஆம் திகதி வரையிலும் நிதி உதவி மானியத்தை விண்ணபித்த விவசாயிகளின் 676 ஹெக்டேயர் பயிர் செய்த 734 விவசாயிகளுக்காக ரூபா 6,760,000 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், பணம் செலுத்தப்படாத விவசாயிகள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்தமை

அவதானிக்கப்பட்டது. மேலும், செயற்திட்ட அலுவலகத்தின் மூலம் பணம் செலுத்துதல் நிராகரிக்கப்பட்ட 46 விவசாயிகளின் வங்கி கணக்கு விபரங்களை நாளது வரையாக்கி கமநல சேவை நிலையத்தில் 2023 மே 12 ஆம் திகதி செயற்திட்ட அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட போதிலும், அவர்களுக்கு கொடுப்பனவு செய்தல் தொடர்பாக கமநல சேவை நிலையத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) எத்திமலே, சியம்பலாண்டுவ மற்றும் ஹிங்குருகடுவ என்ற கமநல சேவை நிலையங்களில் மானியம் செலுத்துதல் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக பிரதேச கமநல சேவை உத்தியோகத்தர்களுக்கு 2023 யூன் 02 ஆம் திகதி கடிதம் மூலம் வினாக்கொத்துக்கள் அனுப்பப்பட்ட போதிலும், 2023 திசெம்பர் 20 ஆம் திகதி வரை அது தொடர்பான தகவல்கள் கிடைத்திருக்கவில்லை. எனினும், இந்த 03 கமநல சேவை நிலையங்களில் மானியம் செலுத்துதல் தொடர்பாக மொனராகலை கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரால் 2023 நவம்பர் 14 ஆம் திகதி கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் இரண்டு கட்டங்களின் கீழ் 03 கமநல சேவை நிலையங்களில் மானியம் செலுத்திய விவசாயிகளின் எண்ணிக்கை முறையே 6,843, 5,453 மற்றும் 297 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், மானியத்தை விண்ணப்பித்த விவசாயிகளின் எண்ணிக்கை மற்றும் கொடுப்பனவுகள் நிராகரிக்கப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் கிடைத்திருக்கவில்லை. அவர்களுக்காக செலுத்தப்பட்ட மொத்த மானியங்களின் பெறுமதி ரூபா 110,897,800 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.6.4.4 அம்பாந்தோட்டை மாவட்டத்தில் நெல் விவசாயிகளுக்காக மானியம் செலுத்துதல்

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 37,669 ஹெக்டேயர் பயிர் செய்த 50,666 விவாசயிகளுக்கு மானியம் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பித்திருந்தனர். தரவு முறைமை மூலம் பெறப்பட்ட தகவல்களின் படி 2023 யூலை 31 இல் உள்ளவாறு 36,713 ஹெக்டேயரில் நெற் பயிர் செய்த 49,439 விவசாயிகளுக்காக மானியமாக ரூபா 367,132,664 தொகை செலுத்தப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், வங்கி கணக்கு இலக்கம் சரியாக இன்மை மற்றும் கணக்குகள் செயழிலந்ததன் அடிப்படையில் 2023 யூலை 31 ஆம் திகதி வரையில் 825 விவசாயிகளுக்கு ரூபா 5,417,425 தொகை செலுத்துதல் நிராகரிக்கப்பட்டிருந்தது. விவாசயிகள் வழங்கிய தகவல்களில் குறைபாடுகளுடன் சமர்ப்பிக்கப்பட்டதன் அடிப்படையில் ஏனைய விவசாயிகளுக்காகவும் செலுத்துவதற்கு முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

தெரிவு ரீதியில் தெரிவு செய்யப்பட்ட கமநல சேவை நிலையங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

**(அ) அம்பலாந்தேட்டை கமநல சேவை நிலையம்**

இந்த கமநல சேவை நிலையத்திற்குரிய பிரதேசங்களில் நெற்பயிர் நடவடிக்கைகளுக்காக நிலத்தை தயாரிக்கும் நடவடிக்கை செயற்பாடுகள் 2022 ஒக்டோபர் 10 ஆம் திகதி முதல் நவம்பர் 25 வரையாக காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அறுவடை செயற்பாடுகள் 2023 மே மாதம் வரை மேற்கொள்ளப்பட்டிருந்தது. பயிரிடல் நடவடிக்கைகள் தாமதம் அடைந்ததன் காரணமாக தரவு முறைமையில் தரவுகளை உள்ளடக்குதல் நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் இரண்டு கட்டங்களின் கீழ் மேற்கொண்டு விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரிவுகள் 25 இல் 2,935 விவசாயிகளின் தரவுகள் முறைமையில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட கால எல்லையில் விவசாயிகளுக்கு மானியத்தை வழங்குவதற்கு முடியாதிருந்தது.

(i) அம்பலாந்தேட்டை கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் மூலம் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2023 மார்ச் 31 ஆம் திகதி வரையில்

2,190 விவசாயிகளுக்கு மாத்திரம் நிதி உதவி செலுத்தப்பட்டிருந்த போதிலும், 745 விவசாயகளுக்கு நிதி வழங்கப்பட்டிருக்கவில்லை. இந்த விவசாயிகளில் 46.2 ஹெக்மேயர் பயிரிட்ட 68 விவசாயிகளுக்காக செலுத்த வேண்டிய ரூபா 462,000 தொகை வங்கி கணக்குகள் செயழிலந்ததன் காரணமாக வங்கியால் கொடுப்பனவுகள் நிராகரிக்கப்பட்டிந்தமை செயற்திட்ட அலுவலகத்தின் மூலம் அறிவிக்கப்பட்டதன் பின்னர் வங்கி கணக்குகளை நாளது வரையாக்கி மீண்டும் தகவல்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2023 மே 02 கணக்காய்வு திகதி வரையிலும் நிதி உதவி செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) இந்த கமநல சேவை நிலையத்திற்குரிய விவசாயிகளின் மானிய பணம் கிடைக்காத விவசாயிகளை பிரதி நிதித்துவப்படுத்தும் வகையில் விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி பிரிவுகள் 23 தொடர்பாக விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் இருந்த பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2,212.3 ஹெக்டேயர் பயிர் செய்த 2,525 விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்குவதற்கான தகவல்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. இந்த விவசாயிகளுக்கு நிதி உதவி செலுத்துதல் தொடர்பான தகவல்கள் விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் காணப்படாதிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. 03 உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் நிதி உதவி கிடைக்காதிருந்தமை தொடர்பான தகவல்கள் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன், அந்த தகவல்களின் பிரகாரம் 5.1 ஹெக்டேயர் பயிரிட்ட 07 விவசாயிகளுக்காக நிதி உதவியாக ரூபா 51,000 தொகை வழங்கப்படாதிருந்தமை குறிப்பிடப்பட்டிருந்தது.

**(ஆ) பெரலிஹெல கமநல சேவை நிலையம்**

இந்த கமநல சேவை நிலையத்திற்குரிய பிரதேசங்களில் நெற்பயிர் செய்கை நடவடிக்கைகளுக்காக நிலத்தை தயாரித்தல் 2022 ஒக்டோபர் 10 முதல் நவம்பர் 25 வரையான காலத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அறுவடை நடவடிக்கைகள் 2023 மே மாதம் வரை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த போகத்திற்குரிய விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்குவதற்காக கமநல சேவை நிலையங்களுக்குரிய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரிவுகள் 07 இல் 688 விவசாயிகளின் தரவுகள் தகவல் முறைமையில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், இந்த விவசாயிகளில் 666 பேர்களுக்காக 2023 மே 31 ஆம் திகதி வரையிலும் நிதி உதவி கிடைத்திருந்த போதிலும், 12 விவசாயிகளுக்காக மேலும் நிதி உதவி வழங்க வேண்டியிருந்தது.

(இ) லூனம மற்றும் அங்குன கொல பெலச என்ற கமநல சேவை நிலையங்களில் மானியம் செலுத்துதல் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக பிரதேச கமநல சேவை உத்தியோகத்தர்களுக்கு 2023 யூன் 02 கடிதம் மூலம் வினாக் கொத்துக்கள் அனுப்பப்பட்டிரந்த போதிலும், 2023 திசெம்பர் 20 ஆம் திகதி வரை அது தொடர்பான தகவல் கிடைத்திருக்கவில்லை. அம்பாந்தோட்டை மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரின் மூலம் 2023 மே 31 வரை மானியம் செலுத்துதலின் செயல் முன்னேற்றம் கமநல சேவை மட்டத்தில் சமர்ப்பிக்குமாறு மேற்கொள்ளப்பட்ட எழுத்து மூல அறிவித்தலுக்கு உரியதாக தனித்தனியான தகவல்களை சமர்ப்பிப்பதற்கு போதியளவான தகவல்கள் காணப்படாதிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது.

**3.6.4.5 மட்டக்களப்பு மாவட்டத்தில் நெற்பயிர் செய்யும் விவசாயிகளுக்காக நிதி உதவி செலுத்துதல்**

இந்த மாவட்டத்தில் 59,109 ஹெக்டேயர் பயிர் செய்து 49,376 விவசாயிகளுக்கு மானியம் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிருந்தனர். தரவு முறைமை மூலம் பெறப்பட்ட தகவல்களின் படி 2023 யூலை 31 இல் உள்ளவாறு 53,130 ஹெக்டேயரில் நெற் பயிர் செய்த 41,668 விவசாயிகளுக்காக மானியமாக ரூபா 531,296,790 தொகை செலுத்தப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்ட போதிலும், வங்கி கணக்கு இலக்கம் சரியாக

இன்மை மற்றும் கணக்குகள் செயழிலந்ததன் அடிப்படையில் 2023 யூலை 31 ஆம் திகதி வரையில் 1,007 விவசாயிகளுக்கு ரூபா 12,519,000 மானிய பணம் செலுத்துதல் நிராகரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவத்தில் ஒட்டுமொத்த நெல் பயிரிடும் விவசாயிகளுக்காக நிதி உதவி செலுத்துதல் தொடர்பாக செயற்திட்ட அலுவலகத்தில் இருந்த பெறப்பட்ட தகவல்கள் மற்றும் 2023 செப்டம்பர் 13 ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தில் கமநல அபிவிருத்தி பிரத ஆணையாளர் மூலம் வழங்கப்பட்ட தகவல்களுக்கு இடையே 463 விவசாயிகளுக்காக ரூபா 5,763,250 தொகை செலுத்துதல் தொடர்பாக வேறுபாடுகள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| தகவல்களின் மூலம் | மானியம் செலுத்தப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை | பயிர் செய்யப்பட்ட நில அளவு (ஹெக்டேயர்) | செலுத்தப்பட்ட மானியத்தின் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|
| செயற்திட்ட அலுவலகம் | 41,668 | 53,129 | 531,296,790 |
| மாவட்ட கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளர் | 41205 | 52714 | 525,533,540 |
| **வேறுபாடு** | **463** | **415** | **5,763,250** |

மானிய பணம் கிடைக்காமை தொடர்பாக 16 முறைப்பாடுகள் மாவட்ட அலுவலகத்திற்கு கிடைத்திருந்ததுடன், கணக்காய்வின் போது பௌதீக பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட மண்டதடி மற்றும் கல்லடி கமநல சேவை நிலையங்களுக்கு உரியதாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) மண்டபத்தடி கமநல சேவை நிலையம்**

மண்டபத்தடி கமநல சேவை நிலையத்தில் 5,080 நெற் பயிரிடும் விவசாயிகளுக்காக நிதி உதவி பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிருந்ததனர். இந்த விவசாயிகளில் 5,034 விவசாயிகளுக்காக ரூபா 70,699,000 தொகை செலுத்தப்பட்டிருந்தமை 2023 யூன் 27 ஆம் திகதி கமநல நிலையத்தில் இருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் மானியத்திற்காக விண்ணபித்த 67.4 ஹெக்டேயர் பயிர் செய்த 46 விவசாயிகளுக்காக செலுத்த வேண்டிய ரூபா 674,000 மானிய பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

இந்த விவசாயிகளுக்காக பணம் செலுத்துதலை நிராகரிப்பதற்காக பின்வரும் காரணங்கள் தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

- வங்கி கணக்குகள் செயலிழந்து காணப்பட்டமை.
- வங்கி கணக்கு இலக்கம் பிழையாக உள்ளடக்கிய தரவு முறைமையில் உள்ளடக்குதல்.

**(ஆ) கல்லடி கமநல சேவை நிலையம்**

கல்லடி கமநல சேவை நிலையத்திற்குரிய 08 விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரிவுகளில் நெற் பயிர் செய்த விவசாயிகளுக்கு நிதி உதவி செலுத்துதல் தொடர்பாக 2022 திசெம்பர் 24 இல் அறிவிக்கப்பட்டு தேவையான தரவுகளை பெற்றுக் கொள்ளல், 2023 திசெம்பர் 27 ஆம் திகதி வரையில் பூர்த்தி

செய்யப்பட்டிருந்தது. 310 விவசாயிகளுக்கு மானியத்திற்காக விண்ணப்பித்து 280 விவசாயிகளுக்காக மானியம் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2023 மே 31 ஆம் திகதி வரையில் நிதி உதவி கிடைக்காத விவசாயிகளின் எண்ணிக்கை 30 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது.




விவசாயிகளுடன் கணக்காய்வு உத்தியோகத்தரின் கலந்துடையாடல்

2023 யூன் 27 இல் கல்லடி கமநல சேவை நிலையம்

(இ) வாகரை மற்றும் ஏராவூர் என்ற கமநல சேவை நிலையங்களில் மானியம் செலுத்துதல் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக பிரதேச கமநல சேவை உத்தியோகத்தர்களுக்கு 2023 யூன் 02 ஆம் திகதி கடிதம் மூலம் வினாக் கொத்துக்கள் அனுப்பப்பட்ட போதிலும், 2023 திசெம்பர் 20 ஆம் திகதி வரை அது தொடர்பான தகவல்கள் கிடைத்திருக்கவில்லை. எனினும், மட்டக்களப்பு பிரதி கமநல சேவை ஆணையாளரால் 2023 செப்டம்பர் 12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் வாகரை மற்றும் ஏராவூர் என்ற கமநல சேவை நிலையங்களில் 6,413 விவசாயிகளுக்கு ரூபா 74,113,700 தொகை இரண்டு கட்டங்களில் செலுத்தப்பட்டிருந்ததுடன், மானியத்திற்காக விண்ணப்பித்த விவசாயிகளின் எண்ணிக்கை மற்றும் நிராகரிக்கப்பட்ட விவசாயிகள் தொடர்பான தகவல் கிடைத்திருக்கவில்லை.

### 3.6.4.6 2022/2023 பெரும்போகத்தில் நெற்பயிர் செய்கைக்காக நிதி உதவி செலுத்துவதற்காக மாவட்ட கமநல சேவை ஆணையாளர் அலுவலகங்களின் பங்களிப்பு

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாவட்ட கமநல ஆணையாளருக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் பிரதேச உத்தியோகத்தர்களுக்கு அனுப்புதல், செயற்திட்டம் தொடர்பாக கமநல பிரதேச அபிவிருத்தி பிரதேச உத்தியோகத்தருடன் செயல் முன்னேற்றத்தை மீளாய்வு செய்யும் கூட்டம் என்பன நடாத்தப்பட்டது, எனினும், மானியம் செலுத்துவதற்காக தரவுகளை உள்ளடக்குதல், மாற்றுதல் உட்பட்ட நடவடிக்கைகளுக்காக மாவட்ட கமநல ஆணையாளருக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. அநுராதபுரம், குருநாகல் மற்றும் மட்டக்களப்பு என்ற மாவட்டங்களில் கமநல சேவை நிலையங்களில் முறையே 35, 30 மற்றும் 16 முறைப்பாடுகள் கிடைத்திருந்ததுடன், ஏனைய மாவட்ட அலுவலகங்களின் முறைப்பாடுகள் சிறிய அளவில் கிடைத்திருந்தமையும், எழுத்து மூல முறைப்பாடுகள் மிகவும் குறைவாக கிடைத்தமையால் அது தொடர்பாக அறிக்கையிடப்படவில்லை.

(ஆ) இந்த செயற்திட்டத்தின் கீழ் நிதி உதவி குறித்துறைத்த கால எல்லையில் விவசாயிகளுக்கு வழங்குவதற்காக இடையூராக விவசாயிகளினால் வழங்கப்பட்ட தகவல்கள் சரியாக அவற்றை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியாதிருந்தமை. வழங்கப்பட்ட குறுகிய காலத்தில் கமநல சேவை நிலையங்களுக்குரிய சகல விவசாயிகளினதும் தகவல்களை உள்ளடக்குதல், உள்ளடக்கப்பட்ட தரவுகளில் சரியான தன்மையை பரீட்சித்தல் மற்றும் பிழையாக உள்ளடக்கப்பட்ட தரவுகளை

சரி செய்தல் போன்ற பணிகளுக்காக போதியளவான காலம் கிடைக்காமை, பயிற்சி குழுவொன்று காணப்படாமையினால் தொடர்பாடல் நலிவுகள் காணப்பட்டமை, விவசாயிகளால் வங்கி கணக்குகளின் தகவல்கள் சரியாக வழங்கப்படாமை போன்ற பிரச்சினைகள் காணப்பட்டதாக மாவட்ட ஆணையாளரால் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மற்றும் கணக்காய்வின் போதும் பௌதீக பரிசோதனையின் போதும் அவதானிக்கப்பட்டது.

(இ) இந்த செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது தொடர்புடைய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்காக விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கை அளவுகள் மிகவும் குறைவாக இருந்ததுடன், இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரனைகளின் போது அம்பாந்தோட்டை மாவட்ட கமநல சேவை அலுவலகத்தில் இலக்கம் இன்றிய ஒரு கடிதம் விநியோகிக்கப்பட்டிருந்தமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அதில் அங்கீகரித்தல் ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக கமநல சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு இலத்திரனியல் தபால் மூலம் WhatsApp ஆலோசனை வழங்குதல் மேற்கொள்ளப்பட்டமைக்கான விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மானியம் பணம் கோரியிருந்த போதும், அவை கிடைக்காத விவசாயிகளில் இருந்து கிடைக்கின்ற முறைப்பாடுகளை அறிக்கையிடுவதற்கான பதிவேடொன்று பேணிச் செல்லப்படாதிருந்ததுடன், கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொலைபேசி மூலம் தலைமை அலுவலத்திற்கு அறிவிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்ட போதும், அதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக மாவட்ட ஆணையாளருக்கு அறிவித்திருக்கவில்லை.

### 3.6.5 நலன் முகாமைத்துவ தரவு முறைமையொன்றை ஸ்தாபிப்பதன் தேவை

**3.6.5.1** 2002 இன் 24 ஆம் இலக்க நலன்புரி சட்டத்தின் 27 ஆம் பிரிவு இதன் கீழ் சனாதிபதியால வழங்கப்பட்ட 2022 ஒக்டோபர் 20 ஆம் திகதிய 2302/23 என்ற அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்ட 2022 இன் 01 ஆம் இலக்க நலன்புரி நலன் கொடுப்பனவு கட்டளையின் படி நலன்புரி நலனாளிகள் தொடர்பாக தகவல் முறைமையொன்று இலத்திரனியல் மற்றும் தொடர்பின்றி ஸ்தாபிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் நலன்புரி நலனாளிகள் தொடர்பான தகவல் அளகொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டியிருந்ததுடன், அந்த நலன்புரி நலனாளிகள் தகவல்கள் பிரிவினால் 2006 இன் 19 ஆம் இலக்க இலத்திரனியல் சட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற கட்டளையின் பிரகாரம் இலத்திரனியல் பதிவேடு மற்றும் இலத்திரனியல் அறிக்கை முறையில் நலனாளிகளின் நலன் தொடர்பான தரவுகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

காணப்படுகின்ற தரவு முறை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 இன் 19 ஆம் இலக்க இலத்திரனியல் சட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற கட்டளையின் பிரகாரம் இலத்திரனியல் பதிவேடு மற்றும் இலத்திரனியில் அறிக்கை முறைமையில் நலன்புரி நலனாளிகள் தொடர்பான தகவல்கள் பேணிச் செல்லப்பட வேண்டியிருந்த போதிலும், நீண்ட காலத்தில் இருந்து கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் பசளை, எரிபொருள், நிதி உள்ளடக்கிய பல்வேறு மானியங்களை உள்ளடக்கிய பல்வேறு போக மானியங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், நிகழ்ச்சித் திட்டத்தின் செயற்திறனாக அமுல்படுத்துவதற்காக கணனி மயப்படுத்தப்பட்ட தரவு முறைமையொன்று காணப்படவில்லை. 2022 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட மற்றும் அபிவிருத்தி கிரயம் ரூபா 16,000 செலவில் Geo Goviya கணனி தரவு முறைமை ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக 2023 மார்ச் 31 வரை செலவிடப்பட்ட ஒட்டுமொத்த கிரயம் ரூபா 166,000 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இதன் மூலம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட மானிய நிகழ்ச்சித் திட்டத்திற்கான தரவுகளை சேகரித்தல் வசதியாக இருந்த போதிலும். கணனி தரவு முறைமை மானியம் செலுத்தும் நடவடிக்கைகளுக்காக செயற்திறனாக

ஈடுபடுத்துவதன் தேவைக்கு ஈடுகொடுக்கும் வகையில் Web Server காணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) நாடு முழுவதும் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 556 கமநல சேவை நிலையங்களின் பிரதேச உத்தியோகத்தர்கள் அந்த அலுவலரகங்களுக்குரிய விடயம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற உத்தியோகத்தர்கள், மாவட்ட பொறுப்பு உதவி ஆணையாளர்கள் மற்றும் செயற்திட்டத்திற்குரிய பிரச்சினைகள் அனுப்பப்படுகின்ற ஏனைய உத்தியோகத்தர்களுக்கு செயற்திட்ட அலுவலகங்களுடன் தகவல்களை பரிமாரிக் கொள்வதற்கு நிலையான தொலைபேசி இலக்கம் 03 அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும், அழைப்பு விடுக்கப்பட்ட நபர்களினால் வழங்கப்படுகின்ற அழைப்புக்களை பெற்று உரிய உத்தியோகத்தர்களுக்கு அனுப்புவதற்கு அல்லது தொலைபேசி இயக்குனர்களுக்கு அல்லது செயற்திட்ட அலுவலகத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள சேவையில் ஊழியர் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக கமநல சேவை நிலையங்களில் இருந்து நெல் பயிரிட்ட விவசாயிகள் தொடர்பான தரவுகள் உள்ளடக்கப்படுகின்ற உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள கால எல்லை தேவையான ஆலோசனைகளை பெற்று தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கு தேவையான ஆலோசனைகள் குறித்துரைத்த காலப்பகுதியில் வழங்குவதற்கு முடியாதிருந்தமையால் கால ரீதியில் Google Sheet இல் தகவல்களை உள்ளடக்குதல் மற்றும் திருத்தங்களை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

(இ) ஒரு உத்தியோகத்தர்களுக்காக கையளிக்கப்பட்ட கமநல சேவை நிலையங்களின் எண்ணிக்கை கணிசமான எண்ணிக்கையில் இருந்தமையால் தரவுகளில் காணப்படுகின்ற குறைபாடுகளை சரி செய்வதற்கு குறுகிய காலம் வழங்கப்பட்டமையும், உரிய சரி செய்தல்களுக்காக போதியளவான காலம் வழங்கப்படாமையால் விவசாயிகளின் தரவுகளை சரி செய்யும் சந்தர்ப்பங்கள் பல தடவைகளின் போது மேற்கொள்ளப்பட்டமையால் விவசாயிகளுக்கு மானியங்களை வழங்குதவதற்கு பெற்றுக் கொள்ளல் தாமதமடைந்ததற்கு தாக்கமளித்திருந்தது.

(ஈ) நெற் பயிர் செய்கையாளர்களில் ஒரு மில்லியனுக்கு மேற்பட்டிருந்த நிலைமையில் மிகவும் செயற்திறனான சேவையினை கால ரீதியில் வழங்குவதற்கா தரவு முறைமையை அமுல்படுத்துவதற்கு தேவையான வசதிகள் போதியளவில் காணப்பட வேண்டியிருந்த போதிலும், செயற்திட்ட அலுவலகத்திற்கு சொந்தமாக பௌதீக வசதிகள் போதியளவில் இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| விடயம் | தேவையான அளவு | 2023.05.31 இல் காணப்பட்ட அளவு | நிலுவையாக காணப்படுகின்ற அளவு 2023.05.31 |
|---|---|---|---|
| மேசை கணனிகள் | 15 | 05 | 10 |
| Laptop கணனிகள் | 06 | 04 | 02 |
| Multimedia Projector | 01 | 0 | 01 |
| Digital Screen | 01 | 0 | 01 |

### 3.6.5.2 விவசாயிகளுக்கு மானியம் வழங்குவதற்காக பயன்படுத்தப்படுகின்ற தரவு முறைமையில் தற்போதைய நிலைமை மற்றும் அபிவிருத்தி செய்வதன் தேவை

வரையறுக்கப்பட்ட பௌதீக வழங்களின் அளவு காணப்பட்டமை, போதியளவான பயிற்சி காணப்படாமை, தொழில்நுட்ப வலுக்கள் காணப்பட்டதன் காரணமாக மானியம் செயற்திட்டம் முழுவதும் பல்வேறு இடையூறுகள் மற்றும் நடைமுறை பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வரையறுக்கப்பட்ட கணனி அளவினை பயன்படுத்தி செயற்திட்டம் அமுல்படுத்தப்படுவதுடன், உயர் செயலாற்றலுடன் UPS கணனி தேவைக்கு ஈடுகொடுக்கின்ற (Web Server), வளிப்பதனாக்கி இடப்பட்ட சூழல் னுபைவையட திரை போன்ற பௌதீக வசதிகள் போன்ற தகவல்கள் முகாமைத்துவ அலகில் சேவையில்

ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தருக்கு தேவையான பயிற்சி வழங்குதல் விவசாயிகளுக்கு மானியம் வழங்குதல் உள்ளடக்கிய சேவைகள் மிகவும் வினைத்திறனாக வழங்குவதற்கு அத்தியவசியமாக காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

### 3.6.6 ஆண் பெண் சமத்துவத்தின் அடிப்படையில் விவசாய மானியங்களை செலுத்துதல்

செயற்திட்ட நிர்வாக கைநூலின் பிரகாரம் ஆண் பெண் சமத்துவம் சமூக உள்ளீர்க்கும் செயற்பாட்டு திட்டத்தின் அட்டவணை இலக்கம் 17 இல் வெளியீட்டு இலக்கம் 2.1.1 இன் பிரகாரம் நிகழ்ச்சித் திட்டத்திற்காக தெரிவு செய்யப்படுகின்ற 600,000 விவசாயிகளில் ஆகக் குறைந்தது 45 சதவீதம் அதாவது 270,000 பெண்களாக இருக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நெல் பயிரிடும் விவசாயிகளுக்காக பணம் செலுத்தும் போது ஆகக் குறைந்தது 45 சதவீதம் பெண்களாக இருக்க வேண்டியமை குறிப்பிடப்பட்ட போதிலும், தரவு முறைமையில் தரவுகள் உள்ளடக்கப்படுகின்ற Google Sheet அதில் ஆண் பெண் தன்மை தொடர்பாக தரவுகளை உள்ளடக்குதவற்காக தரவு துறை னுயவயய குநைட காணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் செயற்திட்ட ஆரம்பத்தின் போது அது தொடர்பாக கவனம் செலுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) செயற்திட்டத்தின் கீழ் 600,000 விவசாயிகளுக்கு நலன்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், நலன்களை பெற்றுக் கொள்வதற்காக விவசாயிகள் ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட அளவில் விண்ணப்பித்திருந்தனர். தரவு முறைமையின் பிரகாரம் நலன்கள் பெற்ற 1,051,807 விவசாயிகளின் தேசிய அடையாள அட்டை இலக்கம் பாவனையில் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக பகுப்பாய்வு செய்யப்பட்டு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 357,564 விவசாயிகள் 34 சதவீதம் பெண்களாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பயிர் செய்கை நடவடிக்கைகளின் ஈடுபட்டு மற்றும் தகவல்கள் சமர்ப்பித்த விவசாயிகளில் பெண்களின் சதவீதம் 11 சதவீத அளவினால் குறைவடைந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது 45 சதவீத பெண் விவசாயிகள் இருக்க வேண்டியவை என்ற எடுகோளை பூர்த்தி செய்திருந்த ஒரே ஒரு மாவட்டம் மட்டக்களப்பாக இருந்ததுடன் அதில் நெல் பயிரிடல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த பெண்களை எனின் பிரதிநிதித்துவம் 52.7 சதவீதம் ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது. தமிழ் மக்களில் அதிகமானவர்கள் வசிக்கும் மாவட்டத்தில் பெண் விவசாயிகளின் சதவீதம் உயர்பெறு மதியைக் கொண்டிருப்பதற்கு அவர்களின் கலாசாரத்தில் காணப்படுகின்ற பெண்களுக்கான வயல் காணிகளை வழங்கும் விஷேட தன்மை காரணமாக இருந்ததாக விவசாயிகளுடன் மேற்கொள்ளப்பட்ட நடைபெற்ற கலந்துரையாடலின் போது அவதானிக்கப்பட்டது.






மண்டபத்தடி கமநல சேவை நிலையத்தில் நடைபெற்ற விவசாயிகளின் சந்திப்பு 2023 யூன் 27

### 3.6.7 2019 முதல் 2023 வரை பெரும்போகத்தில் நெல் அறுவடை மற்றும் விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்குதல் நெல் விளைச்சல் தொடர்பில் ஒட்டுமொத்த தாக்கம்.

(அ) குடிசன மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தால் விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் உதவியுடன் பிரதான இரண்டு போகங்களான சிறு போகம் மற்றும் பெரும் போகங்களில் நெல் விளைச்சல் மதிப்பீடு செய்யப்படுகின்றது. 2019 முதல் 2022 வரை பெரும் போகத்தல் பயிரிடப்பட்ட அளவு மற்றும் வெட்டப்பட்ட நில அளவின் அடிப்படையில் 25 மாவட்டங்களில் விளைச்சல் பின்வரும் பிரகாரம் மதிப்பீடு செய்யப் பட்டிருந்தது.

| ஆண்டு, | பயிர்ச்செய்கை போகம் | பயிர்ச் செய்கை நில அளவு (ஹெக்டேயர்) | மொத்த விளைச்சல் (மெற்றிக்தொன்) |
|---|---|---|---|
| 2019 | 2019/20 பெரும்போகம் | 663,041 | 3,196,752 |
| 2020 | 2020/21 பெரும்போகம் | 681,521 | 3,061,394 |
| 2021 | 2021/22 பெரும்போகம் | 685,164 | 1,931,230 |

இந்தத் தகவல்களின் பிரகாரம் 2019 முதல் 2021 வரையான கால எல்லையில் பயிர்ச் செய்யப்பட்ட 03 பெரும் போகங்களில் பயிரிடப்பட்ட அளவு முறையே 663,041 முதல் 685,164 ஹெக்டேயர் வரை 3.3 சதவீதம் வரை அதிகரித்த போதிலும் நெல் விளைச்சல் மெற்றிக்தொன் 3,196,752 முதல் 1,931,230 வரை 39 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ஆ) நிறி உதவி வழங்கப்பட்ட 2022/23 பெரும் போகத்திற்குரிய பயிர்ச் செய்யப்பட்ட நிலத்தின் அளவு மற்றும் விளைச்சல் அறுவடை செய்யப்பட்ட நிலத்தில் அளவு தொடர்பாக 25 மாவட்டங்களுக்குரிய மொத்த தரவுகளும் சனத்தொகை மற்றும் புள்ளிவிபர திணைக்களத்திற்கு கிடைக்காதிருந்தமையால் 2023 ஆகஸ்ட் 23 ஆந் திகதி வரையிலும் ஒட்டுமொத்த விளைச்சல் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும் தகவல் கிடைக்கப் பெற்ற 09 மாவட்டங்களில் பயிர்ச் செய்யப்பட்ட அளவு 2021/22 பெரும் போகத்துடன் ஒப்பிடும் போது 09 சதவீதத்தால் அதிகரித்திந்தமை அவதானிக்கப்பட்டது.

| மாவட்டம் | 2021/22 பயிர்ச்செய்கை நில அளவு (ஹெக்டேயர்) | 2022/23 பயிர்ச்செய்கை நில அளவு (ஹெக்டேயர்) | நிலத்தின் அளவு அதிகரித்தல் (ஹெக்டேயர்) |
|---|---|---|---|
| கொழும்பு | 3,830 | 4,189 | 359 |
| மாத்தறை | 13,685 | 14,383 | 698 |
| யாழ்ப்பாணம் | 11,127 | 11,407 | 280 |
| வவுனியா | 18,859 | 23,503 | 4,644 |
| முல்லைத்தீவு | 19,990 | 25,652 | 5,662 |
| கிளிநொச்சி | 27,403 | 27,883 | 480 |
| மட்டக்களப்பு | 66,520 | 71,477 | 4,957 |
| திருகோணமலை | 39,650 | 48,765 | 9,115 |
| அநுராதபுரம் | 116,969 | 119,864 | 2,895 |
| மொத்தம் | 318,033 | 347,123 | 29090 |

(இ) கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் Geogoviya தரவு முறைமையின் பிரகாரம் 2022/23 பெரும் போகத்தில் நெல் பயிர்ச் செய்யப்பட்ட நில அளவு 760,498 ஹெக்டேயர் ஆக இருந்ததுடன் அது சனத்தொகை மற்றும் தொகை மதிப்பு திணைக்களத்தால் 2021/22 பெரும் போகத்தில் நெல் பயிரிடப்பட்ட நிலத்தின் அளவு தொடர்பாக அறிக்கையிடப் பட்டிருந்த 685,164 ஹெக்டேயர் நில அளவுடன் ஒப்பிடும் போதும் 11 சதவீதத்தால் அதிகரித்திருந்தமை தொடர்பில் நெற் பயிர்ச் செய்கைக்காக நிதி உதவி வழங்குதல் மற்றும் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்காக தாக்கமளித்த ஏனைய பாதகமான விடயங்கள் தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.6.8 மானியம் செலுத்துதல் தொடர்பாக காணப்படுகின்ற பொதுவான குறைபாடுகள்.

**(அ) கொவிதிரிய கணக்கின் மூலம் மானியம் செலுத்துதல்.**

2018 ஆம் ஆண்டின் போது கமநல அபிவிருத்தி திணைக்களத்தால் விவசாயிகளுக்கு மானியம் செலுத்தும் போது பயன்படுத்துவதற்காக மக்கள் வங்கியுடன் ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டின் பிரகாரம் ரூபா 500 ஆரம்ப வைப்பொன்றைப் பயன்படுத்தி வங்கி கணக்கு ஆரம்பிக்குமாறு விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே இந்தக் கணக்கு இரத்துச் செய்யப்படாமல் நீண்ட காலம் பேணிச் செல்வதற்கு வங்கியுடன் இணக்கம் செய்யப்பட்டிருந்தது. இந்த மானிய நிகழ்ச்சித்திட்டத்தின் போது விவசாயிகளின் வங்கிக் கணக்கு விபரங்களை வழங்கும் போது கொவிதிரிய கணக்கு இலக்கம் வழங்குமாறு கமநல அபிவிருத்தி திணைக்களத்தால் விவசாய ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்படாமல் அந்த உத்தியோகத்தர்களினால் அந்தக் கணக்கு விபரங்களை வழங்குமாறு விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் விவசாயிகளால் கொவிதிரிய வங்கி கணக்கு விபரங்கள் வழங்கப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டின் பின்னர் கமநல அபிவிருத்தி

திணைக்களத்தால் விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்காமை மற்றும் விவசாயிகளினால் இந்த கணக்கு கொடுக்கல் வாங்கல்களுக்காக பயன்படுத்தாமையின் காரணமாக கணக்குகள் செயலிழந்த மையால் விவசாயிகள் கணிசமான எண்ணிக்கையினர் மானியங்களுக்குரிய வங்கிக் கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) மானியப் பணம் விண்ணப்பித்த விவசாயிகளின் பணம் பெறுவனவு தொடர்பாக உறுதிப்படுத்துவதற்கான திட்ட முறைமையொன்று தயாரிக்கப்படாமை.**

நெல் விவசாயிகளுக்கு நிதி உதவி செலுத்துவதற்காக நெல் பயிரிட்ட விவசாயிகள் தொடர்பான தரவுகளை உள்ளடக்கும் பொறுப்பு கமநல சேவை நிலையப் பொறுப்பு பிரதேச உத்தியோகத்தருக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் மானித்தை பெற்றுக்கொள்வதற்கான தரவுகளை உள்ளடக்கிய விவசாயிகள் எண்ணிக்கை என நிதி உதவி பெற்றிருந்தனர் என்பதை பரீட்சிப்பதற்கான திட்டமுறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. தரவு முறைமையில் உள்ளடக்கப்படுகின்ற தரவுகளை தயாரித்தலை மேற்கொள்கின்ற செயற் திட்ட அலுவலகம் மூலம் கொடுப்பனவுகள் நிராகரிக்கப்பட்ட விவசாயிகளின் பெயர் பதிவேடு மாத்திரம் கமநல சேவை நிலையங்களுக்கு வழங்கப்படுகின்றது. அதன் பிரகாரம் நிதி உதவி பெற்ற விவசாயிகளின் எண்ணிக்கை தொடர்பாக கமநல சேவை நிலையத்தின் பிரதேச உத்தியோகத்தர் அல்லது விவசாய ஆராய்ச்சி உதவி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்காதிருந்ததாக அந்த உத்தியோகத்தர்களுடன் இடம் பெற்ற கலந்துரையாடலின் போது அவதானிக்கப்பட்டது.

**(இ) வங்கி கணக்கிற்கு செலவு வைப்பதற்கு முன்னர் கொடுப்பனவு செய்யப்பட்டமைக்கு விவசாயிகளின் கையடக்கத் தொலைபேசிக்கு குறுஞ்செய்தி அனுப்புதல்.**

மானியம் செலுத்தும் உறுதிச்சீட்டுக்களைத் தயாரித்து பூர்த்தி செய்த பின்னர் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு பணம் செலவு வைக்கப்பட்டதாக குறிப்பிட்டு செயற் திட்டத்தின் தரவு முறைமையின் மூலம் விவசாயிகளின் கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறும் தகவல் அனுப்பப்பட வேண்டியிருந்த போதிலும் பல்வேறு குறைபாடுகளினால் வங்கியினால் Slip Run இன்றி கமநல அபிவிருத்தி திணைக்களம் பிரதான அலுவலகத்திற்கு மீண்டும் அனுப்பியதன் காரணமாக விவசாயிகளின் வங்கி கணக்குகளுக்கு பணம் செலவு வைக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. குறும் தகவல் மூலம் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்காக வங்கிக்குச் சென்ற விவசாயிகளுக்கு பணம் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தமையால் வசதியீனத்திற்கு உட்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை கணக்காய்வின் போது பெறப்பட்ட தகவல்கள் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2022/23 பெரும்போகத்தில் நெல் பயிரிட்ட விவசாயிகளுக்காக 10,000 ஹெக்டேயருக்கு நிதி உதவி ஒன்று நெல் பயிரிட்ட விவசாயிகளுக்காக விகிதாசார ரீதியில் செலுத்தப்படுகின்றமையால் 0.2 ஹெக்டேயர் பயிரிட்ட விவசாயிகளுக்கு கிடைக்கின்ற தொகை ரூபா 2,000 ஆகும். இந்த தொகை உரிய விவசாயிகளின் வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப்படுகின்ற சந்தர்ப்பம் வரையிலும் விவசாயிகளின் வங்கிக் கணக்குகள் செயலிழந்து காணப்பட்டமையால் வங்கி கணக்குகளை செயற்படுத்துவதற்கு மீண்டும் வைப்புச் செய்ய வேண்டியிருந்தமையால் மற்றும் உரிய திருத்தப்பட்ட தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தமையாலும் சில விவசாயிகள் நிதி உதவியைப் பெற்றுக் கொள்ளல் நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் அந்தப் பணம் அந்த நிதிஉதவியைப் பெற்றுக் கொள்ள முடியாதிருந்தமைக்கு காரணமாக இருந்ததாக விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

### 3.7 நலன்கள் சமுர்த்தி வங்கிகள் மூலம் செலுத்துதல் செயற்திறனான தன்மை.

#### 3.7.1 நலனாளிகளுக்கு பணம் செலுத்துதல்.

நலனாளிகளுக்கு நிதி செலுத்தும் போது சமுர்த்தி வங்கிகள் மற்றும் அரசாங்கத்தின் வங்கி ஊடாக கொடுப்பனவை மேற்கொள்வதற்கு தீர்மானித்தல், சமுர்த்தி வங்கியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் manual ஆக மேற்கொள்ளல், நலன்களை செலுத்துவதற்காக பயன்படுத்தப்பட்ட திட்ட முறைமை தொடர்பாக பரீட்சிக்கும் போது பின்வரும் நிலைமைகள் அவதானிக்கப்பட்டன.

| தொடர் இலக்கம் | நலனாளிகளின் வகை | நலனாளிகளின் எண்ணிக்கை | ஆசிய அபிவிருத்தி வங்கி நலன்கள் செலுத்துவதற்கு முன்னர் பயன்படுத்தப்பட்ட முறைமை | | | | | ஆசிய அபிவிருத்தி வங்கி நலன் செலுத்திய முறைமை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | செலுத்திய முறைமை | கிளைகளின் எண்ணிக்கை | ATM காணப்படல் | கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கு முறைமையின் பயன்பாடு | பாஸ் புத்தகம் கணனி மூலம் அச்சிடல். | செலுத்திய முறைமை | கிளைகளின் எண்ணிக்கை | ATM காணப்படல் | கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கு முறைமையின் பயன்பாடு | பாஸ் புத்தகம் கணனி மூலம் அச்சிடல். |
| 01. | சமுர்த்தி நலனாளிகள் (செயற்திட்ட நிர்வாக கைநூலின் பிரகாரம் நிலையான மற்றும் காத்திருத்தல் எண்ணிக்கை) | 2,490,000 | சமுர்த்தி வங்கியின் மூலம் | 1090 | இல்லை | 1024 | 891 | சமுர்த்தி வங்கியின் மூலம் | 1090 | இல்லை | 1024 | 891 |
| 02. | முதியோர்கள் (செயற்திட்ட நிர்வாக கைநூலின் பிரகாரம் நிலையான மற்றும் காத்திருத்தல் எண்ணிக்கை) | 660,000 | தபால் அலுவலகம் மூலம் | 3995 | இல்லை | இல்லை | இல்லை | சமுர்த்தி வங்கியின் மூலம் | 1090 | இல்லை | 1024 | 891 |
| 03. | ஊனமுற்றோர் மற்றும் சிறுநீரக நோயாளர்கள் (செயற்திட்ட நிர்வாக கைநூலின் பிரகாரம் நிலையான மற்றும் காத்திருத்தல் எண்ணிக்கை) | 180,000 | அரசாங்க வங்கியின் மூலம் | 1926 | ஆம் | ஆம் | ஆம் | சமுர்த்தி வங்கியின் மூலம் | 1090 | இல்லை | 1024 | 891 |
| | கர்ப்பிணிகள் மற்றும் | 153,320 | காசாக நலன்கள் | | | | | சமுர்த்தி | 1090 | இல்லை | 1024 | 891 |

| | | | |
|---|---|---|---|
| 04. | பாலூட்டும் தாய்மார்கள் (நலன்கள் செலுத்தப்பட்ட எண்ணிக்கை) | செலுத்தப்படவில்லை. | வங்கியின் மூலம் |

ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் உதவி செயற்திட்டத்தின் கீழ் உரிய நலனாளிகள் 04 வகைகளுக்கான 3,486,449 நலனாளிகள் (3 மில்லியனுக்கு அண்மித்த) இற்காக நலன்கள் செலுத்துவதற்கு சமுர்த்தி வங்கிக்கு அனுப்பும் போது மேற்கூறப்பட்ட வங்கிகளின் நலனாளிகளுக்கு வசதியாக பணத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடிய சுயமாக இயங்கும் டெலர் இயந்திரம் (Automated Teller Machine) காணப்படாமை, 66 வங்கிகளில் கணனி முறைமை ஊடாக கணக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளாமை, 199 வங்கிகளில் கணனி முறைமை ஊடாக பாஸ் புத்தகம் அச்சிடப்படாமையால் நலனாளிகள் மற்றும் வங்கி உத்தியோகத்தர்கள் கஷ்டத்திற்கும் இடையூறுகளுக்கும் உட்பட்டிருந்தனர். மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தின் கீழ் நலனாளிகள் 3 மில்லியனுக்கு அண்மித்த அளவிற்கு உரிய நலன்கள் கால ரீதியில் சரியான திட்ட முறைமையொன்றின் ஊடாகவும், செயற்திட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றும் முறையிலும் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது,

### 3.7.2 கணனி மென்பொருள் பயன்பாட்டில் வங்கி செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

வாடிக்கையாளர்களின் மற்றும் வங்கி நடவடிக்கைகளை விரைவாகவும் செயற்திறனாகவும் மேற்கொள்வதற்காக சமுர்த்தி வங்கியில் அமுல்படுத்தப்பட்ட SLTS மற்றும் SOFTWATCH கணனி மென்பொருளில் மொடியூல் ஸ்தாபித்தல் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக 2023 மே 18 இல் உள்ளவாறு சமுர்த்தி வங்கி கணனிமயப்படுத்துதலின் செயல் முன்னேற்றத்தை காண்பிக்கின்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் காரணமாக சமுர்த்தி வங்கியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் செயற்திறனாக மேற்கொள்ளல் மற்றும் மிகவும் ஆக்கபூர்வமான சேவையினை வாசகர்களுக்கு வழங்குவதற்கு முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

#### 3.7.2.1 கணனி மென்பொருள் பயன்பாட்டால் நலனாளிகளின் கணக்குகளுக்கு பணம் செலவுவைத்தல்.

(அ) சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் 2023 ஏப்ரல் 25 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்க கணக்கு குழு கூட்டத்தின் போது கணக்கு குழுவினால் வழங்கப்பட்ட கட்டளைகளை அமுல்படுத்தும் தற்போதைய செயல் முன்னேற்றத்தை காண்பிக்கின்ற அறிக்கையில் காணப்படுகின்ற தகவல்களின் பிரகாரம் சமுர்த்தி வங்கி கணனிமயப்படுத்தப்பட்டு இணைதளம் ஊடாக சேவை வழங்குவதல் தொடர்பான நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) சமுர்த்தி வங்கியை கணனிமயப்படுத்தல் செயல் முன்னேற்றத்தில் காணப்படுகின்ற அறிக்கையின் படி 2023 மே 18 ஆம் திகதியில் நாடு முழுவதும் அமைந்துள்ள சமுர்த்தி வங்கி முறைமையில் அமுல்படுத்தப்படுகின்ற 1090 சமுர்த்தி வங்கிகளுக்கிடையே கணனி முறைமை ஊடாக கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்கின்ற 1024 வங்கிகள் காணப்பட்டமை அதன் மூலம் நலனாளிகளின் கணக்குகளுக்கு மானியங்களை செலவு வைத்தல் மேற்கொள்ளப்படுவதாக காண்பிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக மாவட்ட மட்டத்தின் தகவல்கள் பின்வருமாறு.

| மாவட்டம் | வங்கிகளின் எண்ணிக்கை | கணனிமயப்படுத்தப்பட்ட முறைமை மூலம் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்கின்ற வங்கிகள் | கணனி முறையின் மூலம் மானியம் செலவு வைத்தல் மேற்கொள்கின்ற வங்கிகள் | கணனி முறையின் மூலம் பாஸ் புத்தகங்கள் அச்சிட முடியுமான வங்கிகள் |
|---|---|---|---|---|
| கொழும்பு | 42 | 39 | 39 | 38 |
| களுத்துறை | 56 | 56 | 56 | 56 |
| கம்பஹா | 88 | 84 | 84 | 84 |
| கண்டி | 91 | 90 | 90 | 85 |
| நுவரெலியா | 38 | 32 | 32 | 32 |
| மாத்தளை | 40 | 35 | 35 | 35 |
| அனுராதபுரம் | 55 | 55 | 55 | 44 |
| அம்பாறை | 45 | 42 | 42 | 42 |
| திருகோணமலை | 21 | 18 | 18 | 15 |
| குருணாகல் | 120 | 111 | 111 | 110 |
| மட்டக்களப்பு | 31 | 31 | 31 | 31 |
| புத்தளம் | 49 | 48 | 48 | 48 |
| கிளிநொச்சி | 8 | 8 | 8 | 8 |
| மன்னார் | 10 | 10 | 10 | 10 |
| யாழ்ப்பாணம் | 33 | 33 | 33 | 32 |
| முல்லைத்தீவு | 10 | 10 | 10 | 10 |
| வவுனியா | 10 | 9 | 9 | 9 |
| பொலன்னறுவை | 22 | 21 | 21 | 21 |
| மொனராகலை | 27 | 23 | 23 | 17 |
| மாத்தறை | 50 | 47 | 47 | 20 |
| கேகாலை | 45 | 34 | 34 | 16 |
| காலி | 69 | 68 | 68 | 65 |
| பதுளை | 42 | 38 | 38 | 4 |
| அம்பாந்தோட்டை | 42 | 38 | 38 | 15 |
| இரத்தினபுரி | 46 | 44 | 44 | 44 |
| மொத்தம் | 1090 | 1024 | 1024 | 891 |

மூலம்: சமுர்த்தி வங்கி கணனிமயப்படுத்தல் செயல் முன்னேற்ற அறிக்கையின் இணைப்பு இலக்கம் 03 – 1

நாடு முழுவதும் அமுல்படுத்தப்படுகின்ற இந்த நிதி உதவி நிகழ்ச்சித்திட்டம் ஊடாக விரைவாக நலனாளிகளுக்காக பணம் செலுத்துதல் எதிர்பார்க்கப்பட்டதுடன் மென்பொருளின் பயன்பாட்டின் போது பெறக்கூடியதாக இருந்த வசதிகள் காணப்படாமையின் காரணமாக நலனாளிகளுக்கு செயற்திறனான நலன்களை வழங்குவதற்கு முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் 2017 மார்ச் 31 ஆம் திகதிய கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 8/2017 இன் 5.2 இன் பிரகாரம் மானியத்திற்குரிய நலனாளிகள் கணக்குகளுக்கு செலவு வைப்பதற்கு உரிய மாதத்தில் பணம் கிடைத்து 03 நாட்களுக்குள் மேற்கொள்ள வேண்டியதாக காண்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி உதவி மேற்கூறப்பட்ட கருதுகோளின் கீழ் உரிய நலனாளிகளுக்கு கால ரீதியில் பெற்றுக்கொள்வதற்கு கொடுக்கல் வாங்கல்களை கையினால் பதிவதன் மூலம் முடியாதிருந்தது. அதன்

பிரகாரம் மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தின் செயற்திறன் மற்றும் வினைத்திறன் இதன் மூலம் தாக்கத்திற்கு உட்பட்டிருந்தது.

(ஆ) சமுர்த்தி வங்கி கணணி மயப்படுத்தும் செயல்முன்னேற்ற அறிக்கையில் காணப்படுகின்ற இணைப்பு 03 இன் படி 2023 மே 18 இல் உள்ளவாறு module ஆக பூர்த்தி செய்யப்படாதிருந்த வங்கி தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

(i) குருனாகல் மாவட்டத்தில் பிரதேச செயலக பிரிவுகளுக்குரிய கீழே அட்டவணையில் காண்பிக்கப்படுகின்ற சமுர்த்தி வங்கிகளில் தொடர்பாடல் சமிஞ்ஞைகள் தொலைத் தொடர்பு வசதிகள் காணப்படாமையின் காரணமாக நலனாளிகளுக்கு பணம் செலவு வைத்தல்களை விரைவாக மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. அதன் பிரகாரம் கணணி மென்பொருள் ஊடாக செயற்திறனாக நலனாளிகளுக்காக பணம் செலுத்துதல் மேற்கொள்ளப்படவில்லை.

| பிரதேச செயலகப் பிரிவு | சமுர்த்தி வங்கி |
|---|---|
| கிரிபாவ | வராவெவ, தம்சோபுற |
| அம்பன்பொல | பொறவெவ |
| பொல்பத்திகம | கழுகல்ல, மடஹபொல, மொறகல்லாகம |
| பண்டுவஸ்நுவர கிழக்கு | மூணமல்தெனிய, |
| றிதீகம | தெல்விட்ட |

(ii) அம்பாந்தோட்டை மாவட்டத்திற்குரிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்குரியதாக பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட சமுர்த்தி வங்கிகளில் ஸ்தாபிக்கப்பட்ட சொப்ட் வொச் கணனி மென்பொருள்களுக்காக அந்த வங்கிகளில் காணப்படுகின்ற பழைய கணனி நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதியொன்றைப் பெற்று புதிய கணனி நிகழ்ச்சித்திட்டத்தை உள்ளடக்கி வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. மென்பொருளுக்குரிய module தேவையான பிரகாரம் ஸ்தாபிக்காமையினால் வங்கி பதவியணியினருக்கு தேவையற்ற காலம் அதற்காக ஈடுபடுத்த வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் கணனி மென்பொருளை செயற்திறனாகவும், வினைத்திறனாகவும் பயன்படுத்துவதற்கு அளவு போதியளவில் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | சமுர்த்தி வங்கி கிளை |
|---|---|---|
| அம்பாந்தோட்டை | அங்குணகொலபெலெஸ்ஸ | அங்குணகொலபெலெஸ்ஸ |
| | | தலாவ |
| | | உடயால |
| | அம்பாலாந்தோட்டை | போலான |
| | | ஹுங்கம |
| | | நோனகம (2023 மே 02 பௌதீக பரிசோனையின் போது வழிப்படுத்தப்பட்டது) |

| | |
|---|---|
| கட்டுவன | கட்டுவன |
| | மெதகந்த |
| | வெலிபிட்டிய |

(iii) மொனராகலை மாவட்டத்தில் பிபில மற்றும் செவனகெல பிரதேச செயலகப் பிரிவுகளுக்குரிய கொட்டகம லிந்தகும்பர மற்றும் தொடம்கொல்ல செவனகல சமுர்த்தி வங்கிகளில் அமுல்ப்படுத்தப்பட்ட மென்பொருளின் செயற்படு நிலையில் பல்வேறு சந்தர்ப்பங்களின் போது மெதுவாக இருந்தமையின் காரணமாக செயற்திறனாக நிதியுதவி நலனாளிகளுக்கு வழங்குவதில் பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தது.

(iv) மொனராகலை மாவட்டத்தில் அமுல்ப்படுத்தப்பட்ட அமுலில் உள்ள 27 சமுர்த்தி வங்கிகளில் 23 இனது கணனி முறைமைகளில் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுவதுடன் மொனராகலை மாவட்டத்தில் சமுர்த்தி உள்ளக கணக்காய்வுப் பிரிவில் கணக்காய்வு வங்கி கணனி மயப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி வங்கியில் இணைய தள வசதிகள் காணப்படாமை, இணைய தள வசதிகள் மெதுவான நிலையில் இருந்தமை, கணனி மென்பொருள் ஸ்தாபிக்காமை என்பவற்றின் காரணமாக ரத்துகல சியம்பலாண்டுவ ஹம்பேகமுவ மற்றும் தனமவில வங்கிகளில் கணனி முறைமை ஊடாக நலனாளிகளின் கணக்குகளுக்கு பணம் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் நலனாளிகளுக்கு விரைவாக பணத்தை வழங்குதல் பிரச்சினை ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் காரணமாக வங்கி செயற்பாட்டு நடவடிக்கைகள் கணனி மென்பொருள் ஊடாக செயற்திறன் ஊடாக, காலரீதியில் மேற்கொள்வதற்கு இலகுவான சிறந்த கொடுக்கல் வாங்கல்கள் சேவையினை வழங்குதல் திருப்தி கரமாண மட்டத்தில் மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

**3.7.2.2 நலனாளிகளின் கணக்குகளுக்கு பணம் செலவு வைத்தலின் செலுத்துவதற்கு பௌதீக் பௌதீக பரிசோதனை**

(அ) சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள சுற்றறிக்கை திணைக்களம், DSD/SCBBU/21/2022/03/XVII மற்றும் 2023 பெப்ரவரி 23 ஆந் திகதிய சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் சகல சமுர்த்தி வங்கிகள், கணனி மென்பொருள் ஊடாக கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றமையும், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் பிரதான அலுவலகத்திற்கு அனுப்புகின்ற சகல மானியங்களும் நேரடியாக சமுர்த்தி வங்கி கணக்குகளுக்கு அனுப்படுவதாகவும் நலனாளிகளின் கணக்குகளுக்கு பணம் செலவு வைத்தல் மேற்கொள்ளப்படுவதாகவும் காண்பிக்கப்பட்ட போதிலும் தனமல்வில சமுர்த்தி வங்கி கணக்கு உரிமையாளர்களின் கணக்குகள் கையினால் (Mannual) ஆக பேணிச் செல்லப்படுகின்றமை பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) தனமல்வில சமுர்த்தி வங்கியில் கணனி மென்பொருளைப் பயன்படுத்தி கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளாதிருந்த வங்கியில் Soft Watch முறைமை ஸ்தாபிப்பதற்காக 2020 ஆம் ஆண்டில் இருந்து நடவடிக்கை எடுக்கப்பட்டதாக வங்கி முகாமையாளரின் தெளிவுபடுத்தலின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. அந்த கணனி மென்பொருளுக்காக உதவி மற்றும் பராமரிப்பு சேவைகளை வழங்குவதற்காக தனியார் நிறுவனம் ஒன்றுடன் 2022 – 2025 காலப்பகுதிக்காக உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டிற்காக வங்கியால் அதற்காக ரூபா 46,502 செலுத்தப்பட்டிருந்தது. 2022 ஒக்டோபர் 26 ஆந் திகதிய இலக்கம் DSD/HO/05/MF/01 சுற்றறிக்கையின் படி இந்த மென்பொருள் முறைமை வங்கியில் பேணிச் செல்லும் நோக்கமாக சமுர்த்தி வங்கி செயற்பாட்டு நடவடிக்கைகளில் தொடர்புபடுத்தி கணக்கு செயற்பாடுகளை இலகுபடுத்துதல் மற்றும் செயற்திறனாக மேற்கொள்ளல் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும்

மேற்கூறப்பட்ட தரவு முறைமை பேணிச்செல்வதால் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் பெறப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.8 நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் மற்றும் இலக்குகள் செயற்திட்ட நோக்கங்களை சீராக்கல்

நிலைபேறான அபிவிருத்தி என்ற எதிர்கால பரம்பரைக்கு தமது தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளக் கூடிய வகையில் வெளிப்படுத்தாமல் தற்போதைய தேவையினை பூர்த்தி செய்து அபிவிருத்தி செய்வது ஆகும். இதன் மூலம் நாட்டின் நிலைபேறான அபிவிருத்தி அடைந்து கொள்வதற்கு பொருளாதார சமூக மற்றும் சுற்றாடல் நோக்கங்கள் ஒன்றுடன் ஒன்று சேர வேண்டியிருந்தது.

இதற்காக இலங்கையில் நிலைபேறான அபிவிருத்திக்குரிய சட்டரீதியான ஏற்பாட்டின் கீழ் 2017 இன் 19 ஆம் இலக்க தேசிய நிலைபேறான அபிவிருத்தி சட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அந்த சட்டத்தின் 11 ஆவது பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு அமைச்சும், திணைக்களம், மாகாண சபை மற்றும் மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள் தமது விடய பரப்பிற்குரிய நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கை மற்றும் கருத்திட்டங்களுக்கு இணங்க நிலை பேறான அபிவிருத்தி செயற்திட்டங்களை தயாரிக்க வேண்டியிருந்தமை காண்பிக்க காண்பிக்கப்பட்டுள்ளது. 2017 இன் 19 ஆம் இலக்க இலங்கை நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் பிரிவு இலக்கம் 10 இல் ''உ'' இன் கீழ் நிலைபேறான அபிவிருத்தி சபையினால் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கை மற்றும் கூட்டிணைந்த திட்டங்களை அமுல்படுத்துதல் தொடர்பான பொறிமுறை மற்றும் செயல் முன்னேற்றத்தை மீளாய்வு செயற்பாடுகளுக்கு வசதிகள் வழங்குதல் படிமுறைகள் வசதிகளை வழங்குதல் தரவுகளை உள்ளடக்குதல் (Digital Portal) தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் உரிய அரசாங்க நிறுவனத்தால் தமது விடயப்பரப்பிற்குரிய நோக்கங்கள் மற்றும் விடயப்பரப்புக்களை இணங்கண்டு மற்றும் குறிகாட்டிகளை தயாரித்து அவற்றின் செயல் முன்னேற்றம் மேற்கூறப்பட்ட தரவு முறைமையில் உள்ளடக்குவதன் மூலம் இலங்கையில் நிலைபேறான அபிவிருத்தி செயல் முன்னேற்றத்தை அவதானிக்க முடியும். இலங்கையில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் மற்றும் இலக்கை அடைந்து கொள்ளும் செயல்முன்னேற்றம் (2023 யூலை 05 இல் உள்ளவாறு) இணைப்பு 09 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

### 3.9 செயற்திட்டத்தை ஒழுங்குபடுத்தும் பணிகள்

#### 3.9.1 செயற்திட்ட செயற்பாட்டுக் குழு

உதவி செயற்திட்டம் செயற்திட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனத்திற்கு இடையே உபாய வழிகள் மற்றும் கொள்கை ரீதியான திசைகளை மற்றும் வழிகாட்டல்களை வழங்குவதற்கான செயற்திட்ட செயற்பாட்டுக்குழு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சின் செயலாளர் இந்த இதில் பங்கெடுத்திருந்ததுடன் திறைசேரி திணைக்களம் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம், தேசிய திறைசேரி மற்றும் ஒழுங்குபடுத்துதல் திணைக்களம் வெளிநாட்டு வழங்கல் திணைக்களம், தேசிய திட்டமிடல் திணைக்களம், மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலூவூட்டல் அமைச்சு, மற்றும் விவசாய அமைச்சு என்ற நிறுவனங்களின் பிரதிநிதித்துவங்களை உள்ளடக்கி உள்ளது.
செயற்திட்ட நிருவாக கைநூலின் பிரகாரம் செயற்திட்ட செயற்பாட்டு குழுவுக்கு கையளிக்கப்பட்டுள்ள பணிப்பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் பின்வருமாறு.

i. செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக ஒட்டு மொத்த உபாய வழிகள் மற்றும் கொள்கை ரீதியான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டிகளை வழங்குதல்.

ii. செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது மற்றும் முகாமைத்துவம் செய்யும் போது நிறைவேற்று முகவர் நிறுவனம் (Executing) மற்றும் அமுல்படுத்துகின்ற நிறுவனம் (Implementing) இடையே தொடர்பினை ஏற்படுத்துதல்

iii. காலாண்டு ரீதியான செயற்திட்ட செயற்திட்டங்களை மீளாய்வு செய்து அங்கீகரித்தல்

iv. அங்கீகாரத்திற்காக ஒன்றினைந்த காலாண்டு ரீதியான பாதீட்டு தேவைகளை மீளாய்வு செய்து பரிந்துரை வழங்குதல்.

v. செயற்திட்ட பூர்த்தி மற்றும் செயற்பாடுகளில் காலரீதியில் செயலாற்றலை மீளாய்வு செய்தல் மற்றும் செயற்திட்டத்தை அழுல்படுத்துதலை விரைவுபடுத்துதல், மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தேவையான முன்மொழிவை முன்மொழிவை சமர்ப்பித்தல்,

vi. கணக்காய்வு அவதானிப்பு மற்றும் பரிந்துரைகளில் உள்ளடக்கப்பட்ட நிதி முகாமைத்துவத்தின் எந்தவொரு நலிவும் காணப்படுமாயின் மீளாய்வு செய்து நிறைவேற்று முகவர் நிறுவனம் (Executing) மற்றும் அமுல்படுத்துகின்ற நிறுவனத்தால் (Implementing) எடுக்க வேண்டிய சரியான நடவடிக்கைகளுக்கு பரிந்துரை வழங்குதல்.

இந்த செயற்திட்டத்திற்குரிய செயற்திட்ட உடன்படிக்கை 2022 செப்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் நலனாளி தொகுதிகளுக்கு நிதியுதவிகளை வழங்குதல் 2022 ஒக்டோபர் மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. செயற்திட்ட நிர்வாக கைநூல் (Project Administration Manual) இன் பிரகாரம் முதலாவது மூன்று மாதங்களுக்காக மாதத்திற்கு ஒரு தடவை வீதமும் அதன் பின்னர் காலாண்டிற்கு ஒரு தடவை வீதமும் கூட்டம் கூட்டப்பட வேண்டுமென காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்ட செயற்பாட்டுக்குழு செயற்திட்ட நிர்வாக கைநூலில் காண்பிக்கப்படுகின்ற தேவைகளின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டில் எந்தவொரு சந்தர்ப்பத்திலேனும் கூட்டம் கூட்டப்படாதிருந்ததுடன் முதலாவது கூட்டம் 2023 ஆம் ஆண்டின் பெப்ரவரி 21 ஆம் திகதி கூட்டப்பட்டிருந்தது. அதன் போது எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

(அ) உணவு பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீள் மீளமைத்தல் அவசர உதவி செயற்திட்டத்தின் செயற்பாடுகளுக்காக செயற்திட்ட முன்மொழிவுகள் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பரிந்துரைக்காக சமர்பிக்க வேண்டியிருந்தமையும் அந்த பரிந்துரை கிடைத்ததன் பின்னர் செயற்திட்டமான சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் மற்றும் கமநல அபிவிருத்தி திணைக்களம் போன்ற நிறுவனங்களுக்கு தமது காலாண்டு ரீதியான செயற்திட்ட திட்டங்களில் உள்ளடக்க வேண்டியிருந்தமை மற்றும் அங்கீகாரத்திற்காக செயற்திட்ட செயற் குழுவிற்கு சமர்பிக்க கூடியதாக இருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும், இந்த தீர்மானத்திற்காக இணங்குகின்ற சந்தர்ப்பத்தின் போது 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் செயற்திட்டத்தின் கடன் தொகையில் கிடைக்கப்பெற்ற ரூபா 62,311,741.96 தொகையில் ரூபா 55,930,396,478 தொகை அதாவது 90 சதவீத அளவு செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) அவ்வாறே கணக்காய்வின் போது செயற்திட்ட நடவடிக்கைகனை அமுல்படுத்துதல் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ளும் போது 2022 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டின் இறுதி மாதம் மற்றும் நான்காம் காலாண்டிற்காக நிறைவேற்றுவதற்காக எதிர்பார்க்கப்பட்ட பணிகளுக்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

### 3.9.2 செயற்திட்டத்தின் செயாற்றல் குறிகாட்டிகளின் செயல் முன்னேற்றம்.

ஆசிய அபிவிருத்தி கடன் உதவி வங்கி கடன் உதவி செயற்திட்டத்தின் செயற்திட்ட நிர்வாக கைநூலின் இலக்கம் 70 இல் (அட்டவணை 18) செயற்திட்ட திட்டம் மற்றும் ஒழுங்குபடுத்துல்

சட்டகம் காண்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் உரிய பெறுபேறுகளின் பூர்த்தி மற்றும் கவனத்தில் உட்படுத்த வேண்டிய நபர்களின் வாழ்வாதார அபிவிருத்தி செயல் முன்னேற்றம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **தொடர் இலக்கம்** | **விளைவின் தன்மை** | **குறிகாட்டி** | **தரவு மூலம் மற்றும் அறிக்கை முறைமை** | **செயல் முன்னேற்றம்** |
|---|---|---|---|---|
| 01. | விளைவுகள் (Out Come) வறுமை மற்றும் ஆபத்திற்கு உட்படுகின்ற நபர்களின் உணவு பாதுகாப்பை (விசேடமாக பெண்கள் மற்றும் பிள்ளைகள்) ஏற்படுத்துதல்) | 01. உணவு பாதுகாப்பு இன்மை 30 சதவீதத்திற்கு குறைத்தல் (அடிப்படை 2022 ஆம் ஆண்டு நபர்கள் 3.26 மில்லியன்) | உணவு பாதுகாப்பு செயல் முன்னேற்றத்தை கணிப்பிடல் இலங்கை அரசாங்கம் அல்லது அபிவிருத்தி தரப்பினர் 2024 அல்லது 2025 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ள வேண்டும். | உணவு பாதுகாப்பு செயல் முன்னேற்றத்தை கணிப்பிடல் இலங்கை அரசாங்கம் அல்லது அபிவிருத்தி தரப்பினர் 2024 அல்லது 2025 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ள வேண்டும். |
| | | 02. பெரும்போகம் (2022 செப்தெம்பர் - 2023 மார்ச்) மேற்கூறப்பட்ட விளைச்சலுடன் வலயங்களில் காணிகள் 80 சதவீதம் பயிரிடல் (அடிப்படை 2022 ஆம் ஆண்டில் பயிர் செய்யப்பட்ட காணிகளில் 73 சதவீதம் பயிரிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டமை) | தொகைமதிப்பு புள்ளிவிபர திணைக்களத்தின் தரவுகள் | 2021 – 2022 பெரும்போக நிலத்தின் அளவு 685,164 ஹெக்ரெயர் ஆகும். 2022 – 2023 பெரும் போக தரவு கூற்று வெளியிடப்படவில்லை. செயல் முன்னேற்றம் அளவிடப்படவில்லை. |
| | | | கமநல அபிவிருத்தி திணைக்கள தரவுகள் | 2021 – 2022 பெரும்போகத்தின் தரவுகள் காணப்படாதிருந்ததுடன் 2022 – 2023 பெரும்போகத்தில் Geo Goviya தரவு முறைமையின் பிரகாரம் 760,498 ஹெக்ரெயர் ஆகும். |
| | | 03. 2020 – 2021 வருடங்களின் பெரும்போகத்தில் கிடைக்கப்பெற்ற நெல் விளைச்சலில் | தொகைமதிப்பு புள்ளிவிபர திணைக்களத்தின் தரவுகள் | 2022 – 2023 தரவுகள் வெளியிடப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | குறைந்தது 75 சதவீதத்தை பெறல். (அடிப்படை 2020 – 2021 பெரும்போகத்தில் நெல் விளைச்சல் மெட்ரிக் தொன் 3,061,394) | | |
| 02. | வெளியீடு (Out Put) வறுமை மற்றும் ஆபத்திற்கு உட்பட்ட குழுக்களுக்காக நேரடி நிதி உதவி வழங்குதல் | 01. குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் 1.76 மில்லியன் மற்றும் காத்திருத்தல் பதிவேட்டில் 0.73 மில்லியனிற்காக நிதியுதவி வழங்குதல். (அடிப்படை - 2022 ஆகஸ்ட் வரை நிதியுதவி வழங்குதல்) | சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் (CRM) கணனி முறைமை | நலன்கள் கிடைத்த நபர்களின் எண்ணிக்கை 2022 – செப்தெம்பர் 99 சதவீதம் ஒக்டோபர் 99 சதவீதம் நவம்பர் 99 சதவீதம் |
| | | 02. குறைந்த வருமானம் பெறும் முதியோர்கள் (70 வயதிற்கு மேற்பட்ட மற்றும் 100 வயதினை பூர்த்தி செய்த) 0.42 மில்லியன் மற்றும் காத்திருத்தல் பதிவேட்டில் உள்ள 0.24 மில்லியனிற்காக நிதியுதவி வழங்குதல் (அடிப்படை - 2022 ஆகஸ்ட் வரை நிதியுதவி வழங்குதல்) | சமுர்த்தி அபிரிவிருத்தி திணைக்களத்தின் தகவல் முறைமை | நலன்கள் கிடைத்த நபர்களின் எண்ணிக்கை 2022 – செப்தெம்பர் 74 சதவீதம் ஒக்டோபர் 74 சதவீதம் நவம்பர் 75 சதவீதம் |
| | | 03. குறைந்த வருமானம் பெறும் ஊணமுற்றவர்களில் 71,000 பேர்கள் மற்றும் காத்திருத்தல் பதிவேட்டில் 61,000 இற்காக நிதியுதவி வழங்குதல். (அடிப்படை - 2022 ஆகஸ்ட் வரை நிதியுதவி வழங்குதல்) | சமுர்த்தி அபிரிவிருத்தி திணைக்களத்தின் தகவல் முறைமை | நலன்கள் கிடைத்த நபர்களின் எண்ணிக்கை 2022 – செப்தெம்பர் 63 சதவீதம் ஒக்டோபர் 63 சதவீதம் நவம்பர் 63 சதவீதம் |
| | | 04. குறைந்த வருமானம் பெறும் சிறுநீரக | சமுர்த்தி அபிரிவிருத்தி திணைக்களத்தின் | நலன்கள் கிடைத்த நபர்களின் எண்ணிக்கை 2022 – |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நோயாளர்கள் 38,000 மற்றும் காத்திருத்தல் பதிவேட்டில் 5,000 இற்குரிய நிதியுதவி வழங்குதல்) (அடிப்படை - 2022 ஆகஸ்ட் வரை நிதியுதவி செலுத்துதல்) | தகவல் முறைமை | செப்தெம்பர் 92 சதவீதம் ஒக்டோபர் 93 சதவீதம் நவம்பர் 92 சதவீதம் |
| | | 05. கர்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் 300,000 இற்கு நிதியுதவி வழங்குதல் (அடிப்படை – 2019 300,246 தாய்மார்களுக்கு ரூபா 2,000 வீதம் உறுதிச்சீட்டு வழங்குதல்) | சமுர்த்தி அபிரிவிருத்தி திணைக்களத்தின் தகவல் முறைமை | நலன்கள் கிடைத்த நபர்களின் எண்ணிக்கை (04 மாத காலத்தில் தகைமை பெற்ற) 51 சதவீதம் |
| 03. | பாதிப்பிற்குட்பட்ட நபர்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி | ஆகக் குறைந்தது 600,000 உழவர்களுக்கு பெரும்போகம் (2022 செப்தெம்பர் - 2023 மார்ச்) இற்காக பயிர் செய்த அளவிற்கு நிதியுதவி வழங்குதல் | Geo - Giva தரவு முறைமை | நிதியுதவிக்கிற்காக விண்ணப்பித்த விவசாயிகளின் நலன்கள் கிடைத்த விவசாயிகளின் எண்ணிக்கை 88 சதவீதம் (2022 செப்தெம்பர். 2023 யூலை 31 வரை பெரும்போகத்திற்காக மானியம் விண்ணப்பித்த 1,176,655 விவசாயிகள் ஆகும். 2023 யூலை 31 இல் உள்ளவாறு நிதியுதவி வழங்கப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை 10,039,961 ஆகும்.) |

(அ) மேற்கூறப்பட்ட செயற்திட்டத்திற்கு உரிய நிகழ்ச்சித்திட்டங்களின் பெறுபேறுகள் (Out Come) ஆக உணவு பாதுகாப்பு நிலைமை 30 சதவீதத்தினால் குறைத்தல் பெரும்போகத்தில் (2022 செப்தெம்பர், 2023 மார்ச்) வயல் காணிகளில் 80 சதவீதம் பயிர் செய்வதற்கும் 2020 – 2021 ஆம் ஆண்டுகளில் பெரும்போகத்தில் கிடைக்கப் பெற்ற நெல் அறுவடை ஆகக் குறைந்தது 75 சதவீதமாக பெற்றுக்கொள்ளுதல் ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. உணவு பாதுகாப்பு இன்மையை குறைக்கும் செயல் முன்னேற்றம் 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளின் போது இலங்கை அரசாங்கம் அல்லது அபிவிருத்தி தரப்பினரான ஆசிய அபிவிருத்தி வங்கியால் கணிப்பீடு செயயப்படுவதாக காண்பிக்கப்பட்டுள்ளது. பெரும்போகத்தில் (2022 செப்தெம்பர் - 2023 மார்ச்) பயிர் செய்த வயற் காணிகளின் அளவின் தரவுகள் கமநல அபிவிருத்தி

திணைக்களத்தில் Geo-Govia பிரகாரம் தரவு முறைமையின் பிரகாரம் கிடைத்திருந்த போதும் 2021 – 2022 பெரும்போகத்தில் தரவுகள் Geo-Govia தரவு முறைமையில் காணப்படாதமையால் செயல் முன்னேற்றத்தை அளவிட முடியாதிருந்தது. காத்திருத்தல் பட்டியலில் உள்ள நெல் விளைச்சலை பெற்றுக்கொள்ளும் செயற்திட்டத்தை அளவிடுவதற்கு சனத்தொகை மற்றும் செயல் 2022 – 2023 பெரும்போகத்தின் தரவுகளை தரவுகள் வெளியிடப்படாமையினால் செயல் முன்னேற்றத்தை அளவிடுவதற்கு முடியாதுள்ளது.

(ஆ) மேற்கூறப்பட்ட வெளியீடுகளில் (Out Put) செயல் முன்னேற்றத்தை பரீட்சித்த போது செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் செயல் முன்னேற்றம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் 2.49 மில்லியனுக்காக நிதியுதவி வழங்கும் செயல் முன்னேற்றம் திட்டமிடப்பட்ட இலக்குடன் ஒப்பீடு செய்த போது 2022 செப்தெம்பர், ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் 99 சதவீதம் ஆகும். குறைந்த வருமானம் பெறும் முதியோர்கள் 0.66 மில்லியனுக்கு நிதியுதவி வழங்கும் செயல் முன்னேற்றம் 2022 செப்தெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களுக்காக 74 சதவீதமும், 2022 நவம்பர் மாதத்திற்காக 75 சதவீதமும் ஆகும். குறைந்த வருமானம் பெறும் ஊணமுற்றவர்கள் 132,000 இற்காக நிதயுதவி வழங்கும் செயல் முன்னேற்றம் 2022 செப்தெம்பர், ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களுக்காக 63 சதவீதம் ஆகும். குறைந்த வருமானம் பெறும் 43,000 சிறு நீரக நோயாளர்களுக்காக நிதியதவி வழங்கும் செயல் முன்னேற்றம் 2022 செப்தெம்பர் மாதத்தில் 92 சதவீதமும் ஒக்தோபர் மாதத்தில் 93 சதவீதமும் மற்றும் நவம்பர் மாதத்தில் 92 சதவீதமும் ஆகும். கர்பிணிகள் மற்றும் தாய்மார்களுக்காக (நலன்கள் செலுத்திய மாதங்களுக்கு உரித்து கிடைத்த) நிதியுதவி வழங்கும் செயல் முன்னேற்றம் 2023 யூலை மாதத்தில் 51 சதவீதம் ஆகும்.

(இ) மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தின் கீழ் ஆபத்திற்கு உட்பட்ட நபர்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்காக அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டத்திற்காக பெரும்போகத்திற்காக (2022/2023) நெற் பயிர் செய்த விவசாயிகளுக்கு நிதியுதவி வழங்கும் செயல் முன்னேற்றம் செயற்திட்டத்தின் மூலம் நிதியுதவி வழங்குமமானிய விண்ணப்பித்த 1,176,655 விவசாயிகளுடன் ஒப்பிடும் போது 2023 யூலை 31 வரை காண்பிக்கப்பட்ட செயல் முன்னேற்றம் 88 சதவீதம் ஆகும்.

**04. பரிந்துரைகள்**

(அ) 2002 இன் 24 ஆம் இலக்க நலன்புரி நலன் சட்டத்தின் பிரகாரம் 2022 ஒக்டோபர் மாதம் விநியோகிக்கப்பட்ட வர்த்தமாணி அறிவித்தலின் படி சகல வர்த்தமானி நிகழ்ச்சித்திட்டங்களும் நலன்புரி நல ஆணையாளரின் அதிகாரத்தின் பிரகாரம் அமுல்படுத்துதல்.

(அ) சமுர்த்தி வங்கி கணணி முறைமை (CRM system) நவீனமயப்படுத்துவதன் மூலம் நலனாளிகளுக்கு செயற்திறனான சேவையினை வழங்குதல்

(இ) நலனாளிகளுக்கு செயற்திறனான சேவையினை வழங்குவதற்கு உத்தியோகத்தர்களுக்கு திருப்தியாக கடமைகளை நிறைவேற்றுவதற்காக சமுர்த்தி வங்கிகளுக்காக தேவையான மனித மற்றும் பௌதீக வளங்களை வழங்குதல்

(ஈ) இலகுவாக பாதிப்புட்படுகின்ற நபர்கள் (குறைந்த வருமானம் பெறுவோர்கள், முதியோர் மற்றும் ஊணமுற்றோர்கள், நோயாளர்கள் மற்றும் சிறுவர்கள், பெண்கள்) இற்காக நலன்கள் வழங்கும் போது விசேட கவனத்துடன் நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடல் மற்றும் அமுல்படுத்துதல்.

(உ) விவசாயிகள் தொடர்பாக, கமநல அபிவிருத்தி திணைக்களம் பேணிச்செல்கின்ற (Geo Goviya) கணனி முறைமை அளவிடப்பட்ட நிலஅளவை உள்ளடக்குதல், பயிற் செய்கை போகங்களில் விவசாயிகளால் வழங்கப்படுகின்ற தகவல்களின் பிரகாரம் தேவையான திருத்தங்களை விரைவாக மேற்கொள்ளக் கூடிய வகையில் கணனி முறைமையையினை விருத்தி செய்தல்

(ஊ) கொடுப்பனவு தொடர்பான தகவல்கள் மாவட்ட கமநல அபிவிருத்தி ஆணையாளர், பிரதேச உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு தேவையான திகதியில் விரைவாக பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் கணணி முறைமையை நவீன மயப்படுத்துதல்

(எ) விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக அரசாங்க வங்கிகளில் பேணிச் செல்கின்ற கொவிதிரிய வங்கிக் கணக்கை தொடர்ச்சியாக பேணிச்செல்வதற்கு அரசாங்க வங்கியுடன் இணக்கப்பாடொன்றை ஏற்படுத்திக்கொள்ளல் மற்றும் மானியங்களைச் செலுத்துவதற்காக கொவிதிரிய வங்கிக் கணக்கை பயன்படுத்துதல்.

(ஏ) அவசர நலன்களைச் செலுத்தும் போது எழுத்துமூல சுற்றறிக்கை ஆலோசனை நவீன தொழில்நுட்ப திட்டம் மூலம் உரிய உத்தியோகத்தர்களுக்கு காலரீதியில் அனுப்புதல் மற்றும் உரிய நடவடிக்கை எடுத்தல்.

(ஐ) 2030 ஆம் ஆண்டளவில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு தற்போது காணப்படுகின்ற குறைபாடுகள் (Gaps) இனங்கண்டு அதற்குரிய பொறுப்புவாய்ந்த நிறுவனத்தால் நடவடிக்கை எடுத்தல்.

ஒப்பம்./டபிள்யு. பீ. சீ. விக்ரமரத்ன.
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
2024 யூன் 24 ஆந் திகதி

**சமுர்த்தி வங்கியினால் வங்கிகளுக்கு பணம் செலவு வைக்கப்பட்ட மற்றும் உள்ளபடியாக செலுத்தப்பட்ட நலனாளிகள்**

| | மாதம் | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | செப்தெம்பர் | | | | ஒக்டோபர் | | | | நவம்பர் | | | | |
| படிகள் | கொடுப்பனவு செய்வதற்காக சமுர்த்தி திணைக்களத்தால் சமுர்த்தி வங்கிக்கு பணம் செலவு வைக்கப்பட்ட நலனாளிகளின் எண்ணிக்கை | சமுர்த்தி வங்கியினால் நிதி செலுத்தப்பட்ட நலனாளிகளின் எண்ணிக்கை | வேறுபாடு | வேறுபாட்டின் சதவீதம் % | கொடுப்பனவு செய்வதற்காக சமுர்த்தி திணைக்களத்தால் சமுர்த்தி வங்கிக்கு பணம் செலவு வைக்கப்பட்ட நலனாளிகளின் எண்ணிக்கை | சமுர்த்தி வங்கியினால் நிதி செலுத்தப்பட்ட நலனாளிகளின் எண்ணிக்கை | வேறுபாடு | வேறுபாட்டின் சதவீதம் % | கொடுப்பனவு செய்வதற்காக சமுர்த்தி திணைக்களத்தால் சமுர்த்தி வங்கிக்கு பணம் செலவு வைக்கப்பட்ட நலனாளிகளின் எண்ணிக்கை | சமுர்த்தி வங்கியினால் நிதி செலுத்தப்பட்ட நலனாளிகளின் எண்ணிக்கை | வேறுபாடு | வேறுபாட்டின் சதவீதம் % |
| உள்ளபடியான | 415398 | 406983 | 8415 | 2.02 | 416833 | 409451 | 7382 | 1.77 | 418674 | 409612 | (9062) | (2.16) |
| மேலதிக | 243933 | 210909 | 33024 | 13.53 | 235968 | 209968 | 26000 | 11.01 | 237674 | 210531 | (27143) | (11.42) |
| காத்திருத்தல் பதிவேட்டில் உள்ள | 115037 | 83491 | 31546 | 27.42 | 115018 | 83555 | 31463 | 27.35 | 115753 | 83154 | (32599) | (28.16) |

மூலம்: சமுர்த்தி அபபிவிருத்தி திணைக்களம்*(All island summary for elderly payment)*

**இணைப்பு 02**

## முதியோர் உள்ளபடியான மேலதிக மற்றும் காத்திருத்தல் படிகளை செலுத்துதல் (70 வயதிற்கு மேல்)

| மாதம் | உள்ளபடியான படி செலுத்துதல் | | | | மேலதிக படி செலுத்துதல் | | | | காத்திருத்தல் படி செலுத்துதல் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கொடுப்பனவு செய்வதற்காக சமுர்த்தி திணைக்களத்தால் சமுர்த்தி வங்கிக்கு பணம் செலவு வைக்கப்பட்ட பணம் (ரூபா) | சமுர்த்தி வங்கியழனால் செலுத்தப்பபட்ட பணம் (ரூபா) | வேறுபாடு (ரூபா) | வேறுபாட்டின் சதவீதம் % | கொடுப்பனவு செய்வதற்காக சமுர்த்தி திணைக்களத்தால் சமுர்த்தி வங்கிக்கு பணம் செலவு வைக்கப்பட்ட பணம் (ரூபா) | சமுர்த்தி வங்கியழனால் செலுத்தப்பபட்ட பணம் (ரூபா) | வேறுபாடு (ரூபா) | வேறுபாட்டின் சதவீதம் % | கொடுப்பனவு செய்வதற்காக சமுர்த்தி திணைக்களத்தால் சமுர்த்தி வங்கிக்கு பணம் செலவு வைக்கப்பட்ட பணம் (ரூபா) | சமுர்த்தி வங்கியழனால் செலுத்தப்பபட்ட பணம் (ரூபா) | வேறுபாடு (ரூபா) | வேறுபாட்டின் சதவீதம் % |
| செப்தெம்பர் | 789256200 | 773267700 | 15988300 | 2.02 | 731799000 | 632727000 | 99072000 | 13.53 | 575185000 | 417455000 | 157730000 | 27.42 |
| ஒக்டோபர் | 791982700 | 777956900 | 14025800 | 1.77 | 707904000 | 629904000 | 78000000 | 11.01 | 575090000 | 417775000 | 157315000 | 27.35 |
| நவம்பர் | 795480600 | 778262800 | 17217800 | 2.16 | 713023500 | 631593000 | 81430500 | 11.42 | 578709200 | 415770000 | 162939200 | 28.15 |

மூலம்: சமுர்த்தி அபபிவிருத்தி திணைக்களம்*(All island summary for elderly payment)*

**இணைப்பு 03**

## நலனாளி பணத்தை பெற்றுக்கொள்ளாமைக்கான காரணம்

| பிரதேச செயலகம் | நலனாளிகளின் தொகுதி | மாதம் | நலன்கள் கோரப்பட்ட எண்ணிக்கை | சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திலிருந்து பணம் கிடைத்த நலனாளிகளின் எண்ணிக்கை | படிகளை பெற்றுக் கொள்ளாத நலனாளிகளின் எண்ணிக்கை | பணத்தை பெற்றுக்கொள்ளாமைக்கான காரணம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | இருமை | வங்கிக் கணக்கு இன்மை | ஏனையவை * | இருமையின் சதவீதம் | கணக்குகள் திறக்கப்படாத சதவீதம் |
| கல்கமுவ | உள்ளபடியான | செப்தெம்பர் | 1265 | 1265 | 11 | 11 | - | | | |
| | | ஒக்டோபர் | 1265 | 1265 | 11 | 1 | - | | | |
| | | நவம்பர் | 1265 | 1265 | 11 | 1 | - | | | |
| | மேலதிக படி | செப்தெம்பர் | 456 | 456 | 44 | 44 | - | | 9.6 | |
| | | ஒக்டோபர் | 456 | 456 | 49 | 49 | - | | 11 | |
| | | நவம்பர் | 456 | 456 | 47 | 47 | - | | 10 | |
| | காத்திருத்தல் | செப்தெம்பர் | 271 | 271 | 44 | 48 | - | | 18 | |
| | | ஒக்டோபர் | 271 | 271 | 49 | 38 | - | | 14 | |
| | | நவம்பர் | 271 | 271 | 47 | 42 | - | | 15 | |
| நொச்சியாகமம் | உள்ளபடியான | செப்தெம்பர் | 756 | 756 | 4 | - | 4 | | | |
| | | ஒக்டோபர் | 756 | 756 | 4 | - | 4 | | | |
| | | நவம்பர் | 756 | 756 | 3 | - | 3 | | | |
| | மேலதிக படி | செப்தெம்பர் | 494 | 494 | 21 | 21 | | | 4.2 | |
| | | ஒக்டோபர் | 494 | 494 | 22 | 20 | 2 | | 4.4 | |
| | | நவம்பர் | 494 | 494 | 22 | 20 | | | 4.4 | |
| | காத்திருத்தல் | செப்தெம்பர் | 414 | 414 | 76 | - | 66 | | | 16 |
| | | ஒக்டோபர் | 414 | 414 | 75 | - | 65 | | | 16 |
| | | நவம்பர் | 439 | 439 | 75 | - | 65 | | | 15 |
| அம்பலாந்தோட்டை | உள்ளபடியான | செப்தெம்பர் | 1125 | 1125 | 17 | - | - | | | |
| | | ஒக்டோபர் | 1129 | 1129 | 29 | - | - | | | |
| | | நவம்பர் | 1127 | 1127 | 18 | - | - | | | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மேலதிக படி | செப்தெம்பர் | 712 | 712 | 45 | 45 | - | | 6.3 | |
| | | ஒக்டோபர் | 712 | 712 | 62 | 62 | - | | 8.7 | |
| | | நவம்பர் | 712 | 712 | 53 | 53 | - | | 7.4 | |
| | காத்திருத் தல் | செப்தெம்பர் | 276 | 276 | 6 | - | - | | | |
| | | ஒக்டோபர் | 276 | 276 | 8 | - | - | | | |
| | | நவம்பர் | 276 | 276 | 12 | - | - | | | |
| பளுகஸ்வெவ | உள்ளபடி யான | செப்தெம்பர் | 426 | 426 | - | - | - | | | |
| | | ஒக்டோபர் | 426 | 426 | - | - | - | | | |
| | | நவம்பர் | 426 | 426 | 1 | - | - | | | |
| | மேலதிக படி | செப்தெம்பர் | 233 | 233 | 78 | 76 | - | | 33 | |
| | | ஒக்டோபர் | 233 | 233 | 77 | 76 | - | | 33 | |
| | | நவம்பர் | 233 | 233 | 77 | 75 | - | | 33 | |
| | காத்திருத் தல் | செப்தெம்பர் | 7 | - | - | - | - | | | |
| | | ஒக்டோபர் | 7 | - | - | - | - | | | |
| | | நவம்பர் | 13 | 13 | - | - | - | | | |
| மன்முனை (வடக்கு) | உள்ளபடி யான | செப்தெம்பர் | 1597 | 1597 | 7 | - | - | | | |
| | | ஒக்டோபர் | 1597 | 1597 | 12 | - | - | | | |
| | | நவம்பர் | 1597 | 1597 | 8 | - | - | | | |
| | மேலதிக படி | செப்தெம்பர் | 673 | 673 | 9 | - | - | | | |
| | | ஒக்டோபர் | 673 | 673 | 22 | - | - | | | |
| | | நவம்பர் | 673 | 673 | 17 | - | - | | | |
| | காத்திருத் தல் | செப்தெம்பர் | 99 | | 14 | - | - | | | |
| | | ஒக்டோபர் | 100 | Fill | 18 | - | - | | | |
| | | நவம்பர் | 100 | | 19 | - | - | | | |
| மன்முனை (மேற்கு) | உள்ளபடி யான | செப்தெம்பர் | 791 | 791 | 7 | - | - | | | |
| | | ஒக்டோபர் | 791 | 791 | 10 | - | - | | | |
| | | நவம்பர் | 790 | 790 | 8 | - | - | | | |
| | மேலதிக படி | செப்தெம்பர் | 153 | 153 | 10 | - | - | | | |
| | | ஒக்டோபர் | 153 | 153 | 11 | - | - | | | |
| | | நவம்பர் | 153 | 153 | 11 | - | - | | | |
| | காத்திருத் | - | - | - | - | - | - | | - | - |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தல் | | | | | | | | | |
| தனமல்வில | உள்ளபடி யான | செப்தெம்பர் | 678 | 678 | | | | | | |
| | | ஒக்டோபர் | 678 | 678 | | | | | | |
| | | நவம்பர் | 678 | 678 | | | | | | |
| | மேலதிக படி | செப்தெம்பர் | 319 | 319 | | | | | | |
| | | ஒக்டோபர் | 319 | 319 | | | | | | |
| | | நவம்பர் | 319 | 319 | | | | | | |
| | காத்திருத் தல் | செப்தெம்பர் | 130 | 129 | | | | 11 | | |
| | | ஒக்டோபர் | 130 | 129 | | | | 11 | | |
| | | நவம்பர் | 130 | 129 | | | | 11 | | |
| இம்பாகமுவ | உள்ளபடி யான | செப்தெம்பர் | 1374 | 1374 | - | - | - | | - | |
| | | ஒக்டோபர் | 1377 | 1377 | - | - | - | | - | |
| | | நவம்பர் | 1377 | 1377 | - | - | - | | - | |
| | மேலதிக படி | செப்தெம்பர் | 539 | 539 | 14 | 14 | - | | 2.5 | |
| | | ஒக்டோபர் | 539 | 539 | 13 | 13 | - | | 2.4 | |
| | | நவம்பர் | 539 | 539 | 13 | 13 | - | | 2.4 | |
| | காத்திருத் தல் | செப்தெம்பர் | 553 | 553 | 75 | 69 | - | | 12 | |
| | | ஒக்டோபர் | 553 | 553 | 76 | 69 | - | | 12 | |
| | | நவம்பர் | 553 | 553 | 77 | 69 | - | | 12 | |
| கதிர்காமம் | உள்ளபடி யான | செப்தெம்பர் | 375 | 375 | - | - | - | | - | |
| | | ஒக்டோபர் | 375 | 375 | - | - | - | | - | |
| | | நவம்பர் | 375 | 375 | - | - | - | | - | |
| | மேலதிக படி | செப்தெம்பர் | 219 | 219 | 32 | 32 | - | | 15 | |
| | | ஒக்டோபர் | 219 | 219 | 24 | 24 | - | | 11 | |
| | | நவம்பர் | 219 | 219 | 24 | 24 | - | | 11 | |
| | காத்திருத் தல் | செப்தெம்பர் | 44 | 44 | - | - | - | | - | |
| | | ஒக்டோபர் | 44 | 44 | - | - | - | | - | |
| | | நவம்பர் | 44 | 44 | - | - | - | | - | |
| * மரணமடைந்தமை, குடியிருப்புக்கள் மாற்றம் அடைந்தமை தகமை பெற்ற ஒருவராக இல்லாமை | | | | | | | | | | |

**இணைப்பு 04**

**முதியோர் நலனாளிகளின் கணக்குகளுக்கு செலவு வைத்தல் தாமதமடைந்தமை தொடர்பான விபரம்**

| **சமுர்த்தி வங்கி** | **மாதம்** | **படிகளின் வகை** | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | **உள்ளபடியான** | | | **உள்ளபடியான** | | | **உள்ளபடியான** | | |
| | | **நடைமுறை கணக்கிற்கு பணம் கிடைத்த திகதி** | **படிகளை செலுத்துவதற்காக மாதத்தில் கணக்குகளில் வரவு வைக்கப்பட்ட திகதி** | **தாமத காலம் (நாள்)** | **நடைமுறை கணக்கிற்கு பணம் கிடைத்த திகதி** | **படிகளை செலுத்துவதற்காக மாதத்தில் கணக்குகளில் வரவு வைக்கப்பட்ட திகதி** | **தாமத காலம் (நாள்)** | **நடைமுறை கணக்கிற்கு பணம் கிடைத்த திகதி** | **படிகளை செலுத்துவதற்காக மாதத்தில் கணக்குகளில் வரவு வைக்கப்பட்ட திகதி** | **தாமத காலம் (நாள்)** |
| கதிர்காமம் | செப்தெம்பர் | 2022.10.11<br>2022.11.17 | 2022.10.23<br>2022.11.28 | 12<br>11 | 2022.10.17<br>2022.10.17 | 2022.10.23<br>2022.11.12<br>2022.11.28 | 06<br>25<br>41 | 2022.10.18 | 2022.11.06 | 19 |
| | ஒக்டோபர் | 2022.11.18 | 2022.11.29 | 10 | 2022.11.28 | 2022.12.04<br>2022.12.15 | 06<br>17 | 2022.11.23 | 2022.12.04 | 11 |
| | நவம்பர் | 2022.12.16 | 2022.12.21 | 05 | 2022.12.16 | 2022.12.22 | 06 | 2022.12.16 | 2022.12.22 | 06 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நோனாகம | செப்தெம்பர் | 2022.10.11 | 2022.10.15 | 04 | 2022.10.17 | 2022.10.20 | 03 | 2022.10.18 | 2022.10.20 | 02 |
| | ஒக்டோபர் | 2022.11.20 | 2022.11.21 | - | 2022.11.30 | 2022.11.30 | - | 2022.12.02 | 2022.12.02 | - |
| | நவம்பர் | 2022.12.19 | 2022.12.19 | - | 2022.12.19 | 2022.12.19 | - | 2022.12.19 | 2022.12.19 | |
| புளியந்தீவு | செப்தெம்பர் | 2022.10.12 | 2022.10.15 | 03 | 2022.10.20 | 2022.11.08 | 19 | 2022.10.20 | | |
| | ஒக்டோபர் | 2022.10.19 | ප්‍රමාදයන් නැත | - | 2022.11.30 | 2022.12.22 | 22 | | | |
| | நவம்பர் | 2022.12.17 | 2022.12.22 | 05 | 2022.12.17 | 2022.12.22 | 05 | | | |
| புதுமண்டபத்தடி | செப்தெம்பர் | 2022.10.12 | 2022.10.18 | 06 | 2022.10.18 | 2022.10.29 | 11 | 2022.10.12 | 2022.11.04 | 23 |
| | ஒக்டோபர் | 2022.11.18 | 2022.11.19 | 01 | 2022.11.28 | 2022.12.10 | 12 | 2022.11.23 | 2022.11.26 | 03 |
| | நவம்பர் | 2022.12.16 | 2022.12.29 | 13 | 2022.12.16 | 2022.12.20 | 04 | 2022.12.16 | 2022.12.29 | 13 |
| இப்பாகமுவ | செப்தெம்பர் | 2022.10.11 | 2022.10.18 | 07 | 2022.10.17 | 2022.11.22 | 35 | 2022.10.18 | 2022.11.11 | 24 |
| | ஒக்டோபர் | 2022.11.17 | 2022.11.22 | 05 | 2022.11.28 | 2022.12.21 | 23 | 2022.11.22 | 2022.12.14 | 22 |
| | நவம்பர் | 2022.12.16 | 2022.12.22 | 06 | 2022.12.16 | 2023.02.14 | 60 | 2022.12.16 | 2022.12.22 | 06 |
| தனமல்வில | செப்தெம்பர் | 2022.10.11<br>2022.11.17 | 2022.10.27 | 16<br>- | 2022.10.07<br>- | 2022.11.21<br>- | 44<br>- | - | - | - |
| | ஒக்டோபர் | 2022.11.18 | 2022.11.30 | 12 | 2022.11.28 | 2022.12.16 | 18 | 2022.11.28 | தகவல்கள் தெளிவில்லை. | |
| | நவம்பர் | 2022.12.16 | 2022.12.27 | 11 | 2022.12.16 | 2022.12.27 | 11 | 2022.12.16 | 2022.12.19 | 03 |

**இணைப்பு 05**

**2022.12.31 ஆந் திகதி வரையில் நலன்கள் கோரியிருந்த போதும் 2023 .06.30 ஆந் திகதி வரையில் பணம் கிடைக்காமையின் காரணமாக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட நலனாளிகள் தொடர்பான தகவல்கள்**

| தொடர் இலக்கம | மாவட்டம் | பிரதேச செயலகம் | நலனாளிகளின் எண்ணிக்கை | தேவையான நிதியேற்பாட்டின் அளவு | காரணம் / ஏனையவை |
|---|---|---|---|---|---|
| 1 | புத்தளம் | சிலாபம் | 5 | 50,000.00 | நிதி போதியளவில் இல்லாமை |
| 2 | காலி | கரந்தெனிய | 2 | 20,000.00 | நிதி போதியளவில் இல்லாமை |
| 3 | காலி | ரத்கம | 1 | 10,000.00 | நிதி போதியளவில் இல்லாமை |
| 4 | காலி | மாதம்பாகம | 1 | 10,000.00 | நிதி போதியளவில் இல்லாமை |
| 5 | காலி | நாகொட | 5 | 50,000.00 | நிதி போதியளவில் இல்லாமை |
| 6 | அம்பாந்தோட்டை | அம்பாலாந்தொட்ட | 1 | 10,000.00 | நிதி போதியளவில் இல்லாமை |
| 7 | மொனராகலை | பிபில | 1 | 10,000.00 | நிதி போதியளவில் இல்லாமை |
| 8 | குருநாகல் | மாவத்தகம | 1 | 10,000.00 | நிதி போதியளவில் இல்லாமை |
| 9 | கம்பஹா | மீரிகம | 4 | 40,000.00 | நிதி போதியளவில் இல்லாமை |
| 10 | கம்பஹா | பொல்கஹவல | 4 | 40,000.00 | நிதி போதியளவில் இல்லாமை |
| 11 | கம்பஹா | பியகம | 5 | 50,000.00 | நிதி போதியளவில் இல்லாமை |
| 12 | மாத்தறை | பஸ்கொட | 3 | 30,000.00 | நிதி போதியளவில் இல்லாமை |
| 13 | பொலன்னறுவை | வேலிகந்த | 12 | 120,000.00 | நிதி போதியளவில் இல்லாமை |
| 14 | திருகோணமலை | மூதூர் | 92 | 920,000.00 | நிதி போதியளவில் இல்லாமை |
| 15 | இரத்தினபுரி | ஏலபொத்த | 8 | 80,000.00 | நிதி போதியளவில் இல்லாமை |
| 16 | அநுராதபுரம் | இராஜாங்கனை ட | 5 | 50,000.00 | நிதி போதியளவில் இல்லாமை |
| 17 | அநுராதபுரம் | றம்பேவ | 2 | 20,000.00 | நிதி போதியளவில் இல்லாமை |
| 18 | அநுராதபுரம் | மனுப்ப | 27 | 270,000.00 | நிதி போதியளவில் இல்லாமை |
| 19 | அநுராதபுரம் | தலாவ | 17 | 170,000.00 | நிதி போதியளவில் இல்லாமை |
| 20 | அநுராதபுரம் | ஹோறவப்பொத்தான | 155 | 1,550,000.00 | நிதி போதியளவில் இல்லாமை |
| 21 | நுவரெலியா | நுவரெலியா | 29 | 290,000.00 | நிதி போதியளவில் இல்லாமை |
| 22 | காலி | பலப்பிட்டிய | 5 | 50,000.00 | நிதி போதியளவில் இல்லாமை |
| 23 | பொலன்னறுவை | மெதிரிகிரிய | 7 | 70,000.00 | நிதி போதியளவில் இல்லாமை |
| மொத்தம் | | | 392 | 3,920,000.00 | |

மூலம்: ஆரம்ப சிறுவர் அபிவிருத்தி தொடர்பான தேசிய செயலகம்

**இணைப்பு 06**

**2022.12.31 ஆந் திகதி வரையில் நலனாளிகளால் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்ட போதும் பிரதேச செயலகங்களின் தவறின் குறித்துரைத்த திகதியின் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட நலனாளிகள் தொடர்பான விபரம்**

| தொடர் இலக்கம் | மாவட்டம் | பிரதேச செயலகம் | நலன்கள் உரித்தற்றிருந்த நலனாளிகளின் எண்ணிக்கை | தேவையான நிதியேற்பாட்டின் அளவு | காரணம் / ஏனையவை |
|---|---|---|---|---|---|
| 1 | களுத்துறை | அகலவத்தை | 10 | 100,000.00 | தவறினால் |
| 2 | குருணாகல் | றிதிகம | 1 | 10,000.00 | தவறினால் |
| 3 | குருணாகல் | றிதிகம | 8 | 80,000.00 | வங்கி மாற்றப்பட்டமை |
| 4 | மன்னார் | மாந்தை - மேற்கு | 33 | 330,000.00 | தவறினால் |
| 5 | கம்பஹா | நீர்கொழும்பு | 24 | 240,000.00 | தவறினால் |
| 6 | அம்பாறை | தமன | 43 | 430,000.00 | தவறினால் |
| 7 | கேகாலை | அரநாயக்க | 2 | 20,000.00 | தவறினால் |
| 8 | கண்டி | ஹரிஸ்பத்துவ | 8 | 80,000.00 | தவறினால் |
| 9 | குருணாகல் | பன்டுவஸ்நுவர மேற்கு | 30 | 300,000.00 | தவறினால் |
| 10 | வவுனியா | வவுனியா | 23 | 230,000.00 | தவறினால் |
| 11 | அநுராதபுரம் | கலன்பிந்துனுவெவ | 3 | 30,000.00 | தவறினால் |
| 12 | கேகாலை | றம்புக்கன | 1 | 10,000.00 | தவறினால் |
| 13 | அம்பாந்தோட்டை | வலஸ்முல்ல | 2 | 20,000.00 | தவறினால் |
| 14 | அம்பாறை | அட்டாலைச்சேனை | 8 | 80,000.00 | தவறினால் |
| 15 | வவுனியா | வவுனியா தெற்கு | 1 | 10,000.00 | தவறினால் |
| 16 | களுத்துறை | ஹொரணை | 7 | 70,000.00 | தவறினால் |
| 17 | மாத்தறை | கடவத்சத்தர | 2 | 20,000.00 | வங்கி மாற்றப்பட்டமை |
| 18 | அநுராதபுரம் | கெக்கிராவ | 1 | 10,000.00 | வங்கி மாற்றப்பட்டமை |
| 19 | மாத்தறை | கடவத்சத்தர | 3 | 30,000.00 | வங்கி மாற்றப்பட்டமை |
| 20 | மொனராகல் | பிபில | 2 | 20,000.00 | வங்கி மாற்றப்பட்டமை |
| 21 | குருணாகல் | றிதிகம | 4 | 40,000.00 | வங்கி மாற்றப்பட்டமை |
| 22 | காலி | பெந்தர | 1 | 10,000.00 | வங்கி மாற்றப்பட்டமை |
| 23 | மாத்தறை | கடவத்சத்தர | 1 | 10,000.00 | வங்கி மாற்றப்பட்டமை |
| 24 | குருணாகல் | நிக்கவெரட்டி | 4 | 40,000.00 | வங்கி மாற்றப்பட்டமை |
| 25 | குருணாகல் | இம்பாகமுவ | 1 | 10,000.00 | வங்கி மாற்றப்பட்டமை |
| 26 | மாத்தறை | கடவத்சத்தர | 2 | 20,000.00 | வங்கி மாற்றப்பட்டமை |
| 27 | காலி | யக்கலமுல்ல | 6 | 60,000.00 | வங்கி மாற்றப்பட்டமை |
| 28 | அம்பாந்தோட்டை | வீரகட்டிய | 1 | 10,000.00 | தவறினால் |
| 29 | குருணாகல் | பமுணாகொட்டுவ | 3 | 30,000.00 | வங்கி மாற்றப்பட்டமை |
| 30 | குருணாகல் | பொல்பித்திகம | 6 | 60,000.00 | வங்கி மாற்றப்பட்டமை |
| 31 | பொலன்னறுவை | திம்புலாகல | 17 | 170,000.00 | தவறினால் |
| 32 | குருணாகல் | வீரம்பு கெதர | 2 | 20,000.00 | வங்கி மாற்றப்பட்டமை |
| 33 | கொழும்பு | கொழும்பு | 37 | 370,000.00 | தவறினால் |
| 34 | களுத்துறை | மத்துகம | 1 | 10,000.00 | வங்கி மாற்றப்பட்டமை |
| 35 | குருணாகல் | குளியாப்பிட்டி கிழக்கு | 1 | 10,000.00 | வங்கி மாற்றப்பட்டமை |
| மொத்தம் | | | 299 | 2,990,000.00 | |

மூலம்: முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி தொடர்பான செயலகம்

**இணைப்பு 07**

**2022.12.31 ஆந் திகதி வரையில் நலன்கள் விண்ணப்பிக்காத / குறித்துரைத்த கால எல்லையில் அனுப்பட்ட குறித்துரைத்த நலனாளிகள் தொடர்பான விபரம்**

| தொடர் இலக்கம் | மாவட்டம் | பிரதேச செயலகம் | நலனாளிகளின் எண்ணிக்கை | தேவையான நிதியேற்பாட்டின் அளவு | |
|---|---|---|---|---|---|
| 1 | வவுனியா | வவுனியா தெற்கு | 1 | 10,000.00 | புதிய |
| 2 | யாழ்ப்பாணம் | உடுவில் | 77 | 770,000.00 | புதிய |
| 3 | யாழ்ப்பாணம் | கரவெட்டி | 27 | 270,000.00 | புதிய |
| 4 | பதுளை | பதுளை | 1 | 10,000.00 | புதிய |
| 5 | அம்பாந்தோட்டை | வலஸ்முல்ல | 1 | 10,000.00 | புதிய |
| 6 | இரத்தினபுரி | எலபாத்த | 1 | 10,000.00 | புதிய |
| 7 | நுவரெலியா | தலவாக்கலை | 1 | 10,000.00 | புதிய |
| மொத்தம் | | | 109 | 1,090,000.00 | புதிய |

மூலம்: முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி தொடர்பான செயலகம்

**இணைப்பு 08**

**2023 மே 25 ஆந் திகதி வரையில் மானியக்கொடுப்பனவுகள் நிராகரிக்கப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை**

| தொடர் இலக்கம் | மாவட்டம் | ரூபா 4099 இற்கு குறைவு | | ரூபா 5000 | | ரூபா 5001-9999 | | ரூபா 10000 | | ரூபா 10001-19999 | | ரூபா 20000 | | மொத்த கூட்டுத்தொகை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | **விவசாயிகளின் எண்ணிக்கை** | **பெறுமதி** | **விவசாயிகளின் எண்ணிக்கை** | **பெறுமதி** | **விவசாயிகளின் எண்ணிக்கை** | **பெறுமதி** | **விவசாயிகளின் எண்ணிக்கை** | **பெறுமதி** | **விவசாயிகளின் எண்ணிக்கை** | **பெறுமதி** | **விவசாயிகளின் எண்ணிக்கை** | **பெறுமதி** | **விவசாயிகளின் எண்ணிக்கை** | **பெறுமதி** |
| 1 | அம்பாறை | 496 | 1737917 | 30 | 150000 | 739 | 5389072 | 194 | 1940000 | 579 | 7847676 | 151 | 3,020,000 | 2189 | 20084665 |
| 2 | அநுராதபுரம் | 1129 | 3661000 | 53 | 265000 | 622 | 4532000 | 212 | 2120000 | 289 | 3878000 | 171 | 3,420,000 | 2476 | 17876000 |
| 3 | பதுளை | 1330 | 2989000 | 23 | 115000 | 288 | 2058600 | 77 | 770000 | 61 | 808000 | 19 | 380,000 | 1798 | 7120600 |
| 4 | மட்டக்களப்பு | 70 | 261000 | 7 | 35000 | 262 | 2029000 | 66 | 660000 | 377 | 5034000 | 225 | 4,500,000 | 1007 | 12519000 |
| 5 | கொழும்பு | 526 | 1338380 | 18 | 90000 | 85 | 584870 | 7 | 70000 | 18 | 234280 | 3 | 60,000 | 657 | 2377530 |
| 6 | காலி | 626 | 1621350 | 25 | 125000 | 132 | 881800 | 9 | 90000 | 11 | 147000 | 2 | 40,000 | 805 | 2905150 |
| 7 | கம்பஹா | 1229 | 2760609 | 34 | 170000 | 161 | 1106053 | 12 | 120000 | 40 | 537030 | 3 | 60,000 | 1479 | 4753692 |
| 8 | அம்பாந்தோட்டை | 366 | 1048775 | 20 | 100000 | 225 | 1625400 | 121 | 1210000 | 69 | 953250 | 24 | 480,000 | 825 | 5417425 |
| 9 | யாழ்ப்பாணம் | 32 | 107000 | 9 | 45000 | 35 | 249301 | 3 | 30000 | 25 | 342500 | 10 | 200,000 | 114 | 973801 |
| 10 | களுத்துறை | 1342 | 3657460 | 69 | 345000 | 241 | 1641380 | 44 | 440000 | 33 | 447100 | 3 | 60,000 | 1732 | 6590940 |
| 11 | கண்டி | 770 | 1669320 | 13 | 65000 | 54 | 365000 | 7 | 70000 | 11 | 142000 | 0 | 0 | 855 | 2311320 |

| | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12 | கேகாலை | 1204 | 2434740 | 33 | 165000 | 86 | 573274 | 4 | 40000 | 2 | 26950 | 0 | 0 | 1329 | 3239964 |
| 13 | கிளிநொச்சி | 41 | 149000 | 4 | 20000 | 74 | 547000 | 10 | 100000 | 145 | 2082000 | 193 | 3,860,000 | 467 | 6758000 |
| 14 | குருநாகல் | 4273 | 10581000 | 169 | 845000 | 875 | 6140500 | 154 | 1540000 | 228 | 3036500 | 55 | 1,100,000 | 5754 | 23243000 |
| 15 | மன்னார் | 28 | 100000 | 4 | 20000 | 92 | 672000 | 12 | 120000 | 108 | 1553000 | 111 | 2,220,000 | 355 | 4685000 |
| 16 | மாத்தளை | 586 | 1549400 | 13 | 65000 | 218 | 1522400 | 17 | 170000 | 46 | 608800 | 9 | 180,000 | 889 | 4095600 |
| 17 | மாத்தறை | 818 | 2018440 | 21 | 105000 | 128 | 851810 | 8 | 80000 | 32 | 422065 | 2 | 40,000 | 1009 | 3517315 |
| 18 | மொனராகலை | 270 | 904500 | 30 | 150000 | 591 | 4452900 | 41 | 410000 | 109 | 1459500 | 15 | 300,000 | 1056 | 7676900 |
| 19 | முல்லைத்தீவு | 12 | 38000 | 0 | 0 | 42 | 309000 | 10 | 100000 | 74 | 960000 | 52 | 1,040,000 | 190 | 2447000 |
| 20 | நுவரெலியா | 631 | 1579450 | 29 | 145000 | 103 | 700100 | 6 | 60000 | 12 | 156500 | 2 | 40,000 | 783 | 2681050 |
| 21 | போலன்னறுவை | 241 | 819000 | 5 | 25000 | 311 | 2209000 | 405 | 4050000 | 206 | 2794000 | 157 | 3,140,000 | 1325 | 13037000 |
| 22 | புத்தளம் | 487 | 1542900 | 17 | 85000 | 267 | 1918390 | 56 | 560000 | 73 | 1005500 | 37 | 740,000 | 937 | 5851790 |
| 23 | இரத்தினபுரி | 1151 | 3039370 | 46 | 230000 | 215 | 1484700 | 28 | 280000 | 39 | 500700 | 0 | 0 | 1479 | 5534770 |
| 24 | திருகோணமலை | 86 | 311000 | 40 | 200000 | 558 | 4227000 | 40 | 400000 | 325 | 4416000 | 103 | 2,060,000 | 1152 | 11614000 |
| 25 | வவுனியா | 74 | 227740 | 16 | 80000 | 75 | 566640 | 13 | 130000 | 97 | 1374000 | 71 | 1,420,000 | 346 | 3798380 |
| | மொத்தம் | **17818** | **46146351** | **728** | **3640000** | **6479** | **46637190** | **1556** | **15560000** | **3009** | **40766351** | **1418** | **28,360,000** | **31008** | **181109892** |

**இணைப்பு 09**

| ஆசிய அபிவிருத்தி வங்கி செயற்திட்டத்திற்குரிய அபிவிருத்தி நோக்கம் மற்றும் இலக்குகள் | | நிலைபேறான அபிவிருத்தி சபையின் தரவுகள் முறைமையில் காட்சிப்படுத்தப்பட்ட நோக்கங்கள், இலக்குகள் மற்றும் செயல் முன்னேற்றம் 2023 யூலை 05 ஆந் திகதியில் உள்ளவாறு | | | | |
|---|---|---|---|---|---|---|
| நோக்கம் | விபரம் | நோக்கம் | இலக்குகள் | குறிகாட்டிகள் | விபரம் | செயல்முன்னேற்றம் |
| 01. | சகல இடங்களிலும் காணப்படுகின்ற ஒவ்வொரு முறைமையிலும் வருமையாக இருப்பதை முடிவுறுத்துதல் | 1 | 1 | 1 | சர்வதேச வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள சனத்தொகையின் சதவீதம் | 2016 – 0.83% |
| | | 1 | 2 | 1 | தேசிய வறுமைக் கோட்டின் கீழ் உள்ள சனத்தொகையின் சதவீதம் | 2019 – 14.31% |
| | | 1 | 3 | 1 | சமூக பாதுகாப்பு நலன்களை மேவுகை செய்கின்ற சனத்தொகையின் சதவீதம் | 2016 – 52.9% |
| | | 1 | a | 1 | வறுமையினை குறைப்பதற்காக சட்டரீதியான அபிவிருத்தி நிதியுதவி பெறுவனவுகள் | 2020 - 0.04 ((மொத்த தேசிய வருமானத்தின் சதவீதம் ஆக) |
| | | 1 | b | 1 | வறுமையில் உள்ள மக்களின் சமூக செலவினம் | தரவுகள் இல்லை |
| 02. | வறுமையை இல்லாதொழித்து உணவு பாதுகாப்பு மற்றும் நல்ல போசனை நிலைமைக்காக நிலை பேறான விவசாயத்தை மேம்படுத்துதல் | 02 | 01 | 02 | உணவு பாதுகாப்பு இன்றிய சனத்தொகையின் அளவு | 2019 - 9.1 |
| | நிலைபேறான நுகர்வு மற்றும் உற்பத்திச் சுற்றொன்றை உறுதிப்படுத்துதல் | 12 | 01 | 01 | நிலை பேறான நுகர்வு மற்றும் உற்பததிக்கான கொள்கை வழங்கல் | தரவுகள் இல்லை |
| | | 12 | 03 | 01 | ஒரு நபரின் உணவு வீணாகிச் செல்வதை குறைத்தல் மற்றும் விளைச்சலில் இழப்பீட்டை உள்ளடக்கிய உற்பத்தி மற்றும் வழங்கலில் உள்ள கஸ்டங்களை குறைத்தல் | தரவுகள் இல்லை |